

# ஞானச்சுடர்

ஐப்பசி

2011



முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# குறள்வழி



**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

**பொருள் :** அன்பு கலந்து பொய்யில்லாத அறத்தினை அறிந்தவர் சொல்லும் சொற்களே இனிய சொற்கள் [91]

**அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்[து]**
**இன்சொலன் ஆகப் பெறின்.**

**பொருள் :** மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதைக் காட்டிலும், முகம் மலர்ந்து இன் சொற்களைச் சொல்லுதல் சிறந்தது. [92]

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### தங்கமே எல்லாஞ் சிவ மயமே

**நட்டார் ஒருவரில்லா நாதாந்த மேடையேறிச்**
**சிட்டாய சிட்டனுக்கே - தங்கமே**
**திருவிருந் தானேனடி** 05


**பட்டால்பா வாடைசெய்து பதிபசு பாசமென்னும்**
**மொட்டாக்கைப் போட்டுக்கொண்டேன் - தங்கமே**
**முழுவதும் உண்மையடி** 06

**இட்டார் இடாரென்னும் இகழ்புகழைத் தள்ளிவிட்டு**
**முட்டாத பூசைசெய்தேன் - தங்கமே**
**மூன்றுமொன் றாச்சுதடி** 07

**எட்டாத பேரின்பம் என்னைவி ழுங்கிற்றடி**
**கிட்டாது முட்டாதடி - தங்கமே**
**கேட்டு மகிழ்ந்திரடி** 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஞானச்சுடர்



வெளியீடு 2 சுடர்- 166

2011 ஐப்பசி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வினை கடிந்து.... | பு. கதிரித்தம்பி | 01 - 02 |
| வித்தகா உன்..... | திருமதி பா. சிவனேஸ்வரி | 03 - 05 |
| கல்வியின் நோக்கம் | செ. ஜெயமோகன் | 06 - 09 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 10 - 12 |
| பசுவை வளர்ப்போம்... | செ. கந்தசத்தியதாசன் | 13 - 14 |
| கீர்த்தித் திருவகவல் | க. அருளம்பலவனார் | 15 - 16 |
| தெய்வப்புலவரும்.... | நா. நல்லதம்பி | 17 - 18 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 19 - 21 |
| வெற்றி கதவைத் தட்டும் | ஜக்கி வாசுதேவ் | 22 - 23 |
| பரிபாடல் பகரும்... | சிவ சண்முகவடிவேல் | 24 - 26 |
| ஸ்ரீ ரமண நினைவலை... | - | 27 - 30 |
| தஞ்சைப் பெருங்கோயில்... | மு.க. மாசிலாமணி | 31 - 35 |
| நித்திய அன்னப்பணி.... | - | 36 - 37 |
| படங்கள் தரும்.... | - | 38 - 39 |
| தகவற் பக்கம் | கவிமணி அன்னைதாசன் | 40 - 42 |
| சமூக வாழ்வியலில்... | திருமதி ச. மனோன்மணி | 43 - 44 |
| சிறுவர் கதைகள் | - | 45 - 46 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 47 - 49 |
| காசினியை..... | கே.எஸ்.எஸ். ராஜா | 50 - 51 |
| மண்ணில் ஏன்.... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 52 - 54 |
| சமூக அமைப்பு | சு. இலங்கநாயகம் | 55 - 57 |
| தொண்டர்சீர் பரவும்... | க. நாகேஸ்வரன் | 58 - 60 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 61 - 64 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை

பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம் : 021 321 9699

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை சிவ ஆறுமுகசாமி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஆச்சிரமம் பல்வேறு சேவைகள், பணிகளை ஆற்றிவருகின்றது. அந்தவகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். ஞானச்சுடர் மலரானது சைவ மக்களது "அறிவுப் பெட்டகமாகத்" திகழ்கின்றது என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகையில், ஆச்சிரமமானது பசித்துவரும் அடியார்களுக்கு உணவினைத் தினமும் வழங்கி தனது சேவையைச் செவ்வனே செய்கின்றது என்று அங்கு கூடியிருந்த முருகன் அடியார்களுக்குக் கூறினார்.

அடுத்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகள், பணிகள் யாவும் மேலும் சிறந்து விளங்க முருகனின் திருவருட் கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

புரட்டாதிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை துரை கணேசமூர்த்தி ஆசிரியர் (யாழ் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையில், சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தோறும் ஞானச்சுடர் மலரானது வெளியிடப்பட்டு வருகின்றது. அதில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டு வருகின்றது என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் சிறிய அளவில் ஆரம்பித்த ஞானச்சுடர் சஞ்சிகையின் செயற்பாடு இன்று உலகம் முழுவதும் பிரகாசிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளதை சபையினருக்கு எடுத்துக்காட்டினார். வெள்ளி வாராந்த நிகழ்வால் சபையில் உள்ளோர் மட்டுமே பயன்பெறுவார். ஆனால், ஞானச்சுடர் சஞ்சிகைமூலம் உலகம் பூராக உள்ள அனைவரும் பயன்பெறுவார். அதுமட்டுமல்லாமல் ஞானச்சுடர் செல்லும் இடங்களில் எல்லாம் அவர்கள் சந்நிதியானை நினைப்பதற்கும் வணங்குவதற்கும் ஒரு காரணமாக விளங்கி வருவதையும் எடுத்துக் காட்டினார். இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது பிரகாசிக்க வேண்டும் என்றுகூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சுடர் தரும் தகவல்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் இவ்வாறு பல்வேறு பாரிய பொறுப்புக்களுடனும், அளப்பரிய ஆன்மீக- கல்வி- சமூகப் பணியாற்றி அனைவரதும் பேரன்பினையும் பெரு மதிப்பையும் பெற்ற செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுக்கு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தனது இருபத்தியேழாவது பட்டமளிப்பு விழாவில் "கலாநிதி"ப் பட்டம் வழங்கி பெருமை பெற்றிருக்கிறது.

"மக்கள் பணியே மகேசன் பணி" எனும் உயர் தத்துவத்தினை மனத்திற்கொண்டு ஆறு திருமுருகன் ஆற்றிவரும் அரும்பணிகளுக்காக அவர்கள் பெறும் கௌரவமானது நாம் அனைவரும் பெறும் கௌரவமாகும்.

இன்று ஈழத்தின் பெருமைமிகு சைவசமயத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வழியிலும், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வழிகாட்டலிலும் ஒரு புதுமைமிகு பயணத்தில் ஆற்றுப்படுத்திய பெருமைக்குரியவர் ஆறு திருமுருகன். தமது வெளிநாட்டுப் பயணங்களை எம் நாட்டில் நலிந்து போயிருக்கும் மக்களுக்கான வழிதேடும் பயணங்களாக மாற்றிய பெருந்தகை அவர்.

தனது பேச்சாற்றலை மையப்படுத்தி சமயவாதிகள், தமிழ் பற்றாளர்கள், அறிஞர்கள், பாமரமக்கள், முதியவர்கள், சிறார்கள், மாற்று வலுவுடையோர், நோயாளர்கள் எனப் பல மட்டத்திலும் உள்ள தமிழ் மனங்களில் நீங்கா இடம்பெற்று வருவதோடு அல்லற்பட்டு நிற்கும் மக்களுக்கெல்லாம் ஆறுதல் தரும் அதிசய மனிதராக எம்முன்னே தெரிகிறார் ஆறு திருமுருகன் அவர்கள்.

வாழுங் காலத்திலே அவரது பணிகள்- அர்ப்பணிப்புகளை சீர்தூக்கி வாழ்த்தி அவரை கௌரவித்தமைக்காக யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

"கலாநிதி"ப் பட்டம் பெற்ற ஆறு திருமுருகன் ஐயா அவர்களை வாழ்த்தி நிற்கும் அன்பு உள்ளங்களுடன், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினராகிய நாமும் இணைந்து கொள்கிறோம்.

நீண்ட ஆயுளை வழங்கட்டும் ஆண்டவன்!

தொடரட்டும் அவரது பணிகள்!!

வாழ்க! வாழ்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சந்நிதிக் கந்தனுடன் நேரே வார்த்தையாடிய மாமனிதன் - மருதர் - கதிர்காமசுவாமியார்

செல்வச் சந்நிதி திருமுருகா – உன்
சேவடி தொழுவேன் திருக்குமரா
நல்லடி தொழுவார்க்கும் நாயகன் நீ
நம்பிக்கை யுடையார்க்கும் தாயவன் நீ
அல்ல லனைத்தும் துடைப்பவன் நீ
ஆறு முகங் காட்டி நடப்பவன் நீ
எல்லையில் அடியாரின் உளமிருப்பான்
இருமணப் பெண்கள் உடனிருப்பான்.

ஆதிநாள் கதிர்காமர் தனை அழைத்தான்
அடியார் அனைவரையும் ஆங்கழைத்தான்
சோதியாய் கதிர்காமர்முன் தோன்றி நின்றான்
சுடர் நெடு வேலொடுந் தோன்றி நின்றான்
ஓதும்வாய் கட்டிப்பூசை செய்யச் சொன்னான்
உரியவுன் சந்ததிக்கும் உரைக்கச் சொன்னான்
போதிய அவலன்னம் படைக்கச் சொன்னான் அள்ளி
புகுமடியாருடன் புசிக்கச் சொன்னான்.

கதிர்காமர் சந்ததியாார் பூசை ஏற்பான்
கனிந்தவர் பிரசாதமும் தானே ஏற்பான்
அதியுயர் மயில்வாகனத்தார் அன்னமு மேற்றான்
அவரின்பின் மோகனதாசர் அன்னமும் ஏற்பான்
மதியுயர் ஆச்சிரமப் பேரவை கண்டான்
மறைந்து அடியாருடன் தானும் மகிழ்ந்து கொண்டான்
கதியாக மக்களுக்குக் கால் கொடுப்பான்
கனிந்தபடி யவர்க்கெலாம் கைகொடுப்பானே.

புலவர்மணி
வை.க. சிற்றம்பலவனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)
M. சதாசிவமூர்த்தி
(கனடா)
செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)
மா. பாலேந்திரம்
(ஆசிரியர், வதிரி)
சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)
தலைவர்
(ப. நோ.கூ. சங்கம், கட்டைவேலி)
தி. இரவீந்திரநாதன்
(ஆசிரியர், கலைமணி வீதி, கட்டைப்பராய்)
ஆ. வடிவேலு
(இளைப்பாறிய அதிபர், தும்பளை)
ச. நாராயணன்
(கிராம அலுவலர், வடலியடைப்பு)
சு. சிவநேசராசன்
(ஆசிரியர், கந்தசாமி கோயிலடி, கோப்பாய்)
து. பத்மராஜன்
(பலாலி வீதி, திருநெல்வேலி)
சி. ஜெயபரன்
(மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. இராசசேகரம்
(இளைப்பாறிய பொது முகாமையாளர், நீர்வேலி)
இ. சண்முகசுந்தரம்
(ஆசிரியர், மந்திகை)
S. செல்வராசா (செல்வி)
(சேவிஸ்ரேஷன், புலோலி)
மு. அப்புலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு)
S. தங்கசிவம்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
ந. சிவக்குமார்
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)
திருமதி சசிலேகா
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)
சி.சி. பாலசுப்பிரமணியம்
(மல்ரி ஓயில், இணுவில்)
ப. தியாகராஜசர்மா
(திருமகள் வாசா. ஆவரங்கால்)
மகாலிங்கம் செல்வமணி
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)
K. முகுந்தன்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)
நா. நாகராசா
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)
ந. மணிவண்ணன்
(இரும்புமதவடி, வதிரி)
திருமதி தர்மகுலராஜா சுகிர்தராணி
(விஷ்ணு பவனம், மானிப்பாய்)
இராதாகிருஷ்ணன் கிரிதரன்
(தம்பலடி, பொலிகண்டி)
ஆ. யோகதாசன்
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)
செ. இராசநாயகம்
(காப்பாளர் இ.போ.ச, அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. முருகவேள்
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)
க. சத்தியதாஸ்
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)
வ. இராசநாயகம்
(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)
க. சந்திரகுமார்
(விதுஷா கிறீம் ஹவுஸ், சங்கானை)
க. வசந்தகுமார்
(ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
ம. ஸ்ரீகாந்தன்
(ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை)
சி. திருவருட்செல்வி
(அந்தோனியார் வீதி, மாதகல்)
P. ரமணகுமார்
(சங்கரத்தை)
திருமதி இரதி தியாகராஜா
(சபாபதிவீதி, தலையாளி, கொக்குவில்)
உரிமையாளர்
(ஸ்ரீதேவி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)
நவரத்தினம் வைரவநாதன்
(சமாதான நீதவான், குப்பிளான்)
கதிர்காமு கணேசநாதன்
(வேளாங்கண்ணி, ஏழாலை)
சி. பத்மராசா
(நவிண்டில், கரணவாய்)
T.R. இரத்தினவேல்
(அரசவீதி, உரும்பராய்)
கா. குணவதி
(நேசபவனம், உடுப்பிட்டி)
பொ. பத்மநாதன்
(மானார் வளவு, கைதடி தெற்கு)
கந்தையா நாகராசா
(பூம்பொழில், கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N. இராஜகோபால்
(துன்னாலை, கரவெட்டி)
சு. சுந்தரலிங்கம்
(வேவில் லேன், வல்வெட்டி)
இ. பொன்னம்பலம்
(செட்டிவளவு ஒழுங்கை, இணுவில்)
தங்கராசா அழகேஸ்வரி
(வட்டுவடக்கு, சித்தங்கேணி)
வீ. வடிவேலு
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)
திருமதி இராசரெத்தினம் இராஜேஸ்வரி
(சந்தைவீதி, சுன்னாகம்)
பொ. கணேசபிள்ளை
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
R. பாலசுந்தரம்
(சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)
சிவலிங்கம் சுகந்திகா
(ஆதியாமலை, உடுப்பிட்டி)
க. கனகம்
(பன்னாலை, நீர்வேலி வடக்கு)
ந. தவகுலசிங்கம்
(ஏழாலை வடக்கு)
சி. சுப்பிரமணியம்
(வத்தனை, புலோலி மேற்கு)
நவரத்தினம் இந்திரமோகன்
(சண்டிலிப்பாய் மேற்கு)
திருமதி சிவநிதி முருகானந்தன்
(கட்டுடை, மானிப்பாய்)
இராசரத்தினம் வேல்குமார்
(இணுவில் வீதி, மானிப்பாய்)
இ. அழகராசா
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
கி. சேந்தன்
(குடமியன் பருத்தித்துறை வீதி, வரணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினை கடந்து பிறவியை ஒழிக்க வல்லான் ஆறுமுகவேலன்

திரு பு. கதிரித்தம்பி அவர்கள்

வினை பிறவிக்குக் காரணமாகின்றது. ஆன்மாக்கள் முன்வினையின் பயனாகப் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்..... எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என மணிவாசகர் சிவபுராணத்தில் கூறுவதுபோல் பலவகைப்பட்ட பிறவிகளை எடுக்கின்றன. நல்வினை செய்தவர்கள் தேவர்களாகவும், மனிதர்களாகவும் பிறக்கின்றார்களென சாஸ்திரங்கள் கூறுகின்றன. நல்வினையும் தீவினையும் பிறவிக்கு வித்தாக அமைகின்றன. இந்த வகையில் சிவநல்வினையே பிறவியை அறுக்கவல்லது என்பது தெளிவாகின்றது. எனவே கலியுகத்தில் பிறவியை அறுத்து ஆட்கொள்ளும் கடவுளாக விளங்குபவர் முருகப்பெருமான் என்பதை மெய்யடியார்கள் உணர்வார்கள்.



வடபால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனும், தென்பால் கதிர்காமக் கந்தனும் பிராமணரல்லாத சாதாரண அடியவர்களால் பூசை செய்யப்படுவதைக் காண்கிறோம். செல்வச்சந்நிதி முருகன், கதிர்காமரை ஆட்கொண்டு, வாய் கட்டி பூசைசெய்யும் முறையையும் அறுபத்துமூன்று ஆலயிலைகளில் அமுதுபடைத்து மானச முறையில் வழிபட்டு, மலர்கள் சாத்தித்துதிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி இன்றும் பூசை நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கப்புறாளை என்று அழைக்கப்படும் பூசகர் கதிர்காமத்தில் திருவிழாக்காலங் களில் மூடிமறைக்கப்பட்ட பேழையை யானையின் முதுகில் வைத்து வீதிவலம் வருவதை அடியார்கள் கண்டு போற்றித் துதிக்கின்றனர். இன்றும் அடியார்கள் மாணிக்ககங்கையில் நீராடி ஈர உடுப்புடன் மலையேறி, அவல் படைத்து நேர்த்திக் கடனை முடிக்கின்றனர். தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலும், கதிர்காமத்திலும் அடியார்கள் காவடி எடுத்து ஆடிப்பாடுவதைக் காணலாம். அடியார்களுக்கு வேண்டிய வரங்களை அளித்து, வினை கடந்து, பிறவிப்பிணியை அறுக்கின்றான் முருகன் என்று கூறுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

திருமூலநாயனாரால் சிவபூமியென்று போற்றப்பட்ட இலங்காதேவியின் தலைப்பாகத்தில் மூன்று முருகன் ஆலயங்கள் அருள்பூத்துத் துலங்கிக்கொண்டிருக்கின்றன.

1. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன்
2. நல்லூர் முருகன்
3. மாவிட்டபுரம் முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதிக் கந்தனை அன்னதானக் கந்தன் என்றும், நல்லூர் முருகனை அலங்கார முருகனென்றும், மாவிட்டபுர முருகனை அபிஷேக முருகனென்றும் பக்தர்கள் போற்றித் துதிக்கின்றனர். இன்னும் பல முருகன் ஆலயங்கள் யாழ்குடாநாட்டில் இருக்கின்றது என்பதையும் மக்கள் அறிவர். எந்நேரமும் சுதந்திரமாக வழிபட்டு நேர்த்திக்கடனை செய்யக்கூடியதும், ஆறியமர்ந்து செல்லக்கூடிய ஸ்தலமாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஒன்றே விளங்குவதை யாவரும் அறிவர். செல்வச்சந்நிதியானை அன்னக்கந்தனென்று நினைவூட்டும் வகையில், கோவிலின் பூஞ்சோலைக் கருகாமையில் சந்நிதியான் ஆச்சிரமம் அமைந்து அன்னம் பாலிப்பதை நினைந்து நெஞ்சம் உருகுகின்றனர்.

முருகனோடு எதிர்நின்று போர் செய்த சூரனையும், தன் பிறப்பின் பெருமையை உணராது பேதலித்து நின்ற அருணகிரியையும் அரவணைத்து வழிப்படுத்தி முத்தி அளித்தவர் முருகன். சூரன் முருகனுடன் சண்டைசெய்து சேவல் கொடியாகவும், மயில் வாகனமுமாகினான். அருணகிரிநாதர், தமக்கையார் கூறிய அறிவுரைகளைக் கேளாது விலைமாதர் வலையில் அகப்பட்டு, குஷ்டரோகியாகி, தன் உயிரை நீக்கும்பொருட்டு திருவண்ணாமலைக் கோபுரத்தினின்றும் குதித்தார். முருகன் அருணகிரியை தனது கைகளால் ஏந்தி "அருணகிரி! நீ பூமியில் செய்யவேண்டிய கருமங்கள் உள" எனக்கூறி தன்மேல் பாடல் புனைய முதலடியும் எடுத்துக்கொடுத்தார். முருகன் கை பட்டதும் நோய் நீங்கப்பெற்று, மலங்கள் ஒழிந்து ஞானம் பெற்றார். அருணகிரி முருகன் மேல் திருப்புகழ், கந்தரலங்காரம் என்னும் பாடல்களை அருளினார்.

புலவர்கள் துயர் துடைக்கவும், வில்லிபுத்தூரர் செருக்கடக்கவும், கந்தரந்தாதி என்னும் நூலைப் பாடினார். நூறு பாக்கள் கொண்ட கந்தரந்தாதியில் ஐம்பத்தினாலாவது செய்யுளுக்கு வில்லிபுத்தூரர் பொருள் கூறமுடியாது திகைக்க, பாடலுக்குப் பொருள்கூறி செருக்கடக்கினார். கிளி உருவிலிருந்து தொடக்கமும் முடிவுமாக ஐம்பத்தொரு பாடல்கள் கொண்ட கந்தரநுபூதியையும் பாடினார். முருகன் திருப்புராணத்தில் "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி......... மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்" என்று பாடப்பெற்றுள்ளதை அறியும்போது, முருகன் ஆன்மாக்கள் மேற்கொண்ட பேரன்பு பிரதிபலிக்கின்றது.

தன்னை நாடிவரும் அடியார்கள் துயர் துடைக்கும் கலியுகவரதனான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் சேவற்கொடியுடனும் மயிலுடனும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான். அவனின் அருள் காட்சிகள் நித்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சிறப்பாக வெள்ளிக்கிழமைகளில் ஆற்றங்கரையானின் காலைப் பூசை கண்டு உச்சியில் விபூதி பெற அடியவர்கள் அலைமோதி நிற்பதைக் காண்கிறோம். எனவே மானுடப்பிறவியெடுத்த நாம் "இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப் பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே" என வேண்டி சந்நிதியானை அடிபணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# ஓ வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்

ஆறு முகமும், ஈராறு கரமும் கொண்டு உலகம் உய்ய உதித்தான் திருமுருகன். அன்னையின் அருள்பெற்று அரக்கரை அழித்து, அமரரைச் சிறைமீட்ட கந்தன், மகா தேவபாலன், தேவதேவன் அடியார்களுக்கு காட்டிய திருவிளையாடல்கள் எத்தனை எத்தனையோ! அவனுக்குத் திருப்பணி செய்யப் பேறுபெற்ற அடியார்கள் எத்தனை எத்தனைபேர். எம்பெருமான் திருப்புகழினைப் பாடும் திருவருள் பெற்றவர் அருணகிரிநாதர். அவனுடைய திவ்விய தரிசனம் பெற்று மகிழ்ந்த மகான்கள், எத்தனைபேர்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதுபோல யாருக்கு எப்போது இறைவனருள் கிடைக்குமோ அப்பொழுது அவர்களுக்குத் தெய்வதரிசனம் கிடைக்கும். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ராமலிங்க அடிகளார். சிறுவயதில் தந்தையை இழந்த சிறுவன் ராமலிங்கம் அண்ணனுடைய வீட்டில் இருந்தார். அவர் பள்ளிக்கூடம் சென்று கல்வி பயில்வதில் நாட்டமின்றியிருந்தார். ஒருநாள் அண்ணன் "வீட்டை விட்டுப் போ" என்று கூறி அனுப்பி விட்டார். "அழுக் கழுவேனோ அல்லது கழுக்கழுவேனோ" என்று கந்த கோட்டத்து முருகனிடம் சென்று அழுகிறார்.

அவருடைய அண்ணியார் ராமலிங்கத்திடம் மிகுந்த பாசங்கொண்டவர். "தம்பி, ராமலிங்கம், நாளைசெய்து அண்ணன் சொல்கிற படி கேளப்பா. அவர் கோபத்தில் உன்னை வீட்டுக்கு வராதே என்று சொல்லி விட்டார். அதற்காக வருந்தாதே. நீ தினமும் கொல்லைப்புறமாய் வா. நான் உனக்குச் சாப்பாடு போடுகிறேன். நீ படிப்பதற்கு என்ன உதவி வேண்டுமோ கேள். நான் செய்து தருகிறேன். நீ பள்ளிக்கூடம் போய்ப் படிக்காததனால்தானே அண்ணன் கோபிக்கிறார்" என அண்ணியார் மன்றாடினார். சிறுவன் ராமலிங்கம் தாயன்புக்குப் பணிந்தான். "அண்ணி மாடியில் எனக்கு ஒரு அறை கொடுத்துவிடுங்கள். அதில் ஒரு கண்ணாடியும், தீபமும் வைத்து விடுங்கள். நான் அங்கேயே தங்கிவிடுகிறேன்" என்றான். அவன் வேண்டுகோளை அண்ணியார் நிறைவேற்றினார். ராமலிங்கம் தனியறையில் கண்ணாடிமுன் தீபத்தை வைத்துவிட்டுத் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார்.

ஒருநாள் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. நாம் கண்ணாடி முன்நின்று பார்த்தால் நம் பிம்பந்தானே அதில் தெரியும். தனக்குப் பதிலாக ஆறு முகங்களின் அழகுருவை கண்ணாடியில் கண்டு தரிசித்தார். ஆறு திருமுகங்களுடன், கடப்பமாலை தவழும் பன்னிரு தோள்களும், தாமரைத் திருவடிகளும் சுடர் வேலும், மயில்வாகனமும், கோழிக்கொடியும் கொண்டு திருக்காட்சி தந்தார். "இதுவரை உனக்காக வாழ்ந்த நீ இனி உலக மக்களுக்காக வாழ்வாய்" எனக் கண்ணாடியில் தோன்றிய கந்தன் கூறினார்.



noolaham.org | aavanaham.org

இராமலிங்கம் நினையாதபோது எம்பெருமான் காட்சியளித்தார். "ஒன்றை நினையாதபோது வந்து முன் நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்" என்ற வாக்கின்படி முருகன் திருவுருவம் தானாக முன்வந்து கண்ணிற்பட்டது. இந்த அனுபவம் அழகிய திருவருட்பாவாய் மலர்ந்தது. பாடசாலை சென்று கற்காத சிறுவன் பாடிய அருட்பா திருத்தணிகை திருமுறையில் இடம்பெற்றது.

"சீர் கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ் கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்
சூர் கொண்ட வேலும் மயிலும் நற் கோழிக் கொடியும் ஓர்
கார் கொண்ட வண்மைத் தணிகாசலமும் என் கண்ணுற்றதே"

தெய்வம் அவரைத் தேடி வந்து தந்தருளிய அருட்காட்சி. கடவுள் கருணைக் கடல். உயிர்கள் உலக மாயையில் மூழ்கி விடாதபடி தானே அவர்களைத் தேடிவந்து காப்பான். சிறுவன் ராமலிங்கம் **"வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள்"** ஆனார். சிறு வயதில் முருகன் அவருக்குத் திருவருள் புரிந்தார். ஒன்பது வயதில் அருட்பா பாடினார். திருஞான சம்பந்தர் திருமுலைப் பாலுண்டு மூன்று வயதில் தேவாரம் பாடினார். தெய்வம் தன்னைத் தேடி வந்ததை இராமலிங்கர் உணர்ந்து கொண்டார்.

தெய்வம் தானாகவே தேடி வந்து காட்சி தந்தும் அதை முழுதும் உணராத மூடரும் உண்டு. சூரன் முருகனோடு போரிட வந்து நிற்கிறான். தன்னையுமறியாமல் கைகள் ஒருகணம் குவிகிறது. கண்ணெதிரே ஒலிக்குஞ் சிலம்பும், தண்டையுமுடைய திருவடிகளும், ஆறு முகங்களுமுடைய பெருமான் திருக்காட்சி கண்களில் தெரியக் கண்டான். "ஆகா! என்ன அழகு!" மனம் வியந்து நிற்கிறது!. கணநேரம் பகை மறந்தான். பக்தியும் கொண்டான். கைகள் குவிந்து வணங்க மேலெழுந்தன!, ஆனால் அடுத்த கணம் ஆணவம் கண்ணை மறைத்தது. தெய்வக் காட்சியும் மறைந்தது. வாயில் கொடுஞ்சொல். "சீ, யாரிவன் சிறுவன்? இந்தச் சூரனை வெல்லும் வீரனா இவன். பால் மணம் மாறாத பாலகன்" என்று ஏளனம் பேசினான். இவ்வாறு ஞானம் ஞான வேலவனைக் காட்டியது. மாயை அதை மறைத்தது!. முன் வினைப் பயனாலே கணநேரமேனும் தன்னை வணங்க நினைத்தானே! அதற்காகவே எம் பெருமான் கருணைவள்ளல் சூரனைக் கொன்றாலும் சேவலும், மயிலுமாக உருமாற்றி சூரனை நிலையான வாழ்வு பெறச் செய்தான். தனக்கே கொடியாகவும், வாகனமாகவும் ஆக்கிக்கொண்டார். அதனால் முருகனை வணங்குவோர் சூரனையும் சேர்த்தே வழிபடுகிறார்கள். சூரனின் ஆணவத்தை மட்டுமே முருகன் கொன்றார். இராமன் இராவணனைக் கொன்றான். அத்தோடு அவன் வாழ்வு முடிந்தது. இது மறக்கருணை! முருகன் சூரனைக் கொன்ற பின்பும் வாழ வைத்தானே அது அறக்கருணை. மாமனைவிட மருமகன் உயர்ந்து விட்டான்.

சிறுவன் ராமலிங்கம் எந்தவேளையும் கந்தவேளை மறவாதவர். கண்ணாடியில் கந்தனைக் கண்ட நாள் முதல் அதே நினைவில் மூழ்கி, அந்த ஆறுமுகன் அருள்பாலிக்கும் இடத்தைத் தேடிப் போனார். கந்தன் தன் சொந்த கோட்டமாகக் கொண்டிருந்த கந்த கோட்டத்தைக் கண்டார். இந்த சுவாமி தான் கண்ட கந்தசுவாமி என உணர்ந்தார். அங்கே அருள் ஞானத்தமிழ்ப் பாடல் பாடினார். அவர் தான் 6000 தமிழ்ப் பாடல்களைப் பாடிய அருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாச வள்ளலார், இராமலிங்க அடிகள்.

திருப்போரூர் தலத்தின் மூலவர்தான் கந்த கோட்டத்தில் அருட்காட்சி தருகிறார். வள்ளி தெய்வானை உடனிருக்க "உன்னை நான் காப்பேன்" என்று பக்தர்களுக்கு கூறுவது போன்று கருணை தவழும் முகத்தினைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். அதனால்தான் போலும் அருகிலேயே இருந்து ஆசை தீரப் பார்த்துக்கொண்டிருக்கிறது மயில். வள்ளலாருக்குக் கண்ணாடியில் காட்சிதந்த கந்தன் இவன் என்பதை நினைவு படுத்துமுகமாக, மிகப் பிரமாண்டமான கண்ணாடியறையில் நடுநாயகமாக அமைந்திருக்கும் முருகன் எழில் தோன்ற காட்சியளிக்சிறான். வள்ளலார் ஒவ்வொரு நாளும் கந்தகோட்டத்துக்குச் சென்று முருகனை வழிபடுவார். தெய்வத்திற்கு அணிவிக்கும் மாலையாக தெய்வ மணி மாலையாகத் தாம் பாடிய முப்பத்தொரு பாடல்களுள், முதல்பாடலிலேயே கந்தகோட்டத்துக் கந்தனை வணங்குவோர்க்கு வாழ்வில் "திருஓங்கும், புண்ணியம் கூடும், அறிவும் செறிவும் மலரும், முயற்சிகள் வெற்றிதரும், நிறைவான இன்பம் கிட்டும்" என்கிறார். தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துக் கந்தவேளிடம் "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும், உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும்" என்று சண்முகத் தெய்வமணியிடம் வேண்டுதல் செய்கிறார்.

வள்ளலாருடைய அண்ணன் சமயச் சொற்பொழிவு செய்பவர். ஒருநாள் சுகவீனம் காரணமாக அவர் சொற்பொழிவுக்குச் செல்ல முடியவில்லை. அண்ணனுக்குப் பதிலாக அன்று தம்பி சொற்பொழிவாற்றச் செல்கிறார். எல்லோரும் இவருக்கென்னதெரியும் என ஏளனமாக நினைக்கிறார்கள். "உலகெலாம் உணர்ந்து" என்ற பெரியபுராணத்தின் இரண்டு வரிகளுக்கு மட்டும் இரவு ஒரு மணிவரை விளக்கம் சொன்னார். அன்றே அவர் பெருமையை உலகம் உணரத் தொடங்கியது. ஞான பண்டிதன் திருவருளால் வேதத்திற்கே விளக்கம் சொல்லும் ஆற்றலைப் பெற்றார். அடுத்தநாள் சொற்பொழிவுக்கு அண்ணன் புறப்பட்டபோது, சொற்பொழிவுக்கு அழைக்க வந்தவர்கள் தம்பி இராமலிங்கம் வந்து சொற்பொழிவு செய்யட்டும் என அவரை அழைத்துச் சென்றனர். அண்ணனும் சென்று அவர் சொற்பொழிவைக் கேட்டு தம்பியின் பெருமையை அறிந்தார்.

வள்ளலார் குன்றுதோராடும் குமரனைத் திருத்தணிகையிலே பலகாலும் சென்று வழிபட்டுவந்திருக்கிறார். அவர் சிறு குழந்தையாக இருந்தபோதே முருகப்பெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து முடிமேல் திருவடி சூட்டியருளினார்.

பன்னிருகண் மலர்ந்த கடலே ஞானப்
பரம்சுடரே ஆறுமுகம் படைத்தகோவே
என்னிருகண் மணியே என்தாயே என்னை
ஈன்றானே என் அரசே என்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயில் மீதேறி
விரும்பும் அடியார் காண மேவும் தேவே
சென்னியில் நின் அடிமலர்வைத் தென்னை முன்னே
சிறு காலை ஆட்கொண்ட தேவ தேவே.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் நோக்கம்

திரு செ. ஜெயமோகன் அவர்கள்

கல்வி என்பது ஒருவனுக்குள் உறைந்துள்ள நன்னடத்தை தெய்வீகத்தை வெளிக்கொணர்வதாக அமைய வேண்டும். அதாவது மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அஹிம்சை என்பவற்றை உன்னத நிலைக்குக் கொண்டு வருவதே கல்வியின் நோக்கமாகும். அனைத்து மதங்களின் சாராம்சமும் இதுவே. குணச்சிறப்புகளில் அதி உயர்ந்தது அன்பு. நல்லொழுக்கத்துக்கு மூலாதாரம் அன்பு. இது எதுவித பலனையும் எதிர்பாராத தூய இதயத்தில் சுரக்கின்றது. எல்லா ஜீவராசிகளிலும் பிறப்புடன் அன்பு கலந்திருப்பதால் எவரையும் இலகுவாக வசப்படுத்தி விடுகிறது. தடக்கி விழுந்த குழந்தை வலி தாங்காது அழும் போது தாயானவள் ஓடிச்சென்று அணைத்ததும் திடீரென அழுவதை நிறுத்திவிடும். மகான்களின் முன்னிலையில் அமரும்போது தூய்மையும் அன்பும் கலந்த அதிர்வலைகள் பரவுவதால் சுகமான அமைதியை அனுபவிக்கின்றோம். மிருகங்கள் இதற்கு விலக்கல்ல. புத்தபெருமானை தாக்க வந்த யானைக் கூட்டம் அவரை அண்மித்ததும் அப்படியே நின்றுவிடவில்லையா? தாவரங்களும் அன்பு பொழியும்போது மிகவும் செழிப்புடன் வளர்வதாக தற்கால விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. மனித மேம்பாடுகள் அனைத்துக்கும் அடி நீரோட்டமாக விளங்குவது அன்பு ஒன்றே. நன்னடத்தையை வளர்த்துக் கொண்டால் அது அமைதிக்கு வழிவகுக்கும். அமைதியின் ஆழத்தில் தான் அன்பை அனுபவிக்க முடியும். உண்மையான கல்வி- அதைக் காகிதத்தில் ஏற்றுவது அல்ல. வாழும் வழி முறைகளைப் பின்பற்றும் வகையில் இருத்தல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகள் வளர்ந்து நல்ல வருமானம் பெற்று சுகவாழ்வு வாழவேண்டுமென்று விரும்புவது இயற்கையே. தொழில்நுட்பம் வளர்ந்த அக்காலத்தில் தகவல் அறிவைப் பெறுவது மிகவும் எளிதாகி விட்டது. ஆனால் நன்மை தீயவற்றைப் பகுத்தறிந்து முறையாகப் பயன்படுத்தும் ஆற்றலே இன்றைய முக்கிய தேவை ஆகும். அன்பும் பரிவும் சுயநலமற்ற கடமையுணர்வுமுடைய சமுதாயம் உருவாக வேண்டும். அவர்களாற்றான் ஆதரவற்றோரைப் பேணிக் கவும் சமுதாயத்தில் ஒற்றுமையை வளர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் இயலும். ஒருவன் ஆரோக்கியமாக வாழவேண்டுமெனில் அவன் உடல், மனம், உணர்வு, சமுதாயம், ஆன்மீகம் என்னும் ஐந்து நிலைகளிலும் திருப்திப்படவேண்டியவனாக இருக்கிறான் என உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) கண்டறிந்துள்ளது. தனியே நல்ல வருமானமும் வளமான குடும்பமும் அமைந்து விட்டால் ஒருவனால் மகிழ்ச்சியாக வாழ முடியாது. மேற்கூறிய ஐந்து துறையிலும் உன்னத நிலை பேணப்படுவது இன்றியமையாததாகின்றது.

தற்போதைய கல்வித்திட்டத்தில்

ஒழுக்கத்தின் மாண்பினை அறிந்து அதன்படி வாழவேண்டும் என்ற எண்ணம் மாணவர் களிடையே வளர்க்கப்படுவதில்லை மனச்சாட் சிக்கு விரோதமாக ஈடுபடுவதைத் தூண்டும் தன்னலம் தான் விதைக்கப்படுகிறது. தரமான கல்வியைப் போதிக்காது தேர்வு நோக்கியதாக மட்டும் பாடங்கள் நடாத்தப்படுவது வெட்கப்பட வேண்டியது. மாணவர்களிடையே சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப் படுவதில்லை. அவசர உலகில் குறிக்கப்பட்ட நேரத்திற்குள் ஏற்கனவே தயார் செய்யப் பட்டவற்றை வழமையான முறையில் சமர்ப் பித்து விடுகின்றனர். ஆசிரியர்களால் மனித இயல்புகள் சாராத ஆதாயம் வழங்கும் வேலைகட்கான திறமைகளுக்கு ஊக்கமளிக் கப்படுகின்றது. நல் வாழ்க்கைக்கு அத்திவார மான எண்ணங்கள், வாய்மை, பரந்த மனப் பான்மை, பணிவு, சகிப்புத் தன்மை, மனித நேயம் என்பன பற்றிப் பேசப்படுவதில்லை. அறிவியலானது அறிவை வளர்ப்பதோடு மனம், உள்ளம், உடல் என்பவற்றின் திறன்களை ஒத்திசைவோடு ஒருங்கிணைக்கும்போது தான் கல்வியானது முழுமையான அர்த்தத்தைப் பெறுகின்றது. கல்வியின் ஒருபக்கம் புறம் சார்ந்த உலகியல் கல்வியாகவும், மறுபக்கம் விழுமியக்கல்வியாகவும் அமைய வேண்டும்.

தண்ணீர்த்தாங்கி சுத்தமாக இருந்தால் தான் குழாயில் நன்நீரைப் பருக முடியும். ஆசிரியர்களும் உயர் சிந்தனையுடையவர் களாய் இருக்கும்போதுதான் அதன் வெளிப் பாடு ஒளிமயமான எதிர்காலத்தை கட்டி யெழுப்ப இருக்கும் ஆச்சாரியர்களான மாண வர்களில் புலப்படும். ஆசிரியர்கள் அறிவைப் பெருக்குவதில் மட்டும் கவனம் செலுத்தாது பெற்றுக்கொண்ட அறிவை மாணவர்கள் வள மான வாழ்வுக்கு எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் செயல்முறையில் காட்ட வேண்டும். மனித மேம்பாடுகள் சந்தையில் விலைபோகும் பண்டமல்ல. புலனடக்கத்தை வளர்த்து எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒத்திசைவாகச் செயற்படுத்துவதில் சித்தியடையும் ஒருவரே ஆசிரியர்க்கு முன் மாதிரியானவர் ஆவார்.

வயது முதிர்ந்தவரை விட ஒரு குழந் தையை மனமாற்றம் செய்வது சுலபம் என்பதை நாம் அறிவோம். ஆதலால்த்தான் குழந்தைப் பருவத்திலிருந்தே விழுமியக்கல்வி ஊட்டப்படுவது மிகவும் இன்றியமையாத தாகும். சான்றோர்களின் கதைகள் சொல்வ தால் ஏற்படும் மனமாற்றம் அளப்பரியது. மனம் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாதலால் முதலில் எண்ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். குழந்தைகள் நல்ல வற்றையே சிந்திப்பதற்கேதுவாக ஆசிரியரும் பெற்றோரும் எமது சுற்றாடலில் இயற்கை யாகக் காணப்படும் மேம்பாடுகளை புரிய வைக்க வேண்டும். ஒரு மலை உச்சியானது காலையில் உறைபனியால் மூடப்பட்டும். பின் முகில் கூட்டங்களால் சூழப்பட்டும், மேலும் இடி மின்னல் வேகமான காற்று என்பவற்றை யும் எதிர்கொள்கிறது. ஆனால் அதனைச்சுற்றி எது நடந்தாலும் அதன் உருவத்தில் எதுவித மாற்றமும் ஏற்படுவதில்லை. அதுபோல் எமது சொந்த வாழ்க்கையிலும் பல பிரச்சினை களும் வெற்றி தோல்விகளும் சூழ்ந்தாலும் மனம் கலக்கமடையாது இருக்கவேண்டும். ஒரு மரமானது எதுவித பாரபட்சமுமின்றி இனிய கனிகளை எல்லோர்க்கும் தருகிறது. நிழலைத் தருகின்றது. தன்னை வெட்ட வருபவனுக்கும் இளைப்பாற இடமளித்து சுகமளிக்கின்றது. நாமும் அன்பும் பிரேமையும் நிறைந்தவர்களாக வேறுபாடு கட்டாது யாவர்க் கும் உதவிக்கரம் நீட்டவேண்டும். காந்தி, புத்தர், யேசு போன்ற மகான்களை உதாரண புருஷர்களாகக் கொண்டு விரோதிகளையும் நேசிக்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும்.

கலியுகத்தில் எல்லோர் மனதிலும் எதிர்மறை எண்ணங்கள் விரவி மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடுகள் மறைக்கப்பட்டதன் விளைவாக அறத்திற்குப் புறம்பான செயல்கள் உலகில் அதிகரித்து வருகின்றன. எனவே தீமைகளைக் களைய வேண்டுமெனில் மனித மனங்களில் தீய எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங் களை விதைக்க வேண்டும். அடிமனதில் எதிர் மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும்போது உயர்மனமாற்றத்திற்கான உந்துதலை மன மானது நிராகரித்து விடும். அசுத்த நீர் வெளி யேறி விடுவதுபோல் மன உறுதியுடனும் விடா முயற்சியுடனும் நல்ல எண்ணங்களைத் தொடர்ந்து வளர்க்கும்போது அடிமனதில் மனித மதிப்பீடுகள் பதிந்து- பின் உயர் மனத்திலும் ஊடுருவிவிடும். அப்போது அறி மனமானது புலன்களின் கட்டுப்பாட்டிலிருந்து மீண்டும் ஆன்மாவின் ஆணைப்படி செயற்படத் தொடங்கிவிடும். இவ்வாறாக மனதை உயர் நிலைக்கு மாற்றம் பெறச்செய்வது கீழ்க்குறிப் பிட்ட முறைகளில் விளக்கப்படுகிறது.

1) நமது அடிமனதில் பெரும்பாலும் எதிர்மறையானவையே பதியப்பட்டுள்ளன. இவற்றை நேர்மறையாக்குவதற்கு மனதில் அன்பு எனும் தெய்வீகப் பண்பை நிரப்பவேண்டும். அப்போது நமது எண்ணங்கள் உணர்வில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் விளைவாகச் செயல்கள் மாற்றம் பெற்று நடத்தையிலும் மாறுதல் ஏற்படுவது.

2) உயர் மனமாற்றமென்பது உள்நோக்கிய பயணம். அதாவது புலன்களும் மனமும் புற உலகிலிருந்து விலகி உள்ளே உறைகின்ற தெய்வீகத்தைப் பற்றிய சிந்தனையில் பயணிப்பது. அதாவது மனிதன் தனது மூலமாகிய இறைவனை நோக்கிப் பயணிப்பது.

3) மிருக மனித தெய்வீக குணங்கள் ஒவ்வொருவரிடத்திலும் வேறுபட்ட விகிதத்தில் காணப்படுகின்றது. இவற்றை இனம் பிரித்து மனிதத் தன்மைகளைப் பற்றிக்கொண்டு தெய்வீக நிலைக்கு உயரவேண்டும் என்ற வேட்கையுடன் வாழ்வது.

4) வாழ்க்கை எனும் பெரும் பயணத்தில் தன்னை அறிவதென்பது அவனது குறிக்கோள் தன்னையறிந்தவன் இறைவனை அறிகிறான். இறைவனை அறிந்தவன் இறைவனாகிறான். உலக இன்பங்களை விலக்கி நிறைஞானி என்ற இலக்கை நோக்கிப் பயணிப்பது.

சுருங்கக்கூறின் உயர்மனமாற்றமென்பது புதிய வழிமுறையின் ஆரம்பம். புற உலகத் தைப் பற்றிய கருத்தாக்கத்திலும், உறவு களிலும் தொடர்ச்சியான விழிப்புணர்வோடு செயற்படத் தொடங்குவது. மனதில் எழும் எண்ணங்களிலும் அன்பு எனும் தெய்வீக சக்தியை நிரப்பும்போது எல்லாம் நல்லவை யாகவே அமையும். அன்பு+ செயல் = தர்மம். நாம் இயல்பாகவே தெய்வீகத்தன்மையுடை யவர் என்ற எண்ணம் நிலைத்து நிற்குமாயின் நமது எண்ணம், சொல், செயல் என்பன முறையே அன்பு, அமைதி, தியாகம் என உயர் மாற்றம் பெறும்.

புலன்களைத் திசைதிருப்புவதற்கும் நேர்மறை எண்ணங்களை உருவாக்குவதற் கும் எமது மூலவளமாகிய விவேகம், மன உறுதி, ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமை யுணர்வு, பக்தி என்பவற்றின் துணையுடன் தளராத முயற்சியும் ஆன்மீகப் பயிற்சியும் அவசியம். அத்துடன் விழிப்புணர்வில் ஏற்படும் தாகமும் உயர்மனமாற்றத்தால் ஏற்படும் நன்மைகள் மீது உறுதியான நம்பிக்கையும் இன்றியமையாததாகும்.

ஆசைகளின் மூட்டையாக விளங்கும் மனமானது தளை நீக்குவதற்கும் உதவும் ஓர் கருவியாகும். இதன் பாரத்தினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைப்பதன்மூலம் வெளி உலகில் அலைய விடாது அமைதியுறச் செய்யலாம். இதை ஒரு வளமான நிலத்துக்கு ஒப்பிடலாம். விதைத் ததைத்தான் அறுவடை செய்யலாம். பண்படுத் தாவிடின் களைகள் தான் மிஞ்சும். புறத் தாக்கங்களால் ஆசைகள் நிறைந்த மன மானது ஒரு அடர்ந்த காடு போன்றதாகும். குளத்தின் மேற்பரப்பில் சிற்றலைகள் நிறைந் திருக்கும்போது அடிப்பரப்பில் உள்ளவற்றைப் பார்க்கமுடியாது. மனமும் அமைதியாகவும் நிலையாகவும் உள்ளபோதுதான் நாம் அதனுள் ஆழ்ந்து ஊடுருவலாம். கல்வி யறிவைப் பெறுவதில் பெரும் பங்கு வகிக்கும் மனத்தினை ஒரு ஒழுங்கு முறையில் பயிற்றப் படும்போது உயர்நிலைகளை எட்டமுடியும். அமைதியாக அமர்வித்தல் மூலம் குழந்தை களின் மனம் ஒருமுகப்படுகின்றது. ஊட்டப்படும் கல்வியை முறையாகப் புரிந்து மனதில் நன்கு பதியவைக்க உதவுகிறது. சுயசோதனை ஏற்பட ஆரம்பிக்கிறது. இதனால் சிறந்த முடி வைத் தேட முடிகின்றது.

கல்வியின் நோக்கம் குழந்தைகளிடத் தில் குறை நிறைவை அல்லது மனித உன்னத நிலையை வளர்ப்பதாகும். மேலும் அவர்களின் விழிப்புணர்வை அதிமேல் மட்டத்துக்கு உயர்த்த மேற்கூறப்பட்ட எல்லாப் பண்புகளையும் சமமாக வளர்க்கவேண்டும். நற்செயல்களானது அறிமனதுக்குத் தேவை யான உள்ளீட்டைக் கொடுப்பதோடு அடி மனதில் சேர்த்து வைக்கப்படுவதால் குழந்தை யின் எதிர்காலத் திட்டங்கட்கு நல்ல மூல தனம் ஆகின்றது. மனம் அமைதியடைந்த நிலையில் ஞாபகசக்தி அதிகரிப்பதாக விஞ் ஞான ஆராய்ச்சிகள் சான்றுபகர்கின்றன. நாம் அனைவரும் தேடும் மனத்தினை அமைதி யடையச் செய்யும் சக்தியானது வெளி உலகிலிருந்து பெறமுடியாது. அது நமக்குள் ளிருந்து ஊற்றெடுக்க வேண்டும். எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தியானம் இன்றியமையாததாகின்றது. தியானப் பயிற்சி யுடன் நன்னடத்தையும் சாந்தியும் நிலை கொள்ளும்போது நாம் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை உணரவைக்கின்றது. இத்தியானம் கைகூடுவதற்கு எமது அறிமனதி லிருக்கும் காம, குரோத, மோக, லோப, மத, மாச்சரியம் எனும் ஆறு எதிரிகளும் பெரும் தடையாகவுள்ளன. அமைதியாக அமர்தல், மூச்சுப்பயிற்சி, தியானம் என்ப வற்றின்மூலம் புலன்களைத் திசை திருப்பி நல்வழியில் பயிற்றுவிக்கப்படும்போது மனித மேம்பாடுகள் வளர்ச்சிபெற்று அமைதியும் ஆனந்தமும் நிலவும். புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதும் . இலகுவாகி விடுகிறது.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட உற்சவ தினங்கள்

**08.12.2011 கார்த்திகை 22 வியாழன்**
கார்த்திகை விரத தினம், பகல் விசேட உற்சவம்

**11.12.2011 கார்த்திகை 25 ஞாயிறு**
விநாயகர் சஷ்டி விரதம், ஆண்டியப்பர் பூஜை

**30.12.2011 மார்கழி 14 வெள்ளி**
உதயத்தில் திருவெம்பாவைப் பூஜாரம்பம், விநாயகர் சஷ்டி விரதம்

## கார்த்திகைமாத குருபூசை தினங்கள்

**16.12.2011 கார்த்திகை 30 வெள்ளிக்கிழமை**
ஆறுமுகநாவலர் குருபூசை

திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



**திரு கே.வி. குணசேகரம் அவர்கள்**

தினமும் வானவீதியால் பல ரிஷிகள் செல்வார்கள்; முனிவர்கள் செல்வார்கள்; தேவர்கள் செல்வார்கள். இவர்களுக்குத் துட்ட அரக்கர்களால் தீங்குகள் பல ஏற்படும். அத்தகைய தீங்குகள் ஏற்படாமல் காப்பது முருகனின் மேலே எழுந்த ஒருகரம்.

அழகு பொலியும் செந்நிறமான ஆடை களை அணிந்த முருகனின் தொடையில் இருப்பது ஒருகரம். அக்கரம் அடியவர்களுக்கு ஆதரவளிப்பது; உறுதிகொள்ள வைப்பது. இன்னொரு கரம் அங்குசத்தை வைத்திருப்பது. அங்குசத்தால் அடியவர்களைப் பிணித்திருக் கும் வினைகளை முருகன் அழிப்பான்.

இன்னொரு கரம் கேடயத்தை வைத் திருப்பது. மற்றொரு கரம் வேலாயுதத்தை வைத்திருப்பது. அடியவர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குவது கேடயத்தை வைத் திருக்கும் கரம். வேலிருக்கப் பயமில்லை என்றுணர்த்துவது வேல் வைத்திருக்கும் கரம். இவ்விரு கரங்களும் அந்தணர்களாற் செய்யப் படும் வேள்விகளை ஏற்று அருளும் முகத்திற் குரியன. அசுரர்கள் வந்து வேள்வியை அழிக் காமல் காத்து அசுரர்களை அழிக்கும் தன்மை வாய்ந்தன.

முனிவர்களுக்குத் தத்துவங்களை அருளி, அவற்றின் பொருளை உணர்த்துவது ஒரு கை. இன்னொரு கை மார்பில் மாலை யோடு சேர்ந்திருப்பது. இந்நிலையில் முருகன் சின்முத்திரை தரித்த குருவாக விளங்குகிறான்.

முருகன் ஞானபண்டிதன். அதனால் அவன் ஞானகுருவாக இருக்கிறான். மனமும் குணமும் சலனமும் ஆகிய அழுக்குகள் இல் லாத துரியமுங் கடந்த துரியாதீத நிலையில் பெறும் ஆனந்த அனுபூதியைத் தருவதற்குக் காரணமான மௌன அட்சரம் ஏதும் இல்லாத முத்திரை உள்ளது ஒருகை.

மோன முத்திரையே மௌன நிரட்சக மந்திரம். இதை உணர்பவர்கள் துரியாதீத மாகிய சுகாநுபூதியில் திளைப்பர். இந்த இரு கைகளும் முருகப்பெருமானுடைய ஞானச் சிறப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன. இன் னொரு கையானது கீழே தழுவிவிழும் வளை யோடு சுழன்று கனவேள்வி செய்யென்று உத்தரவிடுகிறது. மற்றொரு கை இனிமை யான ஓசைபொருந்திய மணியை அடிக்கிறது. அவ்வோசை அடியவர்களின் நெஞ்சிற் பதிந்து அருளோசையை உண்டாக்குகிறது. அதற் கடுத்த கையானது அடியவர்களுக்கு அருளைப் பொழிகிறது. மற்றொரு கை தேவ மகளிருக்கு மாலை சூட்டுகின்றது. இவ்வாறு முருகனின் பன்னிரு கைகளும் அடியவர்களுக் குண்டாகும் துன்பங்களை நீக்கி அருளை மழைபோலப் பொழிகிறது.

முருகன் மலையில் இருக்கிறான், காட்டில் ஒளிர்கிறான், சமவெளியில் இயங்கு கிறான், நாட்டில் திகழ்கிறான், ஆற்றோரத் திலும், குளக்கரைகளிலும் இருக்கிறான். மனிதர்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் தீங்கு ஏற்படாது தடுப்பதற்காக வீற்றிருக்கிறான். மனித சஞ்சாரம் இல்லாத இடங்களிலும் இலங்குகிறான் என்று நக்கீரர் கூறுகிறார்.

மக்கள் மட்டுமன்றி தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் மிருகங்களும் பறவைகளும் முருகனை வணங்குகின்றன என்றும் நக்கீரர் கூறுகிறார். தேவமகளிர், முருகன் பெருவிருப்புடன் குடிகொண்டிருக்கும் குறிஞ்சி நிலத்திற்கு வந்து தம்மை விதம் விதமாக அலங்கரித்து நடனமாடி முருகனை வணங்குகின்றனர். இதனால் மனம் மகிழ்ந்த முருகன் அவர்களுக்கு மாலையணிவித்து மகிழ்ச்சிப்படுத்துகிறான் என்றும் நக்கீரர் கூறுகிறார். போர்க்களத்தில் இரத்தத்தைக் குடிக்கும் பயங்கரமான பேய்களும் முருகனை வாழ்த்தி வணங்குகின்றன. இந்திரனோடு தேவர் கூட்டமும் குறிஞ்சி நிலத்திற்குவந்து முருகனை வாழ்த்தி வணங்கித் தமது குறைகளைக் கூறிப் பரிகாரம் பெறுகின்றனர். கொலைத் தொழிலை அஞ்சாது செய்யும் வேடர்களும் முருகனாலயத்தில் கூடிநின்று கூத்தாடி வணங்குகின்றனர். கந்தர்வர்களும் ஞானிகளும் கல்லாதவர்களும் மும்மூர்த்திகளும் குறிஞ்சி நிலத்திற்குவந்து குறிஞ்சிப் பண்ணைப் பாடி வணங்கி முருகனிடம் வரம் பெற்றுச் செல்வதாக நக்கீரர் கூறுகிறார்.

ஆறுதிருமுகங்களும், பன்னிரு கைகளும் பக்தர்களுக்கு வேண்டியவற்றை அளிப்பதுபோல முருகனின் பன்னிரு விழிகளும் அவனை வழிபடும் அடியார்களைப் பரிவுடன் நோக்கி வேண்டியவற்றை அள்ளிக் கொடுப்பதாக நக்கீரர் கூறுகிறார்.

ஏறுமயில் ஏறி விளையாடும் முகத்தில் உள்ள விழிகள் குறும்புத் தன்மையானவை எனினும் இரக்கமும் பரிவும் பாசமும் மிக்கவை. அடியவர்களுடன் விளையாடும் தன்மை மிக்கவை. வேண்டியவற்றை உடனே தாமதியாது வழங்கி அடியாரை மகிழ்ச்சிக்குள்ளாக்குபவை.

ஈசனுடன் ஞான மொழி பேசும் முகத்தில் உள்ள விழிகள் ஞானம் பொதிந்தவை. ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும், ஞானத்தை அடைய விரும்பும் அடியவர்களுக்கும், மாணவர்களுக்கும் ஞானத்தைக் கொடுப்பவை. சூரியனது கதிர்களைப்போல அறியாமையை நீக்கி உண்மையை உணர்த்துபவை. மெய்ப்பொருளை உணர்த்தி ஞானத்தை வெளிப்படுத்திப் பிறப்பில்லாத நிலையை உண்டாக்குபவை. கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகத்தில் உள்ள விழிகள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளும் தன்மையைப் பெற்றன. அடியவர்களின் குறைகளை உணர்ந்து கருணை கூர்ந்து, அன்பு பெருக நோக்கி குறைபடுவோரின் குறைகளை நீக்கி தத்துவத்தைப் புரிய வைப்பவை.

குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகத்தில் உள்ள விழிகள் அடியார்க்குத் துணிவைக் கொடுப்பவை. துன்பம் வந்தால் அஞ்சாது வேலை நினை- துன்பங்கள் யாவும் நீங்கிவிடும். உனக்கு என்ன தேவையோ அதைக்கேள்- தர்மமானவையென்றால் தருவேன் என்று கூறுபவை. வேலைப்போல உறுதியான கூர்மையுள்ள விழிகள் அவை. அதன் அருள்நிலை அசுரரையும் பணிய வைக்கும்.

மாறுபடு சூரனை வதைத்த முகத்தில் உள்ள விழிகள் மிகவும் சிவந்தவை. அருளும் சினமும் மிக்கவை. துன்பப்படுவோருக்கு அருளையும் துன்பப் படுத்துவோருக்கு அச்சத்தையும் கொடுப்பவை. துட்ட தேவதைகள், பேய், பிசாசு, பூதங்கள், செய்வினை, சூனியம், பில்லி என்பவை அடியாரைக் கண்டதும் கிலி கொண்டு ஓட வைப்பவை. ஒருமுறை முருகா வென்றால் பலமுறை அருளுபவை. அடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கு வரும் துன்பங்களை நீக்கி இன்பம் தருபவை. கொடுமைகளை அழித்து நிம்மதியைத் தருபவை. அஞ்சேல் என உரைத்து அடியவரைக் காப்பவை.

வள்ளியை மணம்புரி சந்தமுகத்தில் உள்ள விழிகள் காதல் உணர்வு மிக்கவை. அடியவர்களின் குடும்பப் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்ப்பவை. குழந்தைச் செல்வத்தைக் கொடுப்பவை. குழம்பிய திருமணங்களை முடித்து வைப்பவை. காதலரின் துன்பங்களை உணர்ந்து தீர்ப்பவை. காதலர்கள் முருகனுடன் வள்ளியையும் சேர்த்து வணங்கினால் காதல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் யாவும் இலகுவில் தீர்ந்துவிடும். தலை சம்பந்தமான நோய்கள் விலகும். இராகுதோஷமுள்ளோர் வள்ளியை வணங்குதல் வேண்டும். குடும்பப் பிரச்சினை காரணமாகப் பிரிந்திருப்போர் முருகனுடன் தெய்வானையை வணங்குதல் வேண்டும். வணங்கும்போது முல்லைப் பூவால் மாலை கட்டி இருவருக்கும் சாத்தி நெய்விளக்கிட்டு வணங்க வேண்டும்.

வேல் படைக்கலமல்ல. படைக்கலம் உடலை அழிக்கும். ஆன்மாவில் படிந்துள்ள ஆணவமான அழுக்கை அகற்றாது. அத்துடன் ஆன்மாவைப் படைக்கலங்கள் தாக்கா. அதனால் வேலை வழிபடுவோர் அகந்தையிலிருந்து நீக்கப்படுவார். அவர்களின் ஆன்மாவில் படிந்துள்ள அழுக்கான ஆணவம் சிறிது சிறிதாக மறைந்துவிட ஆன்மா வேலுடன் ஐக்கியமான முருகனையே அடையும். முருகனின் அருளை அள்ளிக்கொடுப்பது திருவருளான வேல்.

(தொடரும்...

# சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை – 24

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

– இராசையா [illegible] –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்

திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

சிவனார் படைப்பில் எத்தனை விதம்? எண்ணிப் பார்க்கவேண்டும்! எத்தனை மரங்கள். எத்தனை விலங்குகள், சுயநலமிக்க மனிதர்கள். முட்டையிலிருந்து கோழி வருகின்றது. குஞ்சு வளரும்வரை முட்டையிலிருந்தே உணவைப் பெறுகிறது. குஞ்சு பொரித்து வெளிவந்ததும் தானே தன் வாயால் உணவு தேடுகிறது. ஆனால், முலையூட்டி விலங்குகளோ தாயின் வயிற்றில் வளர்கிறது. பிறந்ததும் சிலகாலம் தாயின் முலையில் பால் குடித்து வளர்கிறது. வேறு பாலைக் குடிப்பதில்லை.

மனிதனோ, தாயின் வயிற்றில் வளர்கின்ற காலத்தில் தன் குழந்தைக்காக பசுவின் பாலை தாய் குடித்துப் போஷாக்குப் பெறுகிறாள். குழந்தை பிறந்த பின்பும் தன்பாலை மட்டுமன்றி பசுப்பாலை குழந்தைக்கும் கொடுக்கின்றாள், தானும் குடிக்கின்றாள். பசு தன் கன்றுக்கும் ஏனையோருக்கும் பால் கொடுக்கின்றது. தாய் தன் பிள்ளைக்கே பால் கொடுப்பாள். அதுவும் கொடுக்காத தாய்மாரும் இருக்கின்றார்கள்.

பிள்ளை பிறந்த காலத்தில் தாய் இறந்துவிட்டால் வேறு தாய்மார் பிள்ளைக்குப் பால் கொடுப்பது மிக அரிது. ஆனால் பசுப் பாலைக் குடித்து அப்பிள்ளை வளர்கின்றதல்லவா? எனவேதான் பசுவை "கோமாதா" என்றார்கள். அதுவே எம் குலமாதா. தாய்ப் பால் குடித்து வளராத மனிதர்கள் உலகில் வாழலாம். ஆனால் பசுப்பால் குடித்து வளராத மனிதர்களை உலகில் பார்க்கமுடியாது.

"நான் பசுப்பால் குடிப்பதில்லையே" என சிலர் சொல்லிவிடுவது எனக்குப் புரிகிறது. தேனீர், கோப்பியிலும் பால்; ஐஸ்கிறீம் வகைகளிலும் பால்; சொக்லேற் வகைகளிலும் பசுப் பால்; சில பிஸ்கற்றுக்களிலும் பாலே. ஏன்? அங்கர், லக்ஸ்பிறேயிலும் பசுப்பால்தானே. குழந்தை பிறந்து ஆறு மாதத்தில் அன்னப் பிராசனத்திலும் பால் கொடுக்கிறார்கள். திருமண வீட்டில் மாங்கல்யம் சூடியதும் பாலும்



பழமும் உண்பார்களே! மரணப்படுக்கையிலும் பால் பருக்குகிறார்களே. பாலின் அவசியந்தான் எவ்வளவு! பாலின்றி மனித வாழ்வேது? வாசிப்பதோடு யோசியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருக்குத் தேவைப்படாத புல் பூண்டுகள், வைக்கோல், இலை, குழை, தவிடு, பிண்ணாக்கு போன்றவற்றை உணவாக உண்டு நிறையுணவாகிய ருசியான பாலைத் தருகிறதே பசு. பசுவைப்போன்ற ஒரு தொழிற் சாலையை புத்திகொண்ட மனிதன் உரு வாக்குவானா? ஆனால் அழிக்கின்றானே. இத் தகைய பயனுள்ள பசுக்களைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையு மல்லவா!

பசுவில் நாம் தினமும் வழிபாடு செய்யும் பிள்ளையார், முருகன், சிவன், உமை, நாராயணன், செல்வம் தரும் மகாலட்சுமி, கல்வி தரும் சரஸ்வதி, அல்லல் நீக்கும் ஆஞ்சநேயர் என எல்லோரும் விரும்பி உறை கிறார்கள். மனிதர்களே உங்களில் எந்தத் தெய்வம் உறைகிறது? ஆனால் சாதுவான பசுவை வெட்டி உண்கிறீர்களே! இது தகுமா? உங்களுக்கு கல்வி, செல்வம், நிம்மதிதான் கிடைக்குமா?

பசு வளருமிடங்கள் செல்வாக்குப் பெறும்; தோஷங்கள் நீங்கும். இதனாலன்றோ மகாகும்பாபிஷேகம் நடைபெறுமுன் பசுவை கோயிலுக்குள் சில நாட்கள் கட்டி வளர்க்கின் றார்கள். புதுவீடு கட்டியபின் புதுமனைப் புகு விழா நடாத்த முன் சில நாட்களுக்கு பசுக் களை வீட்டுக்குள் கட்டி வளர்க்கிறார்கள். கும்பாபிஷேகம் நடைபெற்றதும் கதவை மூடி இறைவனே முதலில் தன் பார்வையை பசுவில் பதிக்கின்றார். திருமண வீடுகளில் மாங்கல்யம் சூடியதும் பசுவைப் பூசித்து வழிபடுகின்றார்களே! இதன் சிறப்புக்களை உணர்ந்த பின்பும் மனிதன் பசுவின் இறைச்சி யைப் புசிக்கலாமா?

பொன் முட்டைகள் தந்து வந்த தாராவை வெட்டி அழித்தவன்போல வாழ்நாள் முழுவதும் பாலைத் தந்து கொள்ளும் பசுவை வெட்டி உண்டால் நிறை பயன் கிடைக்குமா? பகுத்தறிவுள்ள மனிதன் செயல் இதுவா? தன் இரத்தத்தையே சுவையுள்ள பாலாக்கித் தரும் பசுவை வதை செய்தால் கொடிய பாவமல்லவா பற்றிக்கொள்ளும். இப்பாவம் இப்பிறவியில் மட்டுமன்றி அடுத்தடுத்த பிறவி யிலும் துன்பத்தையே தரும். பசுவைக் கொலை செய்தவன் நிச்சயமாக வேறு உயிர் களால் கொலை செய்யப்படுவான் என்பதைப் பலபேர் உணருவதில்லை.

இன்னும் எத்தனை சிறப்புக்களைத் தரும் பசுக்களையும் எருதுக்களையும் பட்டிப் பொங்கல் நாளில் பூசிப்பதோடு, வருடம்பூராவும் பூசித்து மகிழ்வோம்; செல்வச் சிறப்புக்களைப் பெறுவோம்; பசுவதை செய்யமாட்டோம் என உறுதிபூணுவோம்; பசுவதை செய்வோரைத் தடுத்து நிறுத்துவோம்; பசுவதைச் சட்டத்தை மதிப்போம்; பால் வளத்தைப் பெருக்குவோம்; நிறையுணவைப் பெறுவோம்; ஆரோக்கியமாக வாழ்வோம்; எல்லா உயிர்களிலும் அன்பாக இருக்கப்பழகுவோம்; மானிடத்தையும் பேணப் பழகுவோம். அன்புசார் பெரியோர்களே, நண்பர் களே ஏனைய பிராணிகளையும் நம்முயிர் போல் மதிப்போம். நன்மதிப்புப் பெறுவோம்.

**கிழக்கு நோக்கி அமர்ந்து உணவு உண்டால் ஆயுள் வளரும்.**
**மேற்கு நோக்கி உண்டால் புகழ் சேரும்**
**தெற்கு நோக்கி உண்டால் பொருள் வளரும்.**
**வடக்கு நோக்கி உண்டால் நோய் வளரும்.**
**-வாரியார் சொன்னது-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீர்த்தித் திருவகவல்

திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்

**பதவுரை:**

திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து - திருவாஞ்சியம் என்னும் திருப்பதியில் திருமணச்சீர் பெறுதற்குரிய அழகுடன் எழுந்தருளியிருந்து, மரு ஆர் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்- இயற்கைமணம் பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியோடு கலந்து மகிழ்ந்த திருவிளையாடலும்.

திருவாஞ்சியம் என்பது சோழநாட்டிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. இலக்குமியை வாஞ்சித்துத் திருமால் இறைவனைப் பூசித்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் பெற்றது.

"கற்பமார் வார்குழற் றிருவைவாஞ் சியத்துள்
வருணனை யாலுறத் தரியளேல் மேவப்
பெற்றது திருநக ராதலா லிதற்குப்
பெயருமேற் றிரு வாஞ்சிய மெனவே" (திருமால் தவப்படலம் 105)

எனத் திருவாஞ்சியத்தலபுராணத்து வருதலுங் காண்க. மரு- மணம். "மருவார் கொன்றை" (தே.சுந். 53:1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மருவார் குழலி யென்றது இயற்கை மணம் பொருந்திய கூந்தலையுடைய உமையம்மையை. "மருவார் குழலி மாதோர் பாகமதாய்" (ஞான 5:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

சேவகன் ஆகி திண் சிலை ஏந்தி- பாண்டியனுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு வில்வீரனாக வடிவங்கொண்டு வலிய வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு, பல பல பாவகம் காட்டிய பரிசும்- பல வகையான அம்பெய்யும் இயல்புகளைக் காட்டிய தன்மையும்.

முன்னொரு காலத்திலே சிவபக்தியிற் சிறந்த பாண்டியன் ஒருவன் மதுரையம்பதியிலிருந்து செங்கோல் செலுத்து நாளில், சோழமன்னன் ஒருவன் அவனைப் பொருது வெல்வதற்கு இயலாமையால் வஞ்சனையால் வெல்லக் கருதித் தான் சார்ந்து நின்ற சமணசமயக் குருமார் எண்ணாயிரவரையும் தன்பால் அழைப்பித்து நீங்கள் மந்திரவாதஞ் செய்து பாண்டியனைக் கொல்ல வேண்டும் என்று கேட்க அவர்களும் அதற்கு இசைந்து மந்திரவாதஞ் செய்ய, ஓம குண்டத்தினின்றும் ஒரு யானை தோன்றியது. சமணகுருமார் அதனை நோக்கிப் பாண்டியனை மதுரையம்பதியொடும் விழுங்குக என ஏவிவிட்டுத் தாங்களும்

செல்வராயினர். யானை மதுரையை அடைந்தது. அதனைக் கண்ட பாண்டியன் அஞ்சித் திருக்கோயிலையடைந்து, "பெருமானே, சமணர் மந்திரித்துவிட்ட யானையினாற் கலங்கினேன்; காத்தருள்க" என்று வணங்கி நின்றான். அப்போது, கீழ்பால் மதிலின் பக்கலில் அட்டாலை கட்டின் வில்லாளாய் வந்து யானையை வெல்வன். கலங்கிடேல் என இறைவனருளால் ஓர் அசரீரி உண்டாயது. பாண்டியனும் அகமகிழ்ந்து அப்படியே அட்டாலை மண்டபம் இயற்றுவித்தான். இறைவனும் வில்வீரனாகத் தோன்றி அவ்வட்டாலை மீதேறி யானையை எய்தான். அவன் விட்ட நரசிங்க அம்பு, அதன் மத்தகத்தைக் கிழிக்க யானை வலமுறிந்து விழுந்து இறந்தது. பாண்டியன் மனமகிழ்ந்து இறைவனைப் பணிந்தான் என நம்பி திருவிளையாடற் புராணம் கூறும். இனி, இப்பகுதி சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடலைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம்.

(தொடரும்...

## அறுபடை வீடுகள்

தேர்ந்தனர் முருகன்வேலாய் செழுமையொளர் ஆலமரத்தைக் காட்டி
வேர்ந்த நம்பெருமை திருநிலைதில் நின்ற கதிர்காமப்பக்கம் சார்ந்து
சேர்ந்த நல்லன் பிறப்புதையவற்றாத் அகனை வைரம் மகிழ்வுற
மோந்தனம் பூரித்துள்ளம் கனிப்புற்று ஏற்றிதவாயுற்ற வேலின்!

என்றிவையுரைத்திபோது நேர்பது பூசையுரவும் பூவரசின் தீர்ந்தகன்மே
ஒன்றையும் வாங்காதையவர் இதவும் அவைவதுவ்வளம் யாதென் செய்த
வென்றிடும் வேடுவைவற்று குன்றுயிலோர்கள் தாவிநின்றார் தூயோன்
வென்றிடுமுன்னே பெருஞ்சைவப் புனிதனார்பேற்பாம் வேலா!

ஆனவாலயிருமாள் முன்னே அருட்சுடர் கொண்டேற்றும்போது
எண்ணிய வெல்லைவர் ஒளிருக்கும் சந்நிதிவேலன் தானே பார்த்து
விண்ணிடையுயர்த்தியாவ அறவைக்கு எதேனும் காணமாய்
கண்ணிடத்தி தோன்றிக் கதிர்காமர்தானை ஆற்றிடை நடந்தாரன்றால்

வரையுக்கள் அலைபுக்கள் கலையுக்கள் காற்றினையாதும்
திசைபுக்கள் திவரைக்கள் அருள்புக்களாக எங்கும்
தரையுக்கள் பதிபுக்கள் கொடியாய் கடல்புக்களாக நின்று
நிறைகுல் புக்களாடே ஞானசுடர் மின்றஆடி!

காவொளிப்பன கலைமலர் கதிரொப்பனவாவ சித்தர்கண்ட
பாவொப்பனவரு வொப்பன பவளிவொப்பன சேந்தமயில்வாகனம் செய்த
கோவொப்பன நிதியொப்பன திக்கொப்பன் மோகனதாளம்பதம்
வேலொப்பன விழுவகான் குருவொப்பன் விந்தைமிகுசந்நிதி யருளோ!

ஆகம்பது நெடு ஆற்றிடையுள்ளாள் அறுபவர் மருள ஓங்குமருள் வேலே
பாசம் பதி சடையோன் பாலம்பகம் படக்கடல் சார்ந்துறையும்
மேகர் புதுக்கலையென காவதிகமந்து அலைவெனச்சுடர் துலங்கிய பழுக்
ஆறமர்ந்து வீதியொளர் அமர்சூழ் கயிலையென ஒளியூர் முதி கந்தகோட்டம்!

-திரு க. தெய்வேந்திரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தெய்வப்புலவரும் மெய்ப்பொருளும்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

உலகப் பொதுமறையான திருக்குறள் தந்த திருவள்ளுவர், "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என வீடுபேற்றுக்கு வழிகூறியதனால் தெய்வப்புலவர் ஆனார்.

அறத்துப்பாலில், இல்லறம், துறவறம் இரண்டிற்கும் பொதுவான ஒழுக்கங்களைக் கூறிய திருவள்ளுவர், துறவற இயலில் மெய்யுணர்தல் என ஓர் அதிகாரம் பாடுகிறார். அங்கே, பிறவிப்பிணி எவ்வாறு உண்டாகிறது; அதனை இல்லாதொழிக்கும் உபாயம் என்ன என்னுமுகத்தால் மெய்ப்பொருளை உணர வைக்கிறார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார் (குறள் 10)

எனக் கடவுள் வாழ்த்தில் கூறியதற்கு விளக்கமாக மெய்யுணர்தல் அமைகிறது எனலாம்.

எப்பொருள் எத்தன் மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 355)

என்பது மெய்யுணர்தல் அதிகாரத்தில் முக்கியமான பாடல் ஆகும்.

**மெய்ப்பொருள் என்றால் என்ன?**



அ) சூரியன் ஒளி தருகிறது; அந்த ஒளி வெப்பமானது; சூரியன் வட்ட வடிவமாகத் தெரிகிறது- இவை நமக்குப் புலப்படுபவை. ஆனால், சூரியன் ஒரு கிரகம் என்று அறிதலே மெய்ப்பொருள்.

ஆ) சந்திரன் வட்டவடிவமானது; வளர்பிறை, பூரணை, தேய்பிறை என்ற நிலையில் இரவில் வருவது; குளிர்ந்த ஒளி தருவது- இவை நமக்குத் தெரிந்தவை. ஆனால் வளர்பிறை என்பதும் தேய்பிறை என்பதும் நிலவுக்குத் தெரியாது. என்றும் பூரண நிலவாகவே இருக்கிறது. பூமி மறைப்பதனால் மறைதல் உண்டாகிறது என்பதும் சூரிய கிரகத்திலிருந்து சந்திரன் ஒளியைப் பெறுகிறது என்பதும் உண்மையானவை; அதுவே மெய்ப்பொருள் ஆகும்.

இ) "கோச்சேரமான், யானைக்கட்சேய், மாந்தரஞ்சேரல் இரும் பொறை" என ஒரு மனிதனைச் சுட்டும் தொடர் வழக்கில் உண்டு. இங்கே, கோ- அரச குலம்; சேரன்- குடிப்பெயர், யானைக்கட்சேய்- யானை போன்ற கூரிய பார்வையுடையவன்; மாந்தரஞ் சேரல் இரும் பொறை- சிறப்புப் பெயர். இத்தொடரில் கற்பனைகளையும் காரண காரியங்களையும் கழித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் எதிர்நிற்பது ஒரு உருவம். உயிர் இறைவனாகிய மெய்ப்பொருளோடு சேர்ந்துவிடும். உடல் மண்ணாகிவிடும்.

ஆகவே இவ்வுதாரணங்களால் மெய்ப்பொருளையும் உயிரினம் பிறவிபெற்று நல்வினை, தீவினைகளைச் செய்யும் மாயா உலகத்தினையும் காண்கிறோம்.

மேலும், இருள் சேர் இருவினை பற்றி கடவுள் வாழ்த்துப் பாடிய திருவள்ளுவர், "மாயா உலக இன்பங்களை அறிந்து அவற்றை விட்டவர்களுக்கு நரகம் இன்றி பேரின்பம் கிடைக்கும்" என்கிறார்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (குறள் 352)

(இருள்- நரகம், மருள்- மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் எனக்கொள்ளும் விபரீத உணர்வு)

மெய்ப்பொருளை ஐயந்திரிபற உணர்ந்தவர்களுக்கு நிலவுலகிலும் பார்க்க (சிறப்பு) வானுலகம் (பேரின்பவீடு) அண்மையில் உண்டு என்கிறார்.

கற்று நல்லறிவினால் மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் உலகில் பிறப்பு வராத வழியைக் கண்டு கொள்வர்.

அன்றியும் காமம், வெகுளி, மயக்கம், ஆகிய மூன்றையும் விட்டவர்கள் மெய்ப்பொருளை உணர்ந்தவர்களாவர். அவர்களைப் பிறவிப்பிணி தொடராது.

ஆகவே, அங்கிங்கெனாதபடி எங்கும் சார்ந்து நிற்கும் செம்பொருளாகிய மெய்ப்பொருளை ஒருவன் உணர்ந்து உலகில் எப்பொருளின் சார்பும் இல்லாமல் ஒழுகினால் அவனைப் பிறவிப்பிணி சாரமாட்டாது.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு. (குறள் 5)

## அன்னையின் சிரிப்பே தீபாவளி



உன்னை அறியும் நாளன்றோ
அஞ்ஞானமழியும் தீபாவளி
உனக்குள்தான் நிதிபதி—அதை
உணரும் நாளே தீபாவளி
அன்னை சொல்லைத் தட்டாதே
அன்னையின் சிரிப்பே தீபாவளி



என்னை நன்றாய்ப் படைத்த அவள்
இதயம் மகிழ்ந்தால் தீபாவளி

-திரு கே.எஸ். சிவஞானராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

8. அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே.

## பதவுரை

குமரன்- குமாரக் கடவுள், கிரிராச குமாரி மகன்- மலையரசனது மகளாகிய பார்வதி புதல்வர், சமரம்பொரு தானவ நாசகனே- போர்புரிந்த அசுரர்களை அழித்தவரே!, அமரும் பதி- யான் விரும்புகின்ற ஊர், கேள்- உறவினர்கள், அகம்ஆம்- நான் என்று கூறப்படுகின்ற, இபிமரம் கெட- இந்த மயக்க அறிவு கெட்டொழியுமாறு, மெய்ப்பொருள் பேசியவா- மெய்ப்பொருள் இன்னதென்று உபதேசித்த அருள்திறம் ஆச்சர்யமாக இருக்கின்றது:

## பொழிப்புரை

குமாரக் கடவுளும் மலையரசனது மகளாகிய பார்வதி தேவியின் திருப்புதல்வரும், போர் புரிந்த அசுரர்களை அழித்தவரும் ஆகிய முருகப்பெருமான், யான் விரும்புகின்ற ஊர், விரும்புகின்ற மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர் என்ற புறப்பற்று, நான் என்ற அகப்பற்று ஆகிய இவைகள் ஒழியுமாறு, அடியேனுக்கு உண்மைப் பொருளை உபதேசித்த அருட்டிறத்தின் தன்மை ஆ! ஆச்சரியமாக இருக்கின்றது.

## விரிவுரை

இப்பாடல் முருகவேள் அருணகிரிநாதருக்குச் செய்த உபதேசச் சிறப்பைக் கூறுகின்றது. இது அடிகளாருடைய வரலாற்றைக் குறிக்கின்றது.

**அமரும் பதி கேள்:-**

அமர்தல்- விரும்புதல். அமரும் பதி, அமரும் கேள் என்று கூட்டுக.

பிறந்தவூரிலும், மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர்பாலும் அதிக விருப்பங்கொண்டு, மனிதர்கள் மயங்குகின்றனர். இவை புறப்பற்றுக்கள்.

அகமாமெனும்:-

அகம்- நான் என்னும் அகப்பற்று.

அகம் என்ற சொல்லுக்கு வீடு என்றும் பொருள். அப்பொருள் சிறப்புடையதன்று.

புறப்பற்று, அகப்பற்று என்ற இருவகைப் பற்றுக்களும் அற்றால்தான் பிறவியறும்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். -திருக்குறள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"
"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய் முற்ற"
-கம்பர்

**பிரமங்கெட:~**

பிரமம்- மயக்கம். பிரமம் என்ற சொல் பிமரம் என வந்தது.

ஆகையால் சினமும், சினத்தால் மயக்கமும் வரும். இதனை முக்குற்றம் என்பர் ஆன்றோர். இதனைத் திருமூலர் கூறுமாறு காண்க.

மூன்றுள குற்றம் முழுதும் நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே.

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையினுள்ளே உறைவதோர்
நாமம தனைத்தலைப் பட்ட வாறே.

பிரமம் என்பது வடசொல்.

மயக்கம் என்பது மூலமாகிய ஆணவ மலத்தின் காரியமாகும். இந்த அவிச்சையாகிய மயக்க அறிவானது நிலையில்லாத பொருளை நிலையானதாகவும், தூய்மையில்லாததைத் தூய்மையானது என்றும், துன்பத்தை இன்பம் என்றும், தானல்லாத பொருளைத் தான் என்றும் உலக வாழ்வில் மாறுபடக் காணும் சுட்டறிவாகும்.

அந்தச் சுட்டறிவு காரணமாக நான் என்ற அகங்காரமும், இந்தப் பொருள்கள் என்னுடையவை என்று எண்ணும் மமகாரமும், அப்பொருள்களின்மீது அவாவும், அப்பொருளைப் பிறர் விரும்பும்போது சினமும், சினத்தால் மயக்கமும் முறையே உண்டாகின்றன.

**பிரமங்கெட மெய்ப்பொருள் பேசியவா:~**

மேலே கூறிய மயக்க அறிவு அடியோடு அழியுமாறு உண்மைப் பொருளை உபதேசித்தவாறு என்ன ஆச்சரியம்.

பேசியவாறு என்ற சொல்லில் உள்ள ஈறு கெட்டுள்ளது. ஆச்சரிய உணர்வினால் ஆ என்று நின்று விட்டது.

மெய்ப்பொருள் என்ற சொல் அநுபூதியில் நான்கு இடங்களில் பயிலப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 8ஆவது பாடல் | மெய்ப்பொருள் பேசியவா |
| 11ஆவது பாடல் | மெய்ப்பொருள் பேசியவா |
| 20ஆவது பாடல் | மெய்ப்பொருளுக் கடியேன் |
| 45ஆவது பாடல் | மெய்பொருள் ஈகுவையோ |

**குமரன்:~**

கார்த்திகேயோ மஹாஸேநச் சரஜன்மா ஷடாநந:
பார்வதீ நந்தன ஸ்கந்தஸ் ஸேநாநீரக்நிபூர்குஹ:

பாஹுலேயஸ் தாரகஜித் விசாகச் சிகிவாஹநு:

ஷாண்மாதுரச் சக்திவர: குமார: க்ரவுஞ்சதாரண:

இந்த வரிசையில் வரும் குமார என்ற சொல்லுக்கு ஐந்து பொருள்கள் உள. அவை வருமாறு.

1) ஸதா பாலத்வாத் குமார: எப்பொழுதும் இளையோனாக இருப்பதால் குமாரன்.

2) குத்ஸிதான் மாரயதீதிவா குமார:- குத்ஸி தாளைக் கொல்லுகின்றவர். (குத்ஸிதாள்- வெறுக்கப் பட்டோர்; நிந்திக்கப்பட்டோர்.)

3) கௌ ப்ருதிவ்யாம், மாரயதி மன்மவத் ஆசர தீதி வா குமார:- பூமியில் மன்மதனைப்போல் அழகாக இருப்பவர்.

4) கௌ ப்ருதிவ்யாம் மாம் லக்ஷமீம் ராதி ததா தீதி வா குமார: பூமண்டலத்தில் லட்சுமி சம்பவத்தை வழங்குகின்றவர்.

5) ஸதா ப்ரஹ்மசாரித்வாத் வா குமார: எப்பொழுதும் பிரமச்சாரியாக இருக்கின்றவர்.

முருகனுடைய திருநாமங்களுள் குமாரன் என்ற நாமம் உயர்ந்தது. முருகனுடைய மகாமந்திரமாகிய சடக்கரத்தில் இந்த மூன்றெழுத்து இடையில் விளங்குகின்றது.

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து"

"நாதா குமரா நம என்றரனார்"

என்ற அநுபூதி வாக்குகளால் அறிக.

**கிரிராச குமாரி மகன்:-**

| | | |
|---|---|---|
| மரங்களுக்கு அரசு | -அரசமரம் | |
| விலங்குகட்கு அரசு | -மிருகராஜா | -சிங்கம் |
| பறவைகட்கு அரசு | -பட்சிராஜா | -கருடன் |
| நாகங்கட்கு அரசு | -நாகராஜா | -ஆதிசேடன் |
| யானைகட்கு அரசு | -கஜராஜா | -ஐராவதம் |
| நடிகர்கட்கு அரசு | -நடராஜர் | -அம்பலவாணன் |
| தியாகிகட்கு அரசு | -தியாகராஜா | -ஆரூரண்ணல் |
| தேவர்கட்கு அரசு | -தேவராஜா | -இந்திரன் |

இதுபோல மலைகட்கு அரசு பர்வதராஜா -இமவான்.

இமவானுடைய தவத்திற்கு இரங்கி உலகன்னை மானச வாவியில் தாமரை மலரில் குழவியாகத் தோன்றி இமவான் வளர்க்க அவன் புதல்வியென வளர்ந்து அருள் புரிந்தாள்.

**சமரம் பொரு தானவ நாசகனே:-**

காசிபருடைய மனைவியர் பதின்மூவர். இவருள் தநு என்பவள் பிள்ளைகள் தானவர்கள். தானவர்கள் குலத்தை அழித்தவர் முருகவேள்.

அசுரர்கள் சதா போரிலேயே நாட்டம் உள்ளவர்கள். அதனால் சமரம் பொரு தானவர் என்றார்.

## கருத்துரை

முருகவேள் மெய்ப்பொருள் உபதேசித்தது என்ன ஆச்சரியம்?

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் கதவைத் தட்டும்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

உங்களுடைய ஆசை என்ன? எதைத் தொட்டாலும் வெற்றி கிடைக்கவேண்டும் என்பதுதானே?

மேல்நாட்டு உளவியல் நிபுணர்கள் என்ன சொல்லிக்கொடுக்கிறார்கள்? "ஜெயிக்க வேண்டும், ஜெயிக்கவேண்டும் என்று உங்களுக்கு நீங்களே அடிக்கடி சொல்லிக் கொள்ளுங்கள். வெற்றியைக் குறிவைத்தே உங்களுடைய ஒவ்வொரு செயலும் இருக்கட்டும்" என்கிறார்கள்.

பெரும்பாலும் இந்த முயற்சி உங்கள் ரத்தக்கொதிப்பைத்தான் அதிகரிக்கும். ஏன்? வெற்றியையே நினைத்து உழைத்தால், அது கிடைக்குமோ, கிடைக்காதா என்ற சந்தேகத்தில் படபடப்பு, அச்சம், கவலை, மன உளைச்சல் என்ற ஏராளமான பிசாசுகள் உங்கள்மீது வந்து ஏறிக்கொள்ளும்.



இலக்கின்மீது ஒரு கண்ணைப் பதித்துக்கொண்டால், அவன் பாதிக் குருடனாகி விடுகின்றான் என்கிறது, ஜென்தத்துவம். மிச்சமிருக்கும் ஒரு கண்ணை வைத்துக்கொண்டு எவ்வளவுதூரம் செயலாற்றமுடியும்?

அப்படி அரைகுறை கவனத்துடன் செயலாற்றாதீர்கள். இந்தக்கணம் செய்யவேண்டியதை இரண்டு கண்களையும் பயன்படுத்தி முழுமையாகச் செய்யுங்கள். எட்டிப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், வெற்றி இலக்கை சுலபமாகத் தொட்டுவிட முடியும்.

புரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் கவனமாக உழைக்கவேண்டுமே தவிர, கடுமையாக உழைக்கத் தேவையில்லை. இதை விளக்க ஜென்னில் ஓர் அழகான சம்பவம் உண்டு.

சான்ஸோ என்றொரு ஜென் குரு இருந்தார். மிகச் சிறந்த வாள் வீரர். அவரிடம் ஒரு புதிய சீடன் சேர்ந்தான். "இந்நாட்டிலேயே முதன்மையான வாள்வீரனாக என்னை ஆக்கமுடியுமா?" என்றான்.

"அதற்கென்ன.. பத்து வருடங்களில் உன்னை அப்படித் தயார் செய்துவிடுகிறேன்" என்றார் குரு. "என்னது பத்து வருடங்களா?" ஐந்தே வருடங்களில் சாதிக்கவேண்டும் குருவே. மற்றவர்களைவிட இரண்டு பங்கு அதிகமாக உழைக்கத் தயாராக இருக்கிறேன்."

"அப்படியானால் இருபது வருடங்கள் ஆகும்" என்றார், சான்ஸோ. சீடன் திகைத்தான். "போதாது என்றால், இன்னும் நான்கு பங்கு கடுமையாக உழைக்கின்றேன்" என்றான். "அப்படிச் செய்தால் நாற்பது வருடங்கள் ஆகுமே" என்றார் குரு. ஆம். உங்களை வருத்திக்கொள்ள வருத்திக்கொள்ள- நீங்கள் நினைத்ததை அடைவதற்கு அதிக காலமாகும். இதைத்தான் சான்ஸோ அந்தச் சீடனுக்குப் புரியவைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக உழைப்பவர்கள் சில சமயம் வெற்றி பெறலாம். ஆனால், அதன் சந்தோசத்தை அனுபவிக்க முடியாது உலகில் மிக அற்புதமான கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞானிகள் ஓய்வாக இருந்தபோதுதான் நிகழ்ந்திருக்கின்றன.

மரத்தடியில் சும்மா உட்கார்ந்திருந்தபோதுதான் அப்பிள் விழுவதை கவனித்தார் நியூட்டன். புவியீர்ப்புப்பற்றிய விதியைக் கண்டுபிடித்தார்.

"பாத்டப்"பில் ஓய்வாக குளித்துக்கொண்டு இருந்தபோதுதான் மிதப்பது பற்றிய விதிகளை கண்டுணர்ந்தார் ஆக்கிமிடீஸ். டென்ஷனில்லாமல், ரசித்து முழு ஈடுபாட்டுடன் பணிகளைச் செய்யும்போதுதான், மூளை அதன் உச்சத்திறனுடன் செயலாற்றும்.

கவனித்துப் பாருங்கள், விளையாட்டில்கூட, வெற்றியை நினைத்து அதிக படபடப்புடன் விளையாடும் குழுதான் பெரும்பாலும் தோற்கிறது. விளையாட்டை அனுபவித்து ஆடுபவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

வெற்றி... வெற்றி.... என்று உங்களை நீங்களே வருத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உடலளவிலும், மனதளவிலும் நீங்கள் பலவீனமாகிப் போவீர்கள். வெற்றியைப் பற்றிய அச்சத்தை விட்டுவிட்டு, மனதை அமைதியாக வைத்திருங்கள் உடல் தானாக வேகமாக உழைக்கும்.

ஆனால், உங்களில் பெரும்பாலானவர்கள் நேரெதிராக அல்லவா இருக்கிறீர்கள்? உங்கள் மனம் நிலையில்லாமல் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனால், உடலின் வேகம் குறைந்து விடுகிறது. இப்படித்தான் சங்கரன் பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு வேடிக்கை நடந்தது.

"ஒரு வேலையை, மாலையில் வீட்டுக்குப் போனதும் மறக்காமல் செய்யவேண்டும்" என்று கைக்குட்டையில் அவர் முடிச்சுப்போட்டுக்கொண்டார்.

ஆனால், வீட்டுக்குப் போனதும் எதற்காக அந்த முடிச்சைப் போட்டோம் என்பது சுத்தமாக மறந்துவிட்டது. படபடப்பானார். மூளையைக் கசக்கினார். மொட்டை மாடியில் உலாவினார். நெற்றியில் தட்டிக்கொண்டார். நோட்டில் என்னென்னவோ கிறுக்கினார். ஊஹும்.... நினைவிற்கு வரவேயில்லை.

"பேசாமல் படுத்துத்தூங்குங்கள். எதுவாயிருந்தாலும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அவரது மனைவி அறிவுரை சொன்னார். "மாட்டேன். ஏதோ ஒரு முக்கியமான விஷயமாயிருக்கும். அதைக் கண்டுபிடிக்காமல் எப்படித் தூங்குவது?" என்று படுக்கையில் உட்கார்ந்தே இருந்தார்.

இதுவா.... அதுவா..... என மண்டைக்குள் நூறாயிரம் யோசனைகள் பூச்சிகள்போல் பறந்தன. கடைசியில் இரவு இரண்டு மணிக்கு சலித்துப்போய் கைக்குட்டையைத் தூர எறிந்தார். சடக்கென்று ஞாபகம் வந்தது.

"இன்றைக்கு ஒன்பது மணிக்கே தூங்கப்போக வேண்டும்" என்று நினைவு படுத்திக்கொள்ள போடப்பட்ட முடிச்சு அது!

படபடப்பாக மூளையை இயங்கவிட்டால், சங்கரன் பிள்ளைக்கு நேர்ந்ததுதான் உங்களுக்கும் நேரும். முடிவைப் பற்றிய கவலையை விடுங்கள். ஒவ்வொரு முறையும் முழுமையான ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள் வெற்றி தானாக உங்கள் கதவை வந்து தட்டும்.

**விரிந்துகொண்டு போவதுதான் வாழ்க்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

(தொடர்ச்சி...

# பரிபாடல் பகரும் பக்திப் பிரார்த்தனை - 5

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

பரிபாடல் இரண்டாம் பாடலைக் கீரந்தையார் பாடினார். இசை அமைத்தவர் நன்னாகனார். பண்ணுப் பாலை யாழ்.

இரண்டாம் பாடல் திருமால்மீது பாடப்பெற்றது.

"திங்கள் மண்டிலமும் சூரிய மண்டலமும் தொன்று தொட்டு மாறிவரும் இயல்பினை உடையன. விண்ணுலகமும் மண்ணுலகமும் அற்ற காலத்தில் வானமும் இல்லை. முறை முறையாக ஊழிகள் கழிந்து ஒழிந்தனவாயின.

"ஊழிகள் ஒழிந்த பின்னர் மூலப்பிரகிருதியிலிருந்தும் ஒலி உற்பத்தியாகி காற்று முதலிய ஏனைய பூதங்களின் நுண்ணணுக்கள் வளர்தற்கு களனாகி யாதோர் உருவமும் காணப்படாத வானத்தினுடைய முதல் ஊழிக்காலமும் வானத்திலிருந்தும் பொருள்களை இயக்கும் காற்று வெளிப்பட்டு வீசிய முறை இரண்டாம் பூத ஊழி. காற்றிலிருந்தும் சிவந்த தீத் தோன்றும். அது மூன்றாம் பூத ஊழியாகும். நான்காம் பூத ஊழியில் பனியும் மழையும் பெய்யும். நான் பூத அணுக்களினூடே வெள்ளத்தில் மூழ்கிக் கரைந்து ஒழிந்த நில அணுக்கள் ஆங்கிருந்து மீண்டும் தமது ஆற்றல் மேம்பட்டுச் செறிந்து திரண்டு ஐந்தாவதாகிய நிலத்தூழியுமாகும்.

"அவ்வூழிகள் பெருங்கால வனத்தைக் கடந்த பின்னர் வெள்ளத்தில் அழுந்திக் கிடந்த நிலத்தை நீ பன்றி வடிவம் எடுத்து மேலே கொணர்ந்தாய்!

"அந்நிலத்தில் உயிர்கள் தோன்றி வாழத்தக்கதாகப் பக்குவப் படுத்தினாய்! பன்றியோடு இணைத்துப் பேசப்படுவதால் இந்த ஊழிக் காலம் 'வராக கற்பம்' எனப் பெயர் பெறும்.

"இது நின்னுடைய அளவிறந்த திருவிளையாடலின் ஒன்றை உணர்த்துகின்றது. இந்த ஒரு திருவிளையாடலிலேயே அளவில்லாத ஊழிகள் அடங்கும் என்றால் அத்தகைய எண்ணிறந்த இயற்றிய நினது பழமைக்குள்ள ஊழிகள் எவராலும் அறிவதற்கு அரியன வன்றோ!!

"சக்கரப்படைத் தலைவ!! அத்தகைய ஆற்றல் மிக்க நின்னை ஏற்றிப்போற்றி வணங்குகின்றோம்!

அச்சிறப்புக்களை எல்லாம் பரிபாடல் அரிதாகப் பாடும் பான்மையைப் பாருங்கள்.

"தொன்முறை இயற்கையின் மதியொ.........
.............. மரபிற் றாகப்
பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட
விசும்பி லூழி ஊழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தீச் சுடரிய ஊழியும் அவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுயர் பிண்டி அவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத் தூழியும்
நெய்தலுங் குவளையும் ஆம்பலுந் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமு நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக் (கு)
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வநிற் பேணுதுந் தொழுதும்

(வரி- 1- 19)

“ஊழிகள் கடந்த உத்தமனே! சங்கின் நிறத்தை நிகர்த்த பலதேவனுக்குத் தம்பி என்பார்க்கு இளையனுமாவாய்! அப்பலதேவனுக்கு முதியை என்பார்க்கு முதியனுமாவாய்! இவை அல்லையாய் ஞானிகள் ஆராய்ந்த வேதத்தின் வழிநின்று நின்னைத் தெளியுமிடத்து நீ இளமையும் முதுமையு மாவதன்றி உயிர்கள் தோறும் உள்ளுயிராக நிற்றி! இவை நினது பழைய நிலைபோல நினக்கே அமைந்த சிறப்புக்களேயாம்.

“வானில் வெளிப்படும் இந்திரவில் போன்ற பல்வேறு நிற ஒளியுடையாய்! பல ஆபரணங்கள் பூண்டுளாய்! முத்துக்களாலான நித்தில மதாணியுடையாய்!! சந்திர களங்கம்போன்று செந்நிறத் திருமகள் வீற்றிருத்தலன்றி பிறிதொரு களங்கம் காணா மார்பினை!!

“போரில் பகைவரைக் கொல்லுந் தலைமையுடையாய்!! நீ ஏந்திய முழங்கொலிச் சங்கு சினந்து, ஒன்று கூடி சூறைக் காற்றுப்போன்று போருக்கு வந்த அவுணர்களுடைய கொடிகளை அறுத்து வீழ்த்தும்! அவுணர் செவிகளைச் செவிடுபடுத்தும் முடிகளை முடிக்கும். நிற்கும் நிலை தளர நடுக்கும் இடியென அதிரும்.

“போரடு குரிசில்! நீ ஏந்திய ஆழிப்படை அவுணர்களுடைய தலைகள் வலியிழந்து தரித்த மாலையோடு புரளச் செய்யும்! நின்ற நிலை அழிந்து வேரும் தூரும் மடலும் குருத்தும் கெடாத உயர்ந்த பனையின் உச்சியிலுள்ள பதினாயிரம் குலைகள் உதிர்ந்து வீழ்வ போல ஒருசேர நிலத்தில் சோர்ந்து கிடக்கும்படி பகைவருடைய இனிய உயிரை அழிக்கும் ஒழிக்கும்.

“நின்னது நீலமணியின் ஒளியை நிகர்க்கும். நினது கண்கள் தாமரைப் பூக்கள் இரண்டைச் சேர்த்து வைத்தாற் போலும். நின்னுடைய வாய்மைப் பண்பு நாளினை நிகர்க்கும். நினது பொறுமை பெருநிலம் போலாகும். நின்னருள் பெய்முகில் ஒக்கும். என்று அந்தணர்க்குரிய வேதப்பொருள் விளம்பா நிற்கும்!

“கருடக் கொடிப் பெருமானே! யாங்கள் எடுத்துக்கூறிய பொருள்களையும் எம்மால் எடுத்து இயம்பா ஏனைப் பொருள்களையும்- எப்பொருளையும் உட்பொருளாக்கொண்டு உறைபவன் நீயே.

“வேதம் உரைக்கும் முதல்வன் வாக்கும் வேள்வித் தூணாகி நின்று அதனில் கட்டப்படும் பசுவினைப் பற்றிக் கொள்ளுதலும் அவியாகக் குண்டத்தில் தீயை மூளச்செய்து தீயில் நெய் சொரிந்து விளங்கும் ஒளி, ஒள்ளியசுடர் பெருக்கம் நினது உருவமும் உணவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்திகரும் நன்கு உணரும்படி நினது பெருமைக்குப் பொருந்துமாறு அந்தணர் காணும் வெளிப்பாடும் ஆகும்.

"தேவ உணவாகிய அமிழ்தத்தைப் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு வழங்கவேண்டும் என்று நினது திருவுள்ளத்தில் நினைந்த பொழுதே அத் தேவர்களைச் சென்றடைந்தன.

"நினது திருவடியினைத் துளக்கமில்லாத நெஞ்சினையுடைய யாங்களும் பலகாலும் எம்தலை நிலத்தில் பொருந்தும்படி வணங்கினோம். வாழ்த்தி ஏத்தினேம். எளியேங்களுடைய அறிவு மெய்ப்பொருளை உணர்வதாக என்று எம்முடைய பல சுற்றத்தாரோடும் வேண்டுகின்றோம்.

"வாயடை அமிர்தநின் மனத்தகத் தடைத்தர
மூவா மரபும் ஓவா நோன்மையும்
சாவா மரபின் அமரர்க்காச் சென்றநின்
........................ மரபினோய் நின்னடி
தலையுற வணங்கினேம் பண்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா டறியற்க எம்மறி வெனவே

(வரி 69-76)

(வளரும்.....

# முருகப் பிரணவம்

ஓம் என்னும் பிரணவ மந்திரம் அ,உ,ம என்னும் மூன்று எழுத்துக்களும் சேர்ந்தது. இவ்வெழுத்துக்கள் முறையே விஷ்ணு, சிவன், பிரமன் இவர்களைக் குறிக்கும். ஆக பிரணவ மந்திரம் த்ரிமூர்த்திகளின் மந்திரஸம்புடமாகும். இவ்வெழுத்துக்களை சிறிது வரிசைமாற்றி "உ,ம,அ" என்று சேர்த்து உமா என்றும் ஓர் பிரணவம் ஏற்படுகிறது. இதையே சக்திப் பிரணவம் என்று லலிதா ஸகஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீ பாஸ்கரராயர் என்கிற மகான் விளக்கியிருக்கிறார்கள். மும்மூர்த்திகளின் மந்திர ரூபமான ஓர் ஐக்கிய ரூபமே பிரணவமாகக் கொள்ளுகிறோம்.

முகுந்தன் ருத்திரன் கமலன் (க என்றால் பிரம்மா என்று வடமொழியில் பொருள்) இம்மூவரின் பெயர்களின் முதல் எழுத்துக்களை மட்டிலும் எடுத்து சேர்த்து முருக என்ற பிரணவ மந்திரம் அமைகிறது. பிரணவ தத்ரூபமாய் இருக்கும் சரவணபவனின் பெயரே "முருக" பிரணவம். பிரமனும் உணராத பிரண வார்த்தத்தை தன் பிதாவிற்கு உபதேசம் செய்தருளிய பிரணவ தத்துவம் அமைந்த முருகக் கடவுளின் திருநாமமே பிரணவ மந்திரமாய் அமைந்துள்ளது.

முருகப் பிரணவத்தின் மற்றோர் பெருஞ்சிறப்பு ஸ்ரீ ராமநாம தாரக மந்திரத்தையும் அது உட்கொள்ளும் வகையில் "ம"வும் "ர"வும் மு,ரு என்னும் முதல் இரண்டு எழுத்துக்களில் அமையப்பெற்றிருக்கின்றன. எனவே திருமுருகாற்றுப்படை பற்றிய நக்கீரரும் "அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக" என்று ஓதினார்.

–திரு க. சிவசங்கரநாதன்–




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 2. ஆருயிர் ரமணன்

ஆச்ரமத்தருகில் சாது ஒருவர் வசித்து வந்தார். உலக விவகாரங்களிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்ததால், அவரைத் தெரிந்தவர்கள் மிகச்சிலரே. பெயர், புகழ், பொருள் ஒன்றிலும் ஆசை வைக்காமல் பகவான் காட்டிய வழியில் சென்றுகொண்டிருந்தாலும் தன்னை நாடி வருபவருக்கு பகவானின் போதனையைத் தெளிவு படுத்தவோ, வழி காண்பிக்கவோ அவர் என்றுமே தயங்கியதில்லை. நடனானந்தர் என்பது அவர் பெயர். ஸ்ரீ ரமண நூல் திரட்டிலுள்ள "உபதேச மஞ்சரி" என்ற பகுதியைத் தொகுத்தவர் இவரே.



பகவானிடம் நீங்கள் கடைசியாகப் பேசிய விஷயம் என்னவென்று கேட்டதற்கு நடனானந்தர், கடைசி வரையில் லாவிட்டாலும் பகவான் மகா நிர்வாணம் அடையுமுன் தன்னிடம் பேசியதில் தான் முக்கியமானது என்று கருதும் விஷயத்தைத் தெரிவித்தார். ஒருநாள் பகவானை அனுகி நாங்கள் இருக்கும் நிலையென்ன என்று கேட்டதற்கு கீழ்க்கண்ட பொருள் கொண்ட வேதாந்தப் பாடல்களை எடுத்துக் காண்பித்தார்.

"ஆலின்கீழ் அமர் அண்ணலே சாக்ஷி; உள்ளதே உரைப்பேன்; சாக்ஷி நீ ஸ்தூல சூக்ஷ்ம காரண (அவித்தைகளுக்கும்), விழிப்பு கனவு உறக்க (நிலைகளுக்கும்), நிகழ், எதிர், கடந்த காலங்களுக்கும் நீயே மாறாத சாக்ஷி! இவையாவும் கடலலைபோல் முடிவின்றி உன்னுள்ளே எழுந்தடங்கும்."

"எண்ணற்ற பிறவிகளில் உடலே நான் என்று எண்ணி ஏமாந்தேன். மேல், கீழ் எல்லாம் கானல் நீரென, பொய்த் தோற்றம் எனக் கண்டேன்: குருவின் அருளால் ஆத்மனே நான் என்று அறிந்தேன்; வீடு பெற்றேன்."

முதிர்ந்த சாதகர்களுக்கும் எழக்கூடிய சந்தேகம் மேற்கண்ட வரிகளில் விலகிவிடும்.

மற்றொரு சமயம், பகவானுடைய உபதேசத்தின் சாராம்சம் என்னவென்று தாம் கருதியதை, பின்வருமாறு அவர் எனக்கு விளக்கினார்.

"சத்தியம் ஒன்றே. இந்த சத்தியமே, உத்தாலகரால் ஸ்வேதகேதுவுக்கும், யமதர்மனால் நசிகேதுவுக்கும், யாக்ஞவல்கியரால் கார்கி, மைத்ரேயி, ஜனகருக்கும் போதிக்கப்பட்டது. இதுவே சுகப்பிரம்மம் வியாஸரிடம் பெற்றது. வசிஷ்டர் இராமனுக்கு உபதேசித்ததும் இதுவே. கண்ணன் யுத்தகளத்தில் அருச்சுனனுக்கு புகட்டியதும் இந்த சத்தியத்தைத்தான். சங்கரரிடம் மண்டனமிச்ரர் அடைந்ததும் இதுவே. ராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு இதையே அருளினார்".

உபநிஷத்துக்களின் சாரமும், தான் அனுபவித்து அறிந்ததுமான இந்த ஒப்புயர்வற்ற அனாதி சத்தியத்தை நம் குருநாதர் எல்லையற்ற கருணையினால் நமக்குத் தந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்யறிவே ஜீவனின் சுபாவ நிலை. உடலோ, புலன்களோ, மனமோ அல்ல. அறிவு, ஆகாயம்போல் சூக்சுமமானது. உடலுள் உள்ளதுபோல் தோன்றினாலும், நீரில் மிதக்கும் தாமரையிலை போலும், நீர் வாழ் ஜந்துக்கள் போலும், ஆன்மாவான அறிவு, உடலில் ஒட்டுவதில்லை. மேலும் நீரிலும், நிலத்திலும், காற்றிலும் கலந்திருந்தாலும் ஆகாயம் எப்படி அவற்றில் ஒட்டாதோ அதே போல் ஆன்மாவும் உடல், மனம் இவற்றில் வியாபித்திருந்தாலும் அவற்றால் பாதிக்கப் படுவதில்லை. இதற்கு பிறப்பு இறப்பில்லை. பந்தமும் மோஷமும் கிடையாது. உணர்வே நம் சுபாவநிலை. இதுதான் பகவான் அழுத்த மாகச் சொல்வது."

பிறிதொரு சமயம் ஆத்மவிசாரம் செய்வதற்கு சரியான முறையென்ன என்று கேட்டதற்கு பகவான் "எப்போதும் எல்லா சூழ்நிலைகளிலும், தன் உண்மையை ("நான்" என்று இலங்கும் வஸ்து) மறவாதிருக்க வேண்டும். இந்த நினைவோடு உலகில் தன் கடமைகளைச் செய்யும்போது செய்யும் வினையிலோ அல்லது அவற்றின் விளைவுகளிலோ பற்றுதல் ஏற்படுவதில்லை. இந்த நிலை வலுவடையும் போது சாதகன், தான் முன்னேற்றமடைவதை அறிந்து கொள்கிறான். எல்லோரும் இதை (நான் யார்? என்ற விசாரத்தை) சதா அப்பியாசிக்க வேண்டும்.

இதற்கு பகவானே சிறந்த உதாரணம். எல்லாவித வேலைகளும் சுறுசுறுப்பாகச் செய்வார். ஆனால் நிதானமாக அவை நடைபெறும். இலைகள் தைத்து அடுக்கப்படும். தேங்காய் ஓடுகள் கமண்டலங்களாக உருமாறும். முள் தடி தங்கக் கைகளால் சீவி மெருகேற்றப்பட்டு அழகிய கைக்கோலாகப் பிறப்பெடுக்கும்.

சமையற்கட்டில் பகவான் மாவரைத்தும், காய்கறி நறுக்கியும் உதவுவார். சமையலும் செய்வதுண்டு. இந்தப் பவரோக வைத்தியன், சமயத்தில் நாய்க்கும், குரங்குக்கும் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சியாகவும் உருமாறுவார். இவைகளையெல்லாம் பகவான் பற்றேதுமின்றி மிக நேர்த்தியாகச் செய்வார்.

நம் செயல்கள் பற்று இல்லாமல் இருக்கின்றனவா என்று எப்படி அறிவது? நாம் கருவிகள் மாத்திரமே; அவனே நம் மூலமாக எல்லாச் செயல்களையும் செய்விக்கின்றான். என்று எப்போது உணர்கிறோமோ அப்போதே பற்று அற்றுவிட்டது என்று அறியலாம். பரம்பொருள் நம்மூலம் இவைகளை செய்கிறது என்று நம் முழு உணர்வும் உணரும். இந்த அடக்கமே ஆன்மீக முதிர்ச்சியின் அடையாளம்.

சம்பூர்ணம்மாள் பகவான் காலத்தில் சமையலறையில் உதவியாக இருந்தவர். ஒரு சமயம் கொஞ்சம் கற்கண்டும், பழமும் கொண்டு போய் பகவானுக்குக் கொடுத்தாராம். இதையெல்லாம் எனக்குத் தந்து என்ன பயன்? "உன் மனதை அல்லவா சமர்ப்பணம் செய்ய வேண்டும்" என்றாராம் பகவான். ஒருநாள் சம்பூர்ணம்மா என்னிடம் வந்து, பகவான் சமாதிமுன் கீழ்க்கண்ட கருத்துடைய ஆவுடையக்கா[ஜ] பாட்டை பாடியபோது தனக்கு இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததாகத் தெரிவித்தார்.

"என் ஐயனே! நான் உன்னிடம் பெற்ற அருளுபதேசத்திற்கு ஈடாக உனக்களிக்க ஏதும் என்னிடம் காண்கிலேன்; இப்பிரபஞ்சம் அனைத்தும் உன் அருளொளி; உனக்கேதும் அளிக்க முயல்வது பெரும் பிழையன்றோ? ஈவதென்றாலும் எதை ஈவது? என் உடல், மனம், ஆவி இவ் வையத்தின் பொருள் யாவும் நின்னருள் மொழி ஒன்றினுக்

[ஜ] ஆவுடையக்கா தென்னாட்டைச் சேர்ந்த ஞானி. அவருடைய வேதாந்தப் பாட்டுக்களை பகவானின் தாயார் மலைமேலிருந்தபோது பாடுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாகுமோ? உனையன்றி இவ்வவணியில் வேறெதுவுமுண்டோ? எதைத் தருவேன் நான் உனக்கு? கூண்டுப் புழுவுக்கு அளித்திடும் உபதேசம் ரீங்கரிக்கும் வண்டுக்கு உத விடுமோ? குழம்பினேன் கூட்டிச் செல்வாயோ!

பலராம ரெட்டியார் பகவானின் பழம் பெரும் பக்தர். நல்ல கல்வியறிவு உள்ளவர் பகவானைப் பற்றி பேசுவதென்றால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. அவரிடமிருந்து பெற்ற தகவல் களில் ஒன்று.

ஒருநாள் வைணவப் பக்தரொருவர் பகவானருகில் சென்று மிக வினயமாக வினா வினார். "பகவானே! பகவத்கீதையில் 'சர்வ தர்மான் பரித்யஜ்ய' (அத் 18:66) என்ற ஸ்லோக மல்லவா எல்லா அறிஞர்களும் கீதையின் முக்கிய ஸ்லோகமாகக் கருதுகிறார்கள். அது வைணவர்களுக்கும் முக்கிய ஸ்லோகமாயிற்றே. அதை பகவான் தேர்ந்தெடுக்காததன் காரணம் என்ன" என்று கேட்டார். அதற்கு பகவான் "அதே அத்தியாயத்தில் அதற்கு முன்வரும் ஒரு ஸ்லோகத்தை அதற்குப் பதிலாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறேனே!" என்றார். (அத்-18:62)

பகவானின் இந்த ரத்தின சுருக்கமான விளக்கத்தை ரெட்டியார் எனக்கு விரிவாக விளக்கினார். அறுபத்தாறாவது ஸ்லோகத்தில் "எல்லாத் தர்மங்களையும் விடுத்து என் ஒரு வனையே சரணடைவாய்" என்று வருகிறது. இது எதிர்மறையானது. இதையே அறுபத்து இரண்டாவது ஸ்லோகத்தில் "அவனையே சரணடை எவ்வாற்றும் பாரத" என்று நேர்முக மாகச் சொல்லப்படுகிறது. கீதையில் பதினெட் டாவது அத்தியாயத்தின் இந்த இரண்டு ஸ்லோகங்கள், ஒரே கருத்தை வலியுறுத்து பவையே. அணுகுமுறைதான் வேறு.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:
(அத். 18:66)

(எல்லாத் தர்மங்களையும் தியாகம் செய்து என் ஒருவனையே சரணாக அடைவாய், நான் உன்னை சர்வ பாபங்களினின்றும் விடுவிப்பேன்; வருந்தாதே.)

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேன பாரத
தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்
(அத். 18:62)

அவனைச் சரணம் அடைகஎவ் வாற்றும்
அவனருளால் சாந்தி யடைவாய் - அவனருளால்
ஈறில்லா அப்பதமும் எய்துவாய் பாரதனே
பேறிதனில் இல்லை பிற.

-ஸ்ரீ பகவான் பகவத் கீதாசாரத்தின் 42ஆவது பாடல்)

1929இல் துவக்கப்பட்ட ஆச்ரம மருத் துவமனையின் முதல் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஐயர்; தீவிர பக்தர்; சாதகர். அவரிடம் சற்று பழகினால் போதும், அவருடைய உயர்ந்த ஆன்மீக முதிர்ச்சி தெளிவாகத் தெரியும். திரு வண்ணாமலை ஊருக்குள் இருந்த அவ ருடைய வீடு எனக்கு சிறு வயதிலிருந்தே மிகப்பழகிய ஒன்று. பகவானது மகா சமாதிக் குப் பிறகும் அவர் தினம் பகவான் சமாதி ஆலயத்திற்கு வந்து ஒரு பக்திப்பாடல் பாடி விட்டு கிரிபிரதஷிணம் போவார். எனக்கு அவ ரிடம் மிகுந்த மதிப்பு. ஒரு சமயம் நான் நோயுற்று, மிக அபாயகரமான கட்டத்திலிருந் தேன். ஆனாலும், கிருஷ்ணமூர்த்தி ஐயரிடம் தான் வைத்தியம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் செய்து வெற்றியும் பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் மிகுந்த கருத்துடனும் அன்புடனும் கவனித்து சிகிச்சை செய்து என்னைக் குணப் படுத்தினார். அந்த நாட்களில்தான் அவருடைய ஆன்ம தாகத்தின் தீவிரத்தைத் தெரிந்து கொண்டேன். பகவானைப் பற்றி சொல்லும்படி அவரைக் கேட்டுக்கொண்டேன். சில அரிய விவரங்கள் கிடைத்தன.

"பகவானுக்கு ஒரு சமயம் விக்கல் எடுத்து என்ன செய்தும் நிற்கவில்லை. தொடர்ந்து இடைவிடாமல் விக்கிக் கொண்டே யிருந்தது. எனக்குத் தெரிந்த எந்த சிகிச்சை யும் பலன் தரவில்லை. நாட்கள் சென்றன. எந்த மருந்தும் வேலை செய்யவில்லை. வைத் திய சாஸ்திரத்திற்குத் தெரிந்த அத்தனை மருந்துகளும் தோல்வியுற்றன. விக்கல் நிற்க வில்லை. பகவான் உடல்நிலை பலவீனமாகி மோசமாகிக் கொண்டே போனது. மனம் சோர்ந்து தவித்து ஒருநாள் சோதித்துப் பார்த்த பொழுது பகவானது நாடி மிகத் தளர்ந்து பலவீனமாகி இருந்தது. நான் நடுங்கிச் சோர்ந் தேன். பகவானின் அந்திம நாட்கள் நெருங்கு கின்றனவோ? குருநாதனின் முன் நின்று முறை யிட்டேன். மானசீகமாக வேண்டி இறைஞ்சி னேன். "பிரபோ! உன்னைக் குணப்படுத்த நீயே எனக்கு வழிகாட்டு" என்று மனம் துவண்டு அழுதேன்.

தாளாத வேதனையைச் சுமந்து கொண்டு யாரிடமும் பேசாமல் வீடு திரும்பி னேன். நேராக அறைக்குச் சென்று விழுந்து விக்கி விக்கி அழுது ஓய்ந்து என்னையும் அறியாமல் உறங்கிவிட்டேன். பகவான் என் கனவில் தோன்றி "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். என்ன செய்வேன்; இந்தக் கொடிய விக்கலிலிருந்து பகவானைக் காப்பாற்ற எனக்கு வழி தெரியவில்லையே! என்றேன். அழாதே; உன் வீட்டு புழக்கடையிலிருக்கும் சீந்தில் கொடியின் இலைகளைப் பறித்து வந்து பசுவின் நெய்யில் வதக்கி, சுக்கு வெல்லம் சேர்த்து இடித்து, சிறு உருண்டை களாக உருட்டிக்கொண்டு வா" என்றார். கனவு மறைய நான் குதூகலத்துடன் எழுந்து ஒரு லாந்தரை ஏற்றி எடுத்துக்கொண்டு புழக் கடைக்குப் போய் அந்தக் கொடியைத் தேடி னேன். சீமெண்ட் பூசிய ஒரு சிறு மூலையில் சிறிதே இடைவெளி இருந்த இடத்தில் புதர் மண்டி இருந்தது. என் மனைவியும் நானும் மங்கிய லாந்தர் வெளிச்சத்தில் ஆர்வத்துடன் தேடியதில் ஒரே ஒரு சீந்தில் கொடி அகப் பட்டது. பரபரப்புடன் அதன் இலைகளைப் பறித்து வதக்கி, கனவில் பகவான் சொன்ன படி முறையாகத் தயாரித்து எடுத்துக்கொண்டு ஆச்ரமத்துக்கு விரைந்தோம். அதிகாலையில் ஆச்ரமத்தை அடைந்து ஹாலில் நுழைந் ததும் சோபாவில் வீற்றிருந்த பகவான் கையை நீட்டி "நீ கொண்டு வந்ததைக் கொடு" என்று கேட்டு வாங்கி அந்த உருண் டையை விழுங்கினார். கனவில் நடந்ததை எல்லாம் நான் சொன்னபோது அமைதியாக ஏதுமறியாத பாவத்துடன் கேட்டுக்கொண்டார், அந்த சூத்திரதாரி. வெகு சீக்கிரம் விக்கல் நின்று, பகவான் பழைய ஆரோக்கிய நிலைக்குத் திரும்பியதைச் சொல்லவும் வேண்டுமோ?"

(தொடரும்...

## கொடி மரத்தடியில்

**கோவில் சென்றதும், சிலைக்கு எதிராக விழுந்து வழிபடுவதைவிட கொடி மரத்தருகே விழுந்து வணங்குதல் சிறந்தது. ஏனென்றால், கோவிலுக்கு உள் பிரகாரத்தில் பலப்பல மூர்த்திகள் இருப்பதனாலும் சில அதி தேவதைகள் சூட்சுமமாக இருப்பதனாலும் அங்கே கால்நீட்டி விழுந்து வணங்குதல் (சாஷ்டாங்கம்) கூடாது.**

**-அறநெறிச்சிந்தனை-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெருங்கோயில் ஒரு கலைப் பெட்டகம்

திரு மு.க. மாசிலாமணி அவர்கள்



"அருள்நிறை தேசம்", "அற்புதங்கள் நிறைந்த நாடு", "புண்ணிய பூமி" எனப் பலவாறு போற்றப்படும் பாரதநாடு, ஆன்மீகத்தில் உச்சிக்கே சென்று வெளிக்கொணர்ந்த கொள்கைகள், கோட்பாடுகள், சமய தத்துவங்கள் ஆன்மீக சிந்தனைகள் அவற்றினடியாகத் தோன்றிப் பெருவளர்ச்சி பெற்ற நுண்கலைகள் ஆகியவற்றினூடாக உலகின் ஒட்டு மொத்தப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மிகக் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. இந்தியக் கட்டட நிர்மாணங்களைப்பற்றி ஆய்வு மேற்கொண்ட ஜேம்ஸ் பேர்கூசன் என்ற பேரறிஞர் கூறுவதுபோல் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே, சமயமும் அதுசார்ந்த தெய்வ வழிபாடும் இந்தியப் பண்பாட்டில் மிக முக்கியத்துவமுடைய பின்னிப் பிணைந்த பிரிக்க முடியாததொரு முதன்மைக் கூறாக இடம்பெற்று வந்துள்ளமையும் அத்தகையதொரு அரிய பங்களிப்பினை உலகப் பண்பாட்டிற்கு வழங்க இந்தியாவிற்கு முடிந்துள்ளது எனலாம்.

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரம்பொருளான இறைவனை விக்கிரக வடிவில் வார்த்து உலகிலுள்ள பொருட்களில் எவையெவை அழகானவையோ எவையெவை சிறந்தவையோ அவையனைத்தையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கோயிலினுள் பிரதிஷ்டை செய்து வழிபடவேண்டுமென்ற பெருந்தலங்களே உலகம் வியந்து போற்றும் ஒப்பற்ற கட்டிட, சிற்ப, ஓவியக் கலைக்கூடங்கள் பாரதநாடு முழுவதும்- குறிப்பாகத் தமிழகம் முழுவதும்- தோன்றக் காரணமாயின. கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்துத் தெய்வங்களுக்கென நிர்மாணிக்கப்பட்டிருந்த கோயில்கள் பற்றிப் புறத்துறை நூல்களில் பல குறிப்புகள் காணப்பட்டாலும் அவற்றுட் பல அழிந்திருக்கலாம் அல்லது பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம்.

கருங்கற்களால் நீடு நின்று நிலைக்கும் கோயில்கள் நிர்மாணிக்கும் கட்டிடக்கலை கி.பி 7ஆம் நூற்றாண்டிலிருந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மகேந்திரவர்மன் போன்ற பல்லவர் களாலும் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பாண்டியர்களாலும் ஆரம்பிக்கப்பட்டுப் பல கற்கோயில்கள் நிர் மாணிக்கப்பட்டன. காஞ்சி கைலாசநாதர் கோயில், மகாபலிபுரக் கோயில்கள், திருப் பரங்குன்றக் குகைக் கோயில்கள் எனக் கருங் கற்களாலும் மலைப்பாறைகளைக் குடைந்தும் பாரிய கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டன வாயினும் கோயில் நிர்மாணிப்பதில் உலகமே வியக்கும் சாதனைகளை நிகழ்த்தியவர்கள் கி.பி. 850-1350 வரை தமிழகத்தை ஆண்ட சோழப் பெருமன்னர்களே. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதுமே கருங்கற் கோயில்களால் நிரப்பப்பட்டன என்று கூறினால் மிகையாகாது. அவர்களிலும் கி.பி. 985-1014 வரை தமிழ்நாட்டின் "தானியக் களஞ் சியம்" என வர்ணிக்கப்படும் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த 1ஆம் இராசராசன் என்ற சோழப் பெருவேந்தன் ஆட்சிக் காலம் இந்திய வரலாற்றில் மிக முக்கியத்துவமுடைய காலப்பகுதியாகும். போர், அரசியல், நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதாரம், சமயம், நுண்கலைகள் என எல்லாத் துறைகளிலும் பிரமிக்கத்தக்க பல சாதனைகள் நிலைநாட்டப்பட்ட காலமாக அப்பேரரசனது ஆட்சிக்காலம் சிறப்படைந்தது. தமிழகம், கேரளம், ஆந்திரநாடு, கர்நாடகம், ஒரிசா, மகாராட்டிரம், இலங்கை அரபிக் கடலைச் சூழ்ந்த லட்சதீவு, மாலைதீவு ஆகிய அனைத்துப் பிரதேசங்களும் நாடுகளும் பெரும் படைகளின்மூலம் சோழராட்சிக்குட் படுத்தப்பட்டுச் சோழப்பேரரசு பரந்து விரி வடைந்தது. தமிழ்நாட்டு மன்னர் எவரும் பெற் றிராத பெரு வெற்றிகளைப் பெற்ற இம்மன்னன் தன் ஆளுகைக்குட்பட்ட பெரும் பேரரசை மிகச் சிறப்பாக நிர்வகிப்பதற்கான திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பையும் அமைத்துக் கொண்டான். மறைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் வேதமான தேவாரத் திருப்பதிகங்களைத் தேடிப்பெற்று முதல் ஏழு திருமுறைகளாக வகுப்பித்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்தான்.

சிறந்த சிவபக்தனான இராசராசன் "சிவபாதசேகரன்" எனத் தனக்குப் பட்டம் சூடிக்கொண்டதுடன் எந்நாட்டவர்க்கும் இறைவ னான தென்னாடுடைய சிவனுக்குத் தனக்கு முன்னர் யாராலும் நிர்மாணித்திராத வகையில் மிகப்பிரமாண்டமானதும் அளவிலும் வனப் பிலும் உலகமே வியந்து போற்றும் ஒப்பற்ற கலைக் கோயிலை நிர்மாணித்து வரலாற்றில் அழியாப் புகழைத் தனதாக்கிக் கொண்டான். "சோழப் பேரரசின் விரிந்து வரும் பரப்புக்கும் வளர்ந்து வரும் வசதிக்கும் ஓங்கி வரும் அதிகாரத்திற்கும் பொருத்தமாகக் கட்டிடக் கலையிலும் தமிழருடைய சாதனையாகத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் அல்லது "இராஜராஜீச்சரம்" என்ற பெருங்கோயிலை நிர்மாணித்ததன் மூலம் தமிழர் கண்ட ஒரு பேரரசின் ஆற்றலையும் பெருமிதத் தோற்றத் தினையும் சோழர்கள் உலகிற்கு அறிவித்தார் கள்" எனச் சோழர் வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதிய பேராசிரியர் நீல கண்ட சாஸ்திரி குறிப்பிடுவது *மனம் கொள்ளத்தக்கது.

சிவகங்கை என்ற கோட்டைக்கருகே அமைந்துள்ள இக்கோயிலுக்கு அழகான சிற்பவரிசைகளுடனான "கேரளாந்தகன்" "இராச ராசன்" என்ற இருகோபுர வாயில்களுள்ளன. இரண்டாம் கோபுர வாயிலுடன் தொடங்கும் 500 அடி நீளமும் 250அடி அகலமும் கொண்ட பெரிய கோயில் வளாகத்தினுள் முதலில் ஒரே கல்லாலானதும் 19.5 அடி நீளமும் 8.25அடி அகலமும் 12 அடி உயரமு மான மிகப்பெரிய நந்தி பார்ப்போரின் கண் களையும் கருத்தையும் கவரும் வகையில் கருவறையில் வீற்றிருக்கும் பெருவுடையாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருத்த லிங்க வடிவிற்கு மிகப் பொருத்தமாக அமைந்து காட்சி தருகின்றது. இந்தியா விலுள்ள மிகப்பிரமாண்டமான இரண்டாவது பெரிய நந்தி இதுவெனக் கூறப்படுகின்றது. கோயிலை முன்நோக்கிச் செல்ல மகா மண்டபம், அர்த்த மண்டபம் எனச் சிற்பங்கள் நிரம்பிய தூண்களால் தாங்கப்பட்ட மண்டபங் களைக் கடந்து செல்லக் கர்ப்பக்கிரகமும் அதனுள் பெருவுடையார் அல்லது பிரகதீஸ்வரர் மிகப் பிரமாண்டமான லிங்கவடிவில் வீற்றிருக்கின்றார். 14அடி உயரமுடையதும் பார்ப்போர் உள்ளத்தினை நெகிழ வைப்பது மான இந்த லிங்கம் இந்தியாவில் மட்டுமல்ல உலகிலேயே மிகப்பெருத்த லிங்கம் இது வென்றே கூறப்படுகின்றது. லிங்கத்தின் ஓரமாகச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மாடத்தின் மேல் நின்றே லிங்கத்திற்கு அபிஷேகம், அலங்காரம் என்பன இடம்பெறுகின்றன. இப் பெருத்த லிங்கம் வீற்றிருக்கின்ற கருவறை யைச் சுற்றி 216 அடி உயரத்திற்கு வடிவ அமைப்பிலும் அழகிலும் உயரத்திலும் வியப்பூட்டும் சிற்பக்கலைத் திறனிலும் உலகப் புகழ்பெற்ற "தட்சிணமேரு" என்ற விமானம் விண்ணை முட்டுவதுபோல் மிகக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

உலகப் புகழ்பெற்ற எகிப்திய பிரமிட்டுக் களைப்போல் சதுர வடிவிலமைந்த அகன்ற அடிப்பாகத்திலிருந்து சுமார் 50அடிவரை நேராக மேல் நோக்கி உயரும் விமானம், அவ்விடத்திலிருந்து மேலே உயர உயரக் கீழுள்ள தளத்திலும் அதன் மேலுள்ள தளம் ஒடுங்கி ஒடுங்கி அவ்விதம் 10வரையான தளங் கள் உயரத்திற்கு உயர்ந்து செல்கின்றது. தரையிலிருந்து 190அடி உயரம் வரை உயர்ந்து சென்ற விமானத்தின் உச்சியில் படிப்படியாகக் குறுகிச் சென்ற சதுர வடிவான தளத்தின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு நந்தி அமர்ந்திருக்க உருண்டைக் கற்களிலான சிகரத்தால் மூடப்பட்டு அதன்மேல் செப்பில் வார்க்கப்பட்டுப் பொன் முலாம் பூசப்பட்ட 12அடி உயரமான கலசம் பொருத்தப்பட்டு மிக எடுப்பான எழிலான தோற்றத்தில் காட்சி தரும் இவ் விமானத்தினை எக்கோணத் திலிருந்து பார்த்தாலும் அதன் வனப்பு அதிசயிக்கத்தக்கதாகவே காணப்படுகின்றது.

மண்டபங்கள், கருவறை, விமானம் ஆகியன உள்ளும் வெளியும் சிற்பம், ஓவியம் நிரம்பிய கலைப்பெட்டகமாகவே விளங்கு கின்றது. உட்புறத்தில் அமர்ந்த கோலத் திலான சிவன், நடனமாடும் ஆடல் வல்லான், திருமாலுக்குச் சக்கரம் கொடுக்கும் காட்சி, மார்க்கண்டேயருக்கு அருள் செய்யும் யம சங்கார மூர்த்தியின் சிற்பத் தொகுப்பு, பரத நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் ஆடல் வல்லா னின் அரிய தாண்டவங்கள், துவார பாலகர் உருவங்கள் ஆகியனவும் விமானத்தின் வெளிப்புறச் சுவரில் வரிசையாகச் செதுக்கப் பட்ட போர் வீரர்கள், சிங்கங்கள், குதிரைகள், யாழிகள் என இன்னும் பல நேர்த்தியாகவும் பார்ப்போர் உள்ளத்தினை நெகிழ வைப்பன வாகவும் உயிர்த்துடிப்புடையனவாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இக் கோயில் வழிபாட்டி லுள்ள நடராசர் வடிவம் அதிசய வனப்புமிக்க ஓர் ஒப்பற்ற படைப்பு எனக் கூறப்படுகின்றது. இச் செப்புத் திருமேனியின் பேரழகை உற்று நோக்கும்போது

"........ இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே"

என்ற அப்பர் பெருமானின் தேவார அடிகள் தான் நினைவுக்கு வரும். தமிழர் உருவாக்கிய நடராசர் சிற்பம் பிரபஞ்ச சிருஷ்டி தத்துவத்தின் விளக்கம் மட்டுமல்ல உலகிலுள்ள மகோன்னதமான கலைப்படைப்பு என்றும் இந்தியக் கலையின் சிகரம் என்றும் ஆனந்தக்குமாரசாமி போன்ற கலா விற்பன்னர்களால் போற்றப்பட்டதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்களைப் போலவே விமானத்தின் கீழ்ச் சுற்று அறைகளிலும் உட்சுவர்களிலும் அதியற்புதமான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமானின் திரிபுர சம்காரக் காட்சி, சுந்தர மூர்த்தி நாயனாரின் வாழ்க்கைச் சம்பவங்கள், சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கயிலை செல்லும் காட்சி, இராவணன் கையிலையைப் பெயர்த்தல், அமர்ந்த நிலையிலுள்ள தட்சணாமூர்த்தி, இசைவல்லுனர்கள், ஆடல்மகளிர் இன்னும் பல உயிரோட்டமுடைய அருமையான ஓவியங்கள் காட்சி தருகின்றன. சுவர் ஓவிய வரலாற்றில் உலகப் புகழ் பெற்ற அஜந்தா, சித்தன்னவாசல் ஓவியங்களுக்கடுத்த நிலையில் தஞ்சைப் பெரிய கோயிற் சுவரோவியங்கள் மிகச் சிறந்தவை என்கிறார் கே.ஆர். சீனிவாசன். புராணக் கதைகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் உயிரோட்டமுடைய அதிஅற்புதமான சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் கல்லிலும் செப்பிலும் வடித்துள்ள சோழர் காலக் கலா விற்பன்னர்கள் உலகமும் கலையும் உள்ள வரை போற்றப்படுவர். தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் தஞ்சைப் பெருங் கோயில் பற்றிய பல செய்திகளை மிகத் துல்லியமாகக் கூறுவதாகவும் 1ஆம் இராசராசன் தான் நிர்மாணித்த இக்கோயில் தொடர்பான விடயங்களில் எவ்வளவிற்கு உன்னிப்பாகவும் கண்ணும் கருத்துமாக செயற்பட்டான் என்பதனைக் காட்டுவதாகவும் உள்ளன. அது மட்டுமன்றிப் பல போர்களில் வெற்றியீட்டி அவற்றின்மூலம் பெற்ற திரண்ட செல்வம் அனைத்தையும் இராசராசன் இக்கோயிலுக்கே வழங்கியதாகவும் அவனது சகோதரி குந்தவை, அவனது மனைவிமார்கள் இக்கோயிலுக்கு வழங்கிய நன்கொடைகளையும் மிகச் சரியாகக் கணக்கிட்டு பட்டியல்படுத்திக் கல்வெட்டுக்களில் பொறித்துள்ளான் எனக் கல்வெட்டுக்களை வாசித்து ஆய்வு செய்த அறிஞர் கூறுவர். இக் கோயிலில் தேவாரம் ஓதுவதற்கென 48 ஓதுவார்களையும் நடனமாடுவதற்கு 400 தேவரடியார்களையும் நியமித்து அவர்களுக்குப் பெரும் செல்வங்களை வழங்கியதாகவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. 216அடி உயரமான விமானம் முழுவதும் இராசராசனால் பொற் தகடுகளால் போர்த்தப்பட்டுப் பொற்கிரியாக அது விளங்கிய தென்றும் கூறுவர். பாரத நாட்டில் தஞ்சைப் பெருங்கோயில் ஒன்றுதான் பொற்கோயிலாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இச் செய்தியினை நாயக்கர்காலப் புலவரான ஒட்டக்கூத்தர் தான் பாடிய தக்கயாகப் பரணியில்,

"......... தமனியத்தாற் சீராசராசீச்சரஞ் சமைந்த
தெய்வப் பெருமாளை வாழ்த்தினவே நீடிய வெண்டிசை
நீழல் வாய்ப்ப நேரிய தெக்கிண மேருவென்ன........"

எனத் தெக்கிண மேரு எனப்படும் தஞ்சை இராசராசேச்சுரத்தை இராசராசன் பொற்கோயிலாக நிர்மாணித்தானென்பர். ஒன்பதாந் திருமுறை ஆசிரியரான கருவூர்த்தேவர் இவர் இராசராசன் காலத்தில் வாழ்ந்த ஒரு ஞானி. தான் பாடிய திருவிசைப்பா பதினொரு பாடல்கள் கொண்ட ஒரு பதிகத்தில் தஞ்சைப் பெருங்கோயிலை.......

"........இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரத் திவர்க்கே"

எனப்பாடிப் போற்றியுள்ளார்.

திருப்புகழாசிரியர் அருணகிரிநாதர், "வாழ்பதிக்குயர்ந்த தஞ்சை மாநகர் ராஜகோபுரத்தமர்ந்த பெருமாளே" எனத் தஞ்சைப் பெருங்கோயிலில் அமர்ந்து அருளாட்சி புரியும் இராசராசேச்சுரம் பெருமானின் பெரும்புகழைப் பேரருளாற்றல்களை உள்ளமுருகிப் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வளாகத்திலுள் கணபதி, முருகன், சுருவூர்த்தேவர் என 35 பரிவாரக் கோயில்கள், பல தெய்வச்சிலைகள் எனப் பல கோயில்கள் இருந்தாலும் தன்னைச் சூழவுள்ள கட்டட அமைப்புக்கள் அனைத்தை யும் மறைத்துக்கொண்டு தான் மட்டும் விண் ணோடு மோதுவது போன்று ஓங்கி உயர்ந்து மிக நீண்ட நெடுந்தூரத்திற்குக் காட்சியளிக்கும் இவ்விமானத்தின் பேரெழிலை வார்த்தைகளில் வடிக்கமுடியாதென இவ்விமானத்தின் அமைப் பையும் அழகையும் பார்வையிட்ட கலை வல்லுனர் பலரும் வியப்புறுகின்றனர்.

இவ்விதம் பிரமாண்டமான கட்டட நிர் மாணம், சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், ஓவியம், ஆடல், பாடல், கல்வெட்டுக்கள் என எல்லாக் கலைகளின் கருவூலமாக ஒட்டு மொத்தமாகத் தமிழக வரலாறு, கலை, பண்பாடு ஆகிய அனைத்தும் பொதிந்து திகழும் பெட்டகமான இக்கோயில் ஒப்பற்ற தொரு கலைக் கூடமாகவும் உன்னத வழிபாட் டிடமாகவும் சிறப்புப் பெற்றுள்ளது. இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வு இலாகாவினால் பேணப்பட்டுவரும் இக்கோயிலைச் சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனமும் (UNESCO) உலக பண்பாட்டுச் சின்னமாக அங்கீகரித்துள்ளது. "கல்லும் சொல்லாதோ கவி" எனக் கூறக் கேட்டிருக்கின்றோம். இறை பக்தி, விரிந்த அறிவு, வெற்றி, பெருமிதம், ஆற்றல், அழகு, நுட்பம் ஆகிய அனைத்தின தும் பிரமாண்ட வடிவமான தஞ்சைப் பெருங் கோயிலைச் சோழப் பெருவேந்தன் இராசராசன் நிர்மாணித்ததன் மூலம் கருங்கல்லில் கவிதை பின்னைப் பல்லூழியுள்ள காலம் வரை நீத்து நின்று நிலைக்கும் அரும் பெருங் காவியத் தையே படைத்துள்ளான்.

மகோன்னதமான இப்பெரும் படைப் பின் அருமை பெருமைகளை, நிபுணத்துவம் மிக்க கட்டடக் கலைஞருடைய நுட்பமான கட்டட நிர்மாண அறிவும் பெருங் கவிஞன் ஒருவனுடைய உணர்ச்சி மிகுந்த கற்பனை வளமும் தலைசிறந்த எழுத்தாளனின் வீச்சு மிக்க எழுத்தாற்றலும் ஒரு சேர வாய்க்கப் பெற்ற ஒருவராலேயே எடுத்துக்கூற முடியும். அத்தகையதொரு அதி உன்னதமான படைப்பு அது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| K. சிவஞானம் | | பிரான்ஸ் | 29439. 00 |
| தெய்வநாயகி சுப்பிரமணியம் | | கனடா | 100 டொலர் |
| முருகேசு சதாசிவமூர்த்தி | | கனடா | 50 டொலர் |
| சிவானந்தம் உதயகுமார் | | அல்வாய் | 2000. 00 |
| S.V. இராமச்சந்திரன் | | கொழும்பு | 8000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | | நெல்லியடி | 1000. 00 |
| சரவணப்பெருமாள் சத்தியமூர்த்தி | | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| சி. சிவஞானசுந்தரம் | | கனடா | 2000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | | நீர்வேலி 1மூடை அரிசி | 2000. 00 |
| திருமதி வித்யா குகராஜன் | நீதிமன்றம் | மல்லாகம் | 1000. 00 |
| ந. ஜெயரட்ணராஜா (இளை. உபதபாலதிபர்) | | இளவாலை | 5000. 00 |
| சற்குணராஜா கலைச்செல்வி | | நோர்வே | 2000. 00 |
| க.ம. செல்வரெட்ணம் | | நவாலி கிழக்கு | 3000. 00 |
| க. மகேஸ்வரி | | நவாலி வடக்கு | 1000. 00 |
| நாகநாதன் செல்வரெட்ணம் | | ஈவினை | 1000. 00 |
| து. சற்குருராஜா | | நல்லூர் | 1000. 00 |
| சுந்தரம் பிரதர்ஸ் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு தனசேகரம் குடும்பம் | | கம்பர்மலை | 10000. 00 |
| கந்தசாமி சிவஞாயகி | | உடுப்பிட்டி | 1000. 00 |
| சி. சக்திதரன் | புதுச்செட்டித்தெரு | கொழும்பு 1மூடை அரிசி | 2000. 00 |
| திருமதி பொன்னையா | | கொழும்பு | 2000. 00 |
| திரு புவனேந்திரன் | | நல்லூர் | 10000. 00 |
| T. பிரீத்தா | | லண்டன் | 1000. 00 |
| வடிவேலு கமலநாதன் | (டோகா) | காரைநகர் | 9000. 00 |
| திரு சசிகரன் குடும்பம் | பாரதிபுரம் | வவுனியா | 10000. 00 |
| சி. நடேசமூர்த்தி பிரசாத் | தோப்பு | அச்சுவேலி (3மாதம்) | 3000. 00 |
| கந்தசாமி குணசீலன் குடும்பம் | | கொழும்பு | 5000. 00 |
| M.R. சந்திரகோபன் குடும்பம் | | கந்தர்மடம் | 10000. 00 |
| பாரதி கல்வி நிலையம் | | சித்தங்கேணி | 5000. 00 |
| K. நவநீதன் | | சிறுப்பிட்டி | 5000. 00 |
| அ. வைஷ்ணவி | | லண்டன் | 5000. 00 |
| சிதம்பரப்பிள்ளை இலட்சுமி | | கரவெட்டி | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | | |
|---|---|---|---|
| செல்வம் கலைமதி குடும்பம் நோர்வே | | (மயிலிட்டி) | 1மூடை அரிசி |
| நேமிநாதன் அமிர்தசுரபி | நவக்கிரி | புத்தூர் | 3000. 00 |
| இ. பாலகுரு | சின்னமலை | தொண்டைமானாறு | 5000. 00 |
| குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | | பத்தமேனி | 1000. 00 |
| முகுந்தினி முகுந்தன் | | கனடா | 5000. 00 |
| இ. சுபாஸ்கரன் | | கொடிகாமம் | 5000. 00 |
| V. வரதன் | | நெதர்லாண்ட் | 15000. 00 |
| க. காஞ்சனா | | கனடா | 5000. 00 |
| செ. ரிஷிகேசன் | | கரணவாய் | 500. 00 |
| ஆறுமுகதாசன் அருண்பிரகாஷ் | | கரணவாய் 1மூடை அரிசி | 2000. 00 |
| இ. உதயசூரியன் | | கோண்டாவில் கிழக்கு | 2000. 00 |
| பெருமையினார் மீனாட்சிபிள்ளை நினைவு | | வரணி | 5000. 00 |
| இராசையா தங்கவேல் | | நவிண்டில் | 10000. 00 |
| சைவநெறிக்கூடம் | | சுவிஸ் | 8000. 00 |
| கந்தையா திலகவதியார் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பொன்னம்மா | | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| பேரம்பலம் நடராசா | | இடைக்காடு | 5000. 00 |
| சிதம்பரநாதன் சபேசன் | | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| மீயா மதன் (ம. ஸ்ரீகாந்தன் மூலம் அச்சுவேலி) | | ஜேர்மனி | 5000. 00 |
| ஆருய்ஜா சோதிலிங்கம் | | கனடா | 5000. 00 |
| திருமதி சின்னராஜா | | மட்டுவில் | 5000. 00 |
| கிருஸ்ணராசா சிவகாந்தன் | | கரவெட்டி மத்தி | 5000. 00 |
| த. கருணாகரன் | | கரவெட்டி மத்தி | 500. 00 |
| க. நவரெத்தினம் இளை. ஆசிரியர் | | நெல்லியடி | 2000. 00 |
| ஜெயக்குமார் குடும்பம் | | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| இராசதுரை சின்னத்தங்கம் | | கனடா | 5000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | தம்பசிட்டி | பருத்தித்துறை | 7000. 00 |
| திரு வசந்தகுமார் | | பிரான்ஸ் | 6000. 00 |
| அக்ஷயா கோபாலபிள்ளை | | வெள்ளவத்தை | 1000. 00 |
| விசயலெட்சுமி இந்திரா | சமரபாகு | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| ஜெயசீலன் | துன்னாலை வடக்கு | கரவெட்டி | 1000. 00 |
| நல்லதம்பி பராசக்தி | உசன் | மிருசுவில் | 5000. 00 |
| க. கனேஸ்வரன் (நல்லையா மூலம்) | | பிரான்ஸ் | 5000. 00 |
| இராசையா நினைவாக சி. ஸ்ரீதரன் | | கனடா | 5000. 00 |
| A. அரசபிள்ளைமூலம் சிவலிங்கம் குடும்பம், சுந்தரலிங்கம் குடும்பம் | | கல்வியங்காடு | 17000. 00 |
| தேவி அச்சகம் | | கொழும்பு | 4000. 00 |
| கந்தையா இராஜராஜன் | | கோண்டாவில் | 5500. 00 |
| குணசிங்கம் இரத்தினகுமார் | மணல்தெரு லேன் | கந்தர்மடம் | 10000. 00 |


(தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்







வாராந்த நிகழ்வினில் கவிமணி க. ஆனந்தராசா (அளவைதாசன்) அவர்களினதும், மா.ந. பரமேஸ்வரன் அவர்களதும் இசை நிகழ்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெள்ளி வாராந்த நிகழ்வினில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் குழுப்பாடல், பரதநாட்டிய நிகழ்வுகளின்போது, பாடசாலையின் அதிபர் இரா. ஸ்ரீநடராசா அவர்கள் உரையாற்றுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சந்நிதியானின் சரித்திர விழா

**கவிமணி அல்லைதாசன் அவர்கள்**

16.10.2011 ஞாயிறு ஈழ வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்னாள். மிக எளிமையாக ஆடம்பரம் ஏதுமின்றி அளவான கூட்டத்தினருடன், மிகப்பெரும் சேவையாளர்களுக்கு சந்நிதியான் திருவருளால்- சந்நிதியான் ஆச்சிரமத்திலால் பெருவிழா ஒன்று இனிதே நடந்து முடிந்துள்ளது.

இன்றைய நாட்களில் எது வெற்றுப் பாராட்டுவிழா எடுப்பதென்ற விவஸ்தையற்ற பல பாராட்டு விழாக்கள் நடைபெறுவதைப் பார்க்கிறோம். இன்று நம்மிடையே மிகச்சிறந்த அரசவேலை எது என்று ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் மாணவரைக் கேட்டாலும், அவர்கள் "வைத்தியப் பணியாற்றுவதே" எனக் கூறக் கேட்கலாம். காரணம் இதுவே மிகச் சிறந்த பணியெனப்படுவதே எம் எல்லோரதும் கருத்துமாகும். இது ஒருவேலை மட்டுமல்ல "மக்கள் பணி மூலமான மகேசன் சேவை" என்பதே உண்மையானதாகும்.

சிலவேளை உண்மையில் பாராட்டு விழாக்கள் தேவைதானா? என்ற கேள்வி எழவும் கூடும். ஆம்! இது அன்றைய காலத்திலும் இருந்திருக்கிறது. எம் பண்பாட்டுடன் ஒட்டியது. அதனை




எமது சந்நிதியான் ஆச்சிரமம் செய்து காட்டியுள்ளமையானது அவர்களின் பண்பாடு பேணும் பண்பினைப் பறைசாற்றி நிற்கின்றது. அவ்விழாவின் தனித்துவம் தற்போதைய செல்போனுக்குச் சார்ஜ் ஏற்றுவதைப் போன்றதே. சார்ஜ் ஏற்றிய செல்போன் வேலை செய்வதுபோல

அன்றைய பாராட்டு விழாவானது சேவையாளர்களை மேலும் ஊக்கப்படுத்துவதும், மற்றவர்களுக்கும் விழிப்புணர்வை ஊட்டி அவர்களையும் இப்பணியில் இணைய வாய்ப்புக் கொடுப்பதாகவும் உதவிநிற்கின்றன.

காலையில் வேற்பெருமானின் அபிஷேகத்துடன், சந்நிதியான் வாசலிலே மாலை அணிவித்து விழாவின் அமைப்பாளர்களும், விழாவின் நாயகர்களும் மங்கல வாத்திய சகிதம் மருத்துவ சேவைக் கட்டிடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். வில்லிசைக் கலைஞர் திரு க. சத்தியதாஸ் அவர்களது இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமானது. விழாவின் உரைகள் அனைத்திலும் முழுக்க முழுக்க சந்நிதியானின் திருவருளும் உந்துதலும் இது அவன் நடாத்திக்கொண்டிருக்கும் விழாவென்ற தொனிப்பொருளுமே நோக்கி நின்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சார்பாக இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய திரு கு. அருணகிரிநாதன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட தலைமையுரையும், பல் வைத்திய நிபுணர் டாக்டர் அ. செந்தில்குமரன் ஆற்றிய வரவேற்புரையும், வல்வையூர் அப்பாண்ணா நிகழ்த்திய ஆரம்ப உரையும், யாழ் மாவட்ட சுகாதாரசேவைப் பணிப்பாளர் திரு ஆ. கேதீஸ்வரன் அவர்களின் பிரதம விருந்தினருக்கான சிறப்புரையும், சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த பருத்தித்துறைப் பகுதிப் பிரதேச செயலர் திரு இ. வரதீஸ்வரன் அவர்கள், வல்வை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திரு க. மயிலேறும்பெருமாள் ஆகியோரின் சிறப்புரைகளும் அற்புதமாக அமைய "இன்னும்



அவர்கள் சற்றுநேரம் பேசியிருக்கலாமே" என ஏங்கவைத்து பார்வையாளர்களைத் தூங்க வைக்காதிருந்ததும் சந்நிதியானின் அற்புதமே. யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர், தமது பல முக்கிய கடமைகளின் மத்தியிலும், எமது பண்பாட்டுக்கு அமைவாக உடையுடன் விழாவிற்கு வந்திருந்து உரையாற்றிச் சென்றமை உன்னதமாக அமைந்திருந்தது.

14.10.2001இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இலவச மருத்துவ சேவையானது பத்து வருடங்களைப் பூர்த்தியாக்கி, பதினோராவது வருடத்தில் காலடி வைக்கும் வேளையிது. இந்த மருத்துவ சேவையில் தம்நலம் கருதாமல், நேரம் பார்க்காமல் வந்து கடமைபுரிந்த அறுவரும் தற்போது கடமையில் உள்ள இருவருமாக விழாவின் நாயகர்கள் எண்மர் அழைக்கப்பட்டிருந்தனர். இவ் இலவச மருத்துவ சேவையில் முன்பு கடமையாற்றிய டாக்டர்கள்.

| | |
|---|---|
| **திரு சி. கதிரைவேற்பிள்ளை,** | **கண் வைத்திய நிபுணர் திரு ச. குகதாசன்,** |
| **திரு மா. யோகேஸ்வரதேவன்,** | **திரு கே. ஞானசீலன்,** |
| **மகப்பேற்று நிபுணர் வே. பவானி,** | **திரு சி. இராமலிங்கம்** அவர்களுடன் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது கடமைபுரிந்து வருகின்ற டாக்டர்கள்

**திரு பொன். சின்னத்தம்பி,**

**திரு சி. சிவயோகதுரை**

ஆகியோருமே பொன்னாடை போர்த்தி கோபரங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்ட விழாவின் நாயகர்களாவர். இந்த விழாவின் நாயகர்கள் அனைவரும் ஏற்புரை நிகழ்த்தி விழாவினைக் கலகலப்பாக்கினர்.



இலவச மருத்துவசேவையின் பத்தாண்டு கால சேவைக்காலத்தில் ஏற்பட்ட சிரமங்கள், அனுபவங்கள், பயன்கள் இவையாற்றையெல்லாம் ஆச்சிரம சுவாமிகள் மிக அற்புதமாக எடுத்தியம்பி, இத்தனைக்கும் சந்நிதி முருகனே சாட்சியாகவும், சான்றாகவும், கைப்பிடியாகவும் உள்ளான் என தமது உரையில் தெளிவுபடுத்தினார். மொத்தத்தில் சரியான வேளையில் சரியானவர்களை அழைத்து கௌரவப்படுத்தியமை ஆற்றங்கரை அழகனின் தூண்டுதலில், அவன் அடியான் மோகனதாஸ் சுவாமிகளால் முன்னெடுக்கப்பட்ட நேர்த்தியான விழாவாகும். அன்றைய தினத்தில் சந்நிதியான ஆச்சிரமத்தில் அன்னபூரணையில் மருத்துவ சேவைக் கட்டிடத்தில் நடந்தேறிய இந்நிகழ்வானது ஏனைய ஆலயங்களுக்கும் அறப்பணி நிலையங்களுக்கும் உதாரணமாக அமைவதுடன், இப்பணிகள் நின்று நிலைத்து பரந்து விரிந்து முருகனின் வேல் போல ஆழ்ந்து அகன்று வளரவேண்டுமென வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமூக வாழ்வியலில் சைவமும் பெண்மையும்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

சைவம்; அன்பு, தொண்டு என்னும் இரு குணவியல்புகளையும் மக்களிடையே பரப்புவதல்ல ஒரு வாழ்வியல் நடைமுறையாகும். எனவே பெண்மையின் மூலம் இதை நிறைவேற்றலாமெனச் சேக்கிழார் நல்லதொரு வழியைக் காட்டியுள்ளார். பெண்மையின் வளர்ச்சி நிலைகளிலே சைவ வாழ்வியலைப் பொருத்திக் காட்டியுள்ளார். தாய், மனைவி, மணப்பெண், சகோதரி என்ற உறவு நிலையும் வளர்ச்சி நிலையும் எவ்வாறு சிறப்பாகப் பெண்மையைச் சைவப்பேணலுக்கு ஆட்படுத்தியுள்ளது என்பதைப் பெரியபுராணம் மிகச்சிறப்பாக விளக்கியுள்ளது.

சைவ சமய வழிபாட்டு நடைமுறைகளைப் பேணும் நிலையில் பெரியபுராணத்தில் பேசப்பட்ட மனைவியர் அனைவரும் சமூகக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளனர். சமூகத்தில் நிலவிய பரத்தமையைக் கண்டிக்க வழிபாட்டு நிலையில் திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்ட திருநீலகண்ட நாயனாரது மனைவியார் கணவனின் ஒழுக்க மீறலைத் தடுத்த பெருமைபெற்றவராகிறார். அதே போன்று தனது தெய்வீக நிலை கண்டு, விட்டுச் சென்ற கணவன் மறுமணம் செய்த போது, அந்தக் குடும்ப வாழ்வைச் சிதைத்துச் சமூகச் சிக்கலை ஏற்படுத்தாமல் துறவு வாழ்வை மேற்கொண்டு சைவ சமயம் சிறக்கப் பாடல் பாடிய பெருமை பெற்ற புனிதவதியை இறைவனே "நம்மைப்பேணும் அம்மை" என அழைக்கும் பேறு பெற்றவர். தமிழ்ப் பக்தி இலக்கிய முன்னோடியாக விருத்தப்பாவை அறிமுகம் செய்து சைவச் சமூகத்திற்குச் சிறப்புத் தேடித்தந்தவர்.

விருந்தோம்பல் என்னும் இல்லறக் கடமையைக் கணவன் செவ்வனே ஆற்றுவதற்குத் துணைநின்றவர் அப்பூதியடிகளின் மனைவியார். புதல்வன் அரவந்தீண்டி இறந்தபோதும் அடியவருக்கு அமுது செய்விக்கும் கடமையைச் செய்தார். சைவத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்று அளவிடற்கரியது. பிள்ளைக்கறி கேட்டு வந்தவரிடம் மனங்கோணாமல் தனது ஒரு மகனை வாளால் அரிந்து கறிசமைத்து விருந்தோம்பிய சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையின் தொண்டு இறைவனைச் சோமாஸ்கந்தமூர்த்தி வடிவில் காணும் பயன் தந்தது.

வேடர் சேரியில் குறிஞ்சிக் கடவுளான முருகன் கோயில் பணி செய்த பூசாரியான தேவராட்டியின் சமூகக் கடமையும் குறிப்பிடத் தக்கது. கண்ணப்பர் கன்னி வேட்டைக்குச் சென்றபோது தலைமரபின் வழிவந்த தேவராட்டி அழைக்கப்படுகின்றாள். வேடர் சமூகம் வழிபாட்டு நெறியில் பெண்மைக்கு முதலிடம் வழங்கியிருந்த நிலையை பெரியபுராணம் பதிவு செய்துள்ளது. அம்மூதாட்டியின் தோற்றத்தைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு காட்டுகிறார்.

> கானில்வரித் தளிர்துதைந்த கஞ்ணிசூடிக்
> கலைமருப்பின் அரிந்தகுழை காதில்பெய்து
> மானின்வயிற்று அரிதாரத் திலகம் இட்டு
> மயிற்கழுத்து மனவுமணி வடமும்பூண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்இழிந்து திரங்கிமுலை சரிந்துதாழத்
தழைப்பீலி மரவுரிமேல் சார எய்திப்
பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப்
போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள்

சமயத்தைப் பேணும் நிலையில் அம்மூதாட்டியின் கோலப் புனைவுகளும் காணப்படுகின்றன. வாழ்க்கையில் பல துன்பியல் நிகழ்வுகளைச் சந்தித்த திலகவதியார் அப்பரைச் சைவத்திற்கு மீட்டுத் தந்தவர். சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் சைவசமயம் வாழ்வியலுக்குப் பயன்தராது எனச் சமணத்திலே சேர்ந்தவர்அப்பர். தனது பெற்றோரும் சமூகமும் வணங்கி வழிபட்ட இறைவனை வழிபடும் கடமையைத் துறந்தவர். திலகவதியாரின் வழிபாடு அவரை மீண்டும் சைவத்திற்கு அழைத்து வந்தது. அவர் திருநாவுக்கரசராக 81 வயதுவரை வாழ்ந்து சைவச் சமூகத்திற்கு வழிகாட்டச் செய்தது. சரீரத் தொண்டைச் சமூகம் அறிய அப்பருடைய வாழ்வியல் வழிகாட்டியது.

பாண்டிய மன்னன் சமண சமயத்தைச் சார்ந்த போது குடிகளும் அவன்வழிச் சென்றனர். ஆனால் அரசனின் மனைவி மங்கயர்க்கரசி சைவ வழிபாட்டில் உறுதியாக நின்று சம்பந்தருடைய துணையோடு மீண்டும் மன்னன் சைவம் சாரப் பணி செய்தவர். அதனால் அவர் "தென்னவர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை" எனப் போற்றப்பட்டவர். வாழ்க்கையில் சைவம் உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்ற கோட்பாட்டில் பெண்கள் உறுதியாக இருந்ததைப் பெரியபுராணம் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. மங்கயர்க்கரசி, காரைக்காலம்மையார், இசைஞானியார், ஆகிய மூவருக்கும் பெரியபுராணம் சிறப்பிடம் கொடுத்துள்ளது. தாய் என்ற நிலையில் "சுந்தரரை" இன்னொருவருக்கு கொடுத்த தனித்துவமான தாயாக இசைஞானியார் புகழ்பெற்றுள்ளார். சமூகப்பயன்பாட்டிற்கு அவர் செய்த மகட்கொடை அற்புதமானது.

## ஞானத்திரு நாடாய்

கடலோரத் தெய்வமே — நீ
காத்தருளும் கந்தா — எங்கள்
இடர் களைந்து எம்மினத்திற்க்
கினிய காலமதைத்தந்து — முடிவில்லா
தொடர் யுத்த தொல்லைகள்
முற்றாய் நீக்கி — முருகா!
சுடர் மிளிரும் ஞானத்திரு
நாடாய்யாக்கு எம்மீழமதை!

-இராம ஜெயபாலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுட்டாலும் பால் சுவையில் குன்றாது

**“சுட்டாலும் பால் சுவையில் குன்றாது**
**நட்டாலும் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்.”**

நல்ல பாலை எவ்வளவுதான் சுண்டக் காய்ச்சினாலும் அதனுடைய உண்மையான சுவை சிறிதும் குறையாமல் இருக்கும். மாறாக சுவையை அதிகரிக்கச் செய்யும்.

அதுபோல பண்புடைய மேலோர் எப்போதும் வழங்கும் கொடைத்தன்மை உடையவராகவே திகழ்ந்தோங்குவா.

அவர்கள் வறுமையில் வாடமாட்டார்கள். கடலில் இருந்து எடுக்கப்பட்ட சங்குகளை எவ்வளவு நெருப்பிலிட்டுக் காய்ச்சினாலும் சுட்ட அச்சங்குகள் நீறானாலும் ஆகும். அதன் நிறம் மாறாமல் முன்பிருந்ததைக் காட்டிலும் அதிக வெண்மையுடன் தோற்றமளிக்கும்.

அதைப்போல நட்பின் பெருமை அறியாத பண்பற்றவர்களுடன் நெருங்கிப் பழகிய போதிலும் நல்ல நண்பர்களாக இருக்கமாட்டார்கள். இது அக்காலத்திலேயே ஔவையார் அவர்கள் கணித்திட்ட கணிப்பாகும்.

நண்பன் என்பவன், தன் நண்பனுக்கு ஒரு துன்பம் என்றால் அதை உடன் அகற்றிட முயல்பவனாய் இருக்கவேண்டும். நண்பனுடைய துன்பமும் இன்பமும் தனக்குற்றதாகக் கருத வேண்டும். பயணங்களில் ஏற்படும் நட்பன்று உண்மை நட்பு. அது இரண்டாகப் பூமியைப் பிரித்து வேர்விடும் மரத்தைப்போன்றது நட்பு.

வெட்டாம்பட்டி என்ற ஊரில் மருதாசலம் என்பவன் வாழ்ந்து வந்தான். அதே ஊரில் வேங்கடநாதன் என்பவனும் வாழ்ந்து வந்தான். இருவரும் ஒன்றாகவே படித்தனர். பிறகு எல்லா விளையாட்டுக்களிலும் இருவரும் சேர்ந்து ஆடுவர்.

இவர்கள் இருவரும் கூடிப்படிப்பர். மருதாசலத்தின் அப்பா அம்மா பணக்காரர்கள். ஆகவே அவர்கள் வேங்கடநாதனையும் தன் மகனைப்போன்று பாதுகாத்தனர்.

இருவரும் ஒரே தட்டில் சிற்றுண்டி உண்பர். ஒரு குவளை நீரை இருவரும் பருகுவர். ஒரு பாயில் இருவரும் ஒரு தலையணையிலேயே படுத்து உறங்குவர்.

வேங்கடநாதனின் தாய் தந்தையர் அவனுக்கு அவ்வப்போது அறிவுரைகள் கூறுவர். வேங்கடநாதனும் மருதாசலமும் சேர்ந்து படிப்பதால் ஒருவரை ஒருவர் கேள்விகேட்டு இருவரும் ஒருவருடைய விடைத்தாளை மாற்றித் திருத்திப் பிழைகளை மீண்டும் சரிசெய்து எழுதிப் பழகி வருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதாசலத்தின் வீட்டில் தினமும் இட்டிலி, வடை, பொங்கல், பூரி, அடை, புட்டு, தோசை, இடியப்பம் இப்படிப் பலவும் இருக்கும். ஆனால் மருதாசலத்திற்கு அவை எல்லாம் சாப்பிட்டு அலுத்துவிட்டது. அதனால் மருதாசலம் வேங்கடநாதனின் வீட்டில் செய்யும் பச்சைப்பருப்புப் போட்ட கஞ்சி, பழைய சாதம், மோர் மிளகாய், தயிர், கூழ், வடுமாங்காய், புதினா சட்டினி ஆகியவற்றை அவன் விரும்பிச் சாப்பிடுவான். வேங்கடநாதன் படிப்பு முடிந்ததும் தன்னுடைய பெயரை அருகிலுள்ள தலைமை அலுவலகத்திலுள்ள வேலைவாய்ப்பு மையத்தில் பதிவுசெய்து வைத்திருந்தான்.

ஆகவே வேங்கடநாதனுக்கு அரசுபணியில் வேலை கிடைத்தது. அவன் எழுதுவினையராகப் பணியாற்றினான். மருதாசலத்தின் தாய் தந்தையருக்குக் கடும்நோய்வாய்ப்பட்டு செல்வமெல்லாம் அழிந்தது.

பிறகு அவர்களைக் காக்கும் பொறுப்பும் மருதாசலத்தின் முக்கியக் கடமையாயும் ஆனது. அப்போது அவன் தன்னுடைய நண்பனைச் சந்தித்து விவரங்களைச் சொன்னான்.

உடனே மருதாசலத்தின் படிப்புச் சான்றிதழைக் கொண்டு வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்தான். பின்னர் அவனை தான் வசிக்கும் பகுதியில் உள்ள தட்டச்சுப் பயிற்சிக்கூடத்தில் சேர்த்து அவனுக்குரிய பயிற்சித் தொகையை வேங்கடநாதனே கட்டிப் படிக்கச் செய்தான்.

மருதாசலம் நன்கு பயின்று முதல் மாணவனாகத் தேறினான். அவனுக்கு உடனே வேலையும் கிடைத்துவிட்டது. தட்டச்சு தெரிந்ததால் நல்ல பணியில் சேர்ந்தான். அவனுடைய வருவாய் முழுவதையும் மருதாசலத்தின் தாய் தந்தையருக்குக் கொடுக்கச் செய்தான். வேங்கடநாதன் மருதாசலத்தை தன் வீட்டில் வைத்து உணவளித்து போசித்து வந்தான். மருதாசலத்திற்கு திருமணமானது. அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு "வேங்கடவன்" என்று பெயர் சூட்டி அழைத்து வந்தான்.

மருதாசலமும் வேங்கடநாதனும் உடலால் வேறுபட்டாலும் உள்ளத்தால் ஒன்றுபட்டவர்களேயாவார்கள்.

நண்பர்கள் இருவரும் ஈருடல் ஓருயிர்போல் வாழ்ந்தனர். ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ மாட்டார்கள். எந்த ஒரு செயலையும் இருவரும் ஆலோசித்துச் செய்திடுவார்கள்.

ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம், இன்பம், துன்பம் ஆகிய அனைத்திலும் ஒன்றாகவே இருப்பர். அவர்களுடைய குடும்பத்தில் அவரவர் அவர்களின் பிள்ளை, சகோதரன் என்றே நினைப்பர். அத்தகைய இணை பிரியாத நண்பர்கள்.

ஆலோசனை கூறுவதில் மந்திரியாய், கடிந்து கொள்வதில் தந்தையாய், அன்புகாட்டுவதில் தாயாய், அரவணைப்பதில் சகோதரனாய், மேல்படிப்புக்கு முயற்சிக்க வைப்பதில் நல்ல குருவாய்..... எல்லா வகையிலும் வேங்கடநாதனை மருதாசலத்தின் குடும்பத்தினர் கடவுளாகவே நினைந்து வந்தனர் என்பது வெள்ளிடைமலையே.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (குறள்)

நாட்டின் பெருமையை அறிந்த பண்புடையவர்களுடன் நெருங்கிப்பழகியபோதும் கடிந்து சினந்துகொண்டாலும் நல்ல நண்பர்களாகவே இருப்பர் அல்லவா! நண்பர்களே, நீங்களும் சிறந்த நண்பர்களாய் இருங்கள்!



noolaham.org | aavanaham.org

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்-

படலம்-58



## திருவாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

பாண்டிவள நாட்டிலே வைகையாற்றின் கரையிலுள்ள திருவாதவூரிலே பிராமண குலத்திலே பாலசூரியன்போல ஒரு புத்திரன் சிவபெருமான் திருவருளினாலே திருவவதாரஞ் செய்தான். அவனுக்கு திருவாதவூரர் என நாமஞ் செய்தனர். அவர் வளர்ந்து பதினாறு வயசினுள்ளே வேதம் முதலான அறுபத்து நான்கு கலைகளையும், வேத விதிப்படியான எல்லாச் சடங்குகளையும் கற்று வல்லவரானார். திருவாதவூரரின் கல்வித் திறமைகளை அறிந்தவர்கள் சொல்லக்கேட்டு, அவரை வரவழைத்து, பல வரிசைகளையும் அளித்து தனது மந்திரிகளுள் ஒருவராக நியமித்துங் கொண்டான் பாண்டியன். திருவாதவூரர் படைக்கலப் பயிற்சியினை நன்குணர்ந்திருந்தாலும், மநுசாஸ்திர நீதி நூல்களை ஐயந்திரிபறக் கற்றதனாலும், மற்றெல்லா மந்திரிமாரை விடவும் சிறந்து விளங்கினார். அதனால், அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரை முதன் மந்திரியாக்க, அவரும் மன்னனுக்கு கண்ணும் இமையும் போலவிருந்து, தமது நாட்டைக் காத்து வந்தார்.

இப்படியிருக்கு நாளிலே, "மெய்ப்பொருளெது? பொய்ப்பொருளெது?" என்று பகுத்தறியும் விருப்பம் இவர் மனத்திலுண்டாயது. "மல சம்பந்தத்தை நீக்கி என்னை எனக்கு அறிவிக்கின்ற ஞானாசாரியன் வருவது எப்போது" எனச் சிந்தித்தார். தன்னிடம் வரும் பலரிடமும், தான் செல்லுகின்ற பல இடங்களிலும் உள்ள பலருடனும் மெய்ப்பொருளை ஆராய்ந்தார். ஆனாலும், தமக்குச் சரியான ஞானாசாரியன் கிடைக்காததால் மெய் சோர்ந்து, சிவபெருமானின் சிந்தனையிலேயே மூழ்கியபடி தமது அரச கருமங்களையும் கவனித்தபடி இருந்தார்.

ஒருநாள் அரசவையில் திருவாதவூரர் வீற்றிருந்த வேளையில், குதிரைப் பந்தி காப்போன் அரசன் முன்வந்து, "மகாராஜாவே! நம்மிடமுள்ள குதிரைகளில் வெள்ளத்தில் இறந்ததுபோக மிகுதி நோயுடையதும், மூப்புடையதும் ஆயின. நல்ல குதிரைகள் இல்லை" என்று தெரிவித்தான். அரசன் திருவாதவூரரை நோக்கி, "நீர் எமது பண்டாரத்தைத் திறந்து வேண்டும் பொருள் எடுத்துக் கொண்டுபோய், சமுத்திரக் கரையினில் வந்திறங்கும் குதிரைகளைத் தெரிந்து வாங்கி வருதிர்" என்று கூறி விடுத்தான்.

அரசன் கூறியவாறே, திருவாதவூரர் பண்டாரத்தைத் திறந்து, பொற்குவைகளை எடுத்து ஒட்டகங்களில் ஏற்றி முன்செல்ல விடுத்தான். தான் திருக்கோயில் சென்று மீனாட்சியம்மையையும், சோமசுந்தரக் கடவுளையும் வணங்கி, "எம் பெருமானே! இத்திரவியம் அனைத்தையும் தேவரீருக்கும் தேவரீர் அடியார்களுக்கும் உகந்ததாய்ச் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அடியேனுடைய குறை இதுவே" என்று விண்ணப்பித்து விடைபெற்று சிவிகை மேலேறிச் சென்றார்.

இவ்வாறு வேண்டுதல் செய்துகொண்டு திருவாதவூரர் சென்ற பின், சோமசுந்தரக் கடவுள் ஒரு பிராமண ஆசாரியராகித் திருப் பெருந்துறைக்குச் சென்று, மாணவர் புடைசூழ ஒரு குருந்தைமர நிழலில் வீற்றிருந்தார். பிறவிக் கடலைக் கடக்க வரும் திருவாதவூரர் காட்டு வழி கடந்து, பெருங் கருணைக் கடலாகிய ஞானாசாரியன் வீற்றிருந்த திருப்பெருந் துறையை அடைந்தார். அவ்விடத்தை அணுக அணுக, ஆனந்தம் மிகுதிபெற சிரசின்மேற் கைகூப்பி பார்ப்போர் "உன்மத்தர்" என்று நகைக்கும்படியாக நடந்து சென்று திருக் கோயிலை அடைந்து சிவபெருமானை வணங் கித் திருக்கோயிலை வலம் வந்தவேளை ஞானாசாரியர் எழுந்தருளியிருந்த குருந்தை மரத்தை எதிரே கண்டார். குருந்தைமர நிழ லில் எழுந்தருளியிருந்த கருணைக்கடலான பரமாசாரியாரைத் தரிசித்து வணங்கி கைக ளைச் சிரமேற் குவித்து, தன்னை மறந்த நிலையில் சிவபெருமானது திருவருள் வலை யில் அகப்பட்டுக்கொண்டார்.

திருவாதவூரர் உடல்- பொருள்- ஆவி மூன்றினையும் நீரோடு தத்தம் செய்ய, அத னைப் பரமாச்சாரியர் ஏற்று தமது திருவடித் தாமரையைச் சூட்டி திருக்கரத்தைச் சிரசின் மேல் வைத்து அவரைச் சிவசொரூபமாக்கினார். திருவாதவூரர், தம்மையும், தாம் வந்த நோக்கத் தையும் முற்றாக மறந்து, தம்வசமிழந்து அனலிடப்பட்ட மெழுகுபோல உருகி அழுது பாமாலை புனைந்தார். மெய்யன்பராகிய திரு வாதவூரருக்கு "மாணிக்கவாசகன்" என்னும் திருநாமத்தை ஞானாசாரியாராகிய சிவபெரு மான் கொடுத்தருளினார். மாணிக்கவாசகர், ஞானாசாரியரின் மாணாக்கர்கள் அவ்விடத்து ஓதுகின்ற ஆகமப் பொருட்களையும், உப நிடதப் பொருள்களையும் கேட்டு, அதில் விருப்பமுடையவராகி அங்கிருந்தார். அதனைச் சிவபெருமான் பார்த்தருளி, அதிமதுரமாகிய அவரது பாடல்களை- சிலகாலம் செவிமடுக்க வும், அவர் கொண்டுவந்த பொருள்கள் எல்லா வற்றையும் கவர்ந்து- அதன்மூலம் அரிமர்த்தன பாண்டியனுக்கு அவரது பெருந்தகைமை களை அறிவிக்கவும், புத்தரை வாதில் வெல்ல வும் திருவுளம் கொண்டார். மாணிக்கவாச கரைப் பார்த்து, "இங்கே நீ செய்யவேண்டிய கருமஞ் சிறிதுண்டு. ஆதலால் சிலகாலம் இங்கிருப்பாய்" என்று கட்டளையிட்டு அடியார் கூட்டத்தோடு மறைந்தருளினார்.

சிவபெருமான் கனாத்தோற்றம்போல தோன்றி மறைதலும், மாணிக்கவாசகர், அந்தப் பிரிவினைத் தாங்க மாட்டாதவராய் விழுந்து அழுது புலம்பலானார். ஒருவாறு தெளிந்து எழுந்து, கோபுர வாயிற் புறத்தே தமக்காகக் காத்துநின்ற படைஞர்களை நோக்கி, நீங்கள் முன்னே போய், "குதிரைக்கூட்டங்கள் ஆடி மாசத்தில் வருமென்று பாண்டிய ராசனுக்குச் சொல்லுங்கள்" என்று கூறி அனுப்பினான். அதுகேட்டு, அரசனும், குதிரையின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

பாண்டியன் குதிரை வாங்கும்படி கொடுத்த திரவியமெல்லாவற்றையும், மாணிக்க வாசகர், சிவபெருமானுடைய பூசை திருவிழாக் களிலும், ஆலயத் திருப்பணி வேலைகளிலும், அடியார்களுக்கு உபயோகித்துவிட்டு திருப் பெருந்துறையிலேயே தங்கியிருந்தார். ஆடி மாதம் வந்ததும், பாண்டியராஜன் "இன்னும் ஏன் குதிரைகள் வரவில்லை" எனக்கேட்டு மாணிக்கவாசகருக்குத் திருமுகம் அனுப்பி னான். மாணிக்கவாசகர் அதனை வாங்கி வாசித்து "இனிச் செய்வதென்ன?" என யோசித்து சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக் கோயிலை அடைந்து குறையிரந்து நின்றார்.

"எம்பெருமானே! பாண்டியன் தந்த பொருளெல்லாவற்றையும் உம்முடைய ஆல யத்துக்கும் அடியார்களுக்காகவும் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய அருள்பாலித்தீரே! இனி நான் எதைக் கொண்டு அரசனுக்குக் குதிரைகள் வாங்கு வேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். சிவ பெருமான் அசரீரி வாக்கால், "குதிரையெல் லாம் வருமென்று அரசனுக்கு ஓலை அனுப் புதி" என அருளிச் செய்தார். மாணிக்கவாசகரும் அதுகேட்டு, மகிழ்ந்து அரசனுக்குத் திருமுகம் எழுதி அனுப்பினார். அரசனும் மகிழ்ந்து குதிரையின் வரவை நோக்கியிருந்தான்.

சிவபெருமான் அன்றிரவு நித்திரை யிலிருந்த மாணிக்கவாசகர் கனவிலே, குருந்தை மர நிழலிலே வந்து ஆண்டருளிய ஆசாரிய வேடங்கொண்டு எழுந்தருளிவந்து, "பாண்டி யனுடைய மனதைக் கவரத்தக்க குதிரை களை யாம் கொண்டு வருவோம். நீ முன்னே செல்லுதி" என்று அருளிச் செய்தார். "தேவர் களுங் காணாத எம்பெருமான் கருணை வடிவு நமக்குக் கனவிலும் நனவிலும் எளிதாயிற்றே" என்று நித்திரையினின்றும் விழித்தெழுந்த மாணிக்கவாசகர் வியப்புற்று திருப்பெருந் துறைச் சிவனை வணங்கி விடைபெற்று பாண்டியனிடம் சென்றார். மாணிக்கவாசகரைக் கண்ட பாண்டியன், "எவ்வளவு பொன் கொண்டு போய் எத்தனை குதிரை வாங்கினீர்?" என்று கேட்டான். "மகாராசாவே! நான் கொண்டு போன பொன் பொருளுக்கும் அளவில்லை; வாங்கிய குதிரைகளுக்கும் அளவில்லை. அக் குதிரைகள் பின்னே வருகின்றன. கண்டு கொள் வாய்" என்று கூறிய மாணிக்கவாசகர் சொற் கேட்டு மகிழ்ந்து, அவருக்குப் பாண்டியன் பல வரிசைகளும் கொடுத்து, அவரை மாளி கைக்கு அனுப்பி வைத்தான். மாணிக்க வாசகரும் மிக்க மகிழ்வோடும் நிம்மதியோடும் பொற்றாமரை வாவியிலே நீராடி சோமசுந் தரரை வணங்கி, "எம்பெருமானே! குறித்த வேளையில் குதிரைகள் வருவது எவ்வாறு" என்று விண்ணப்பித்தார். "மெய்யன்புடை யோனே! அஞ்சற்க! சூரியனுடைய தேர்க் குதிரைகள் போலுங் குதிரைகள் வந்து சேரும்" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. நிம்மதியடைந்த மாணிக்கவாசகர் தம் மாளிகை புகுந்தார்.

திருவாதவூரரை அவர் சுற்றத்தாரும் உறவினரும் சந்தித்து, "நீர் கூறியபடி நாளை எப்படிக் குதிரைகள் வரும். அப்படி வராவிட் டால் அரசன் உம்மீது பெருங் கோபங் கொள் வானே! ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்" என உண்மையான அன்போடு விசாரித்தனர். "சிவபெருமான் ஆசாரிய வேடங்கொண்டு என்னை அடிமைகொண்ட அன்றே யாம் எல் லாப் பற்றுக்களையும் நீக்கிவிட்டோம். பதவி, பட்டம், சுற்றம், சுகம் அனைத்தும் நீங்கி விட்டது. அதனால் என்னைத் தண்டித்தாலும் கவலையில்லை. சொர்க்கமோ நரகமோ எது வரினும் நாம் அதனை அனுபவிக்கத் தயார்" என்று மாணிக்கவாசகர் சுற்றத்தார்க்கு எடுத்துக்கூறி, அவர்களை அனுப்பிவிட்டு மாளிகையிருந்தார்.

## எங்கும் நம்மோடு வருவது

**வேறு ஊருக்குக் குடிமாறிப் போகும்போது நீ தேடிய பொருளை உடன் கொண்டு போகின்றாயன்றோ! இந்த உடம்பை விட்டு நீ புறப்படும்போது உன் செல்வம் உன்னுடன் வரவேண்டாமா? வர வேண்டுமானால் தருமஞ் செய். "எங்காயினும் வரும் ஏற்றவர்க்கு இட்டது" பூசை செய்யும் நேரம் உன்னுடைய நேரம்; தருமஞ் செய்த பணம் உன்னுடையது; நீ செய்த அறம் கட்டமுது போல் உனது பெரிய யாத்திரையில் இனிது உதவும்.**

**-சைவ நற்சிந்தனை-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கா சினியை நேர்த்தியாக்கும் ஆசிரியம் லத்தால் ஒருபோதும் தோற்பதில்லை

திரு கே.எஸ்.எஸ். ராஜா அவர்கள்



ஒக்ரோபர் 06 குருவைப்போற்றும் திருநாள். ஆசிரிய அவதாரத்தை வணங்கிப் போற்றுகின்ற சந்தர்ப்பம், ஒரு வருடத்தில் ஒரு நாளிலாவது மாணவர்களுக்குக் கிடைத்திருப்பது, அவர்தம் பெற்றோர்களுக்கு மிகுந்த மகிழ்வினைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. காரணம் ஒரு நாட்டின் விழுமியம், ஆசிரிய- மாணவர் பங்களிப்பிலேயே தங்கியுள்ளதெனலாம். அந்த வகையில் குருவணக்கம் ஆற்றும் சமூகம் எமது நாட்டில் உயிர்ப்புடன் வேருன்றியிருக்கின்ற செய்தியானது ஆசிரிய சமூகத்தினை ஊக்கமளிப்பதாக உள்ளது. புராதன காலத்திலிருந்து போற்றப்படும் மாதா, பிதா, குரு, தெய்வ, இயற்கை வழிபாடுகள், மற்றும் ஒப்படைக்கப்படுகின்ற பாரம்பரியங்கள், எப்போது அலட்சியம் செய்யப்படுகின்றதோ அப்போதே ஒரு நாடானது தனது அடையாளங்களைக் கைகழுவி இழக்க நேரிடும். ஆனால் மனித குலத்தினை நேர்த்தியாக வெல்ல வைப்பதில் ஆசிரியம் ஒருபோதும் தோற்றதும் இல்லை. தோற்பதும் இல்லை. மாறாக அதனைப் பொறுப்பாக்கும் பொறுப்பாளிகள் அக்கடமைக்குப் போலிக் கௌரவம் அளிப்பார்களாயின் உலகம் நேர்த்தியாக இயங்கமுடியாது. ஆசிரியமானது ஆண்டவனால் தரப்படும் ஒரு அட்சய பாத்திரம். அதனை யாரும் மூடிவிடமுடியாது. மூடவும் கூடாது. காரணம் நாளும் பொழுதும் தேடத்தேட, ஆசிரியமெனும் அட்சய பாத்திரம் வற்றாது, குறையாது. நிரம்பி வழியும். அது நிரம்பி வழியும் இடம்தான் பாடசாலையாகும். இதனை யார் யார் கொட்டாமல்- சிதறாமல் பெற்றுக்கொள்கிறார்களோ அவர்களே மாணவர்களாவர். இது தொடர்பாக ஆசிரியம் தூற்றப்படுவதற்கு யாருமே பங்காளிகளாக இருந்துவிட முடியாது. மாறாக இதனை போற்றப்படுவதற்காக இறைவன் பல சந்தர்ப்பங்களை ஒவ்வொரு குழந்தைகள் மூலமாக அருளியுள்ளான். அக்குழந்தைகளை நாட்டுக்கு ஏற்ற அறிவார்ந்த, பண்புள்ளதான ஒரு பிரஜை ஆக்குவதே ஆசிரியத்தின் கடமையாகும். இக்கடமையில் எங்கு,எப்போது தொய்வு ஏற்படுகிறதோ, அவை சீக்கிரமாக வீதிக்கு வந்துவிடும்.

**ஆசிரிய சமூகம்:-**

ஆசிரியராகப் பிறப்பவர்களோ, இறைவனுக்கு அடுத்தபடியாக ஏட்டிலும், நாட்டிலும், வீட்டிலும், றோட்டிலும், கோட்டிலும் உன்னதமாகப் போற்றப்படும் அறிவார்ந்த பாத்திரங்கள். ஆம் அட்சய பாத்திரங்களே! இப்பாத்திரங்களை அலங்கரிப்பவர்கள் ஒவ்வொருவரும் தினம் தினம், கணம் கணம், அறிவைத் தேடுபவர்களாகவும், அறிவார்ந்த அனுபவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குபவர்களாகவும் உயிர்ப்புடன் இருக்கவேண்டும். மற்றும் அரசு தரும் ஒவ்வொரு சிவன் சொத்துக்களையும் பேணத்தெரிவது மட்டுமல்ல பேறாக்கவும் தெரியவேண்டும். மேலும் கடமை நேரத்தினைக் கணக்குப் பார்க்காமல், அப்பாலும் கனவிலும்கூட ஒரு பாடசாலையைப்பற்றி, மாணவர்களைப்பற்றி, அவர்தம் வளர்ச்சிபற்றி எந்தவொரு ஆசிரியன் சிந்திக்கிறானோ அவன் ஒரு தெய்வம்தான்! எழுத்தறிவினை நேரம், காலம் பார்க்காமல் ஊட்டுபவன் இறைவன்தானே. ஆம், அர்ப்பணிப்புள்ள, அனுபவமுள்ள, மூத்த வயதினையுடைய, தளர்ந்து போயுள்ள ஆசிரியர்கள் பலர் பயனுள்ள ஒரு சந்ததியை உருவாக்கியபோதும், தேசிய விருதுகளுக்கோ, பதவிகளுக்கோ, ஏனையவர்களை அடிமைப்படுத்த விரும்பாத நிலையில் இந்த நாட்டில் வெல்லப்படுகிறார்கள். ஆசிரியத்திற்கு 60 ஒரு எல்லையல்ல. அது ஒருபோதும் அடிமையாவதுமில்லை.

# அகவை 80 காணும் மாதாஜிக்கு நிறைவான வாழ்த்துக்கள்

சிவமயச் செல்வி, சைவநன்மணி, புலவர்மணி, ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி "மாதாஜி" அவர்கட்கு (குப்பிளான்) 12.11.2011 உடன் அகவை 80 ஆகிறது. இந்த வயதிலும் அவர்கள் ஆற்றிவரும் சமயப்பணிகள் அளப்பரியவை. விளம்பரத்தையோ விமர்சனங்களையோ எதிர்பாராமல் மிக அமைதியாக- ஆனால் ஆழமாக மாதாஜி அவர்கள் ஆற்றிவரும் பணிகளை சந்நிதியான் ஆச்சிரமம் உளமார வாழ்த்தி வரவேற்கின்றது.

நவராத்திரி நாயகி தோத்திரமாலை போன்ற இன்னும் பல நூல்களை வெளியிட்டு வருகின்றமை அவர்களது பணியில் முதன்மை பெறுகிறது. இன்னமும் "மாதாஜி" அவர்களால் ஆற்றப்படவேண்டிய சமயப் பணிகளுக்காக நிறைந்த ஆயுளையும் நீடித்த உடற் சுகத்தையும் கொடுக்க சந்நிதி செவ்வேளை வேண்டி நிற்கிறோம்.

-பேரவையினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மண்ணில் ஏன் பிறந்தேன்?

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

ஆன்ம விசாரம் செய்யும் ஒருவனுடைய சிந்தனை. மனிதன் பிறக்கின்றான். என்ன நோக்கம்? பூமியில் அவனுக்கு என்ன வேலை? கா்ம வினையை அனுபவித்துமுடிய என்னிடம் வருவாய் என்று அனுப்பியவன் இறைவன். கா்மவினை முற்பிறப்பிலுள்ளதாகலாம் இப்பிறப்பிறவியினதுமாகலாம். நல்லனவற்றைத் தேடி அறிந்து செய்யவேண்டும். அதுவே அவன் தொழில். "........... இந்த ஊன் எடுத்த ஜென்மம் பின்செய்த தீவினை யாது ஒன்றும் இல்லை பிறப்பதற்கு முன்செய்த தீவினைதான்" இந்தப் பிறவி கிடைத்தது என ஒரு அருளாளா் சொல்ல, "அவையத்தோா் பிறந்தவா றேதோ வெண்ணில் பெரு நோய்கள் மிகநலியப் பெயா்த்தும் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என அப்பா் சுவாமிகள் பாடியுள்ளாா்.

மனிதன் பூமியில் பிறக்கின்றான். என்றோ ஒருநாள் அவன் பூமியை விட்டுப்போக வேண்டும். மனிதன் விரும்பாத ஒன்று மரணம். அது எப்போவரும்? எப்படி வரும் என்பது யாருக்கும் தெரியாது. உடம்பு மரணிக்கும், ஆன்மா (உயிா்) மரணிப்பதில்லை.

"காலன் வருவான், கண்பாா்வை மங்கும்
வாயில் ஊற்றிய பால் கடைவாயால் வழியும்
உற்றாா் உறவினா் கூடி அழுவா்
ஊராா் சுடுவாா்கள்" நிச்சயம் இது நடக்கும்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உள்ள வாழும் காலத்தில் முன்செய்த கா்மபலனை அனுபவிக்கும்போது தெரிந்தும் தெரியாமலும் மேலும் சில பாவகாரியங்கள் செய்து மறுபிறப்புக்கும் வித்திடுகின்றான்.

மனிதவாழ்க்கை சமயம் சாா்ந்ததாயிருக்கவேண்டும். நன்நெறியில் வாழவும், அமைதியையும் தருவது சமயம். சமயம் என்ன சொல்கிறது? சிவபெருமானே முழுமுதற் கடவுள். அவரை மெய்யன்போடு வழிபடு. மனம், மொழி, மெய் இம்மூன்றினாலும் வழிபடுவாயாயின் மேலும் பிறவியில்லை. பேரின்பப் பெருவாழ்வு அடைவாய் என வலியுறுத்துகிறது. மனிதன் நன்னெறியில் வாழ, ஔவையாா், வள்ளுவா், நாலடியாா், நாயன்மாா்கள் நால்வா், இராமகிருஷ்ணா், நாவலா், விவேகானந்தா் முதலானோா் சமயவாழ்வு வாழ்ந்து காட்டியுள்ளனா்.

"சிவாயநம" எனச் சிந்தித்திரு, பஞ்சமா பாதகங்களைத் தவிா்"
"கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழு"
"சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்திபெறவே"
"மனிதப்பிறவி இனித்தமுடைய இறைவன் நடனம் காண்பது"

இவ்வாறு நல்லபல உபதேசங்களைத் தந்திருக்கிறாா்கள்.

"நின்றான் இருந்தான் தன் கேளறல சென்றான் எனப்படுவதால்
இன்னினியே செய்க அறிவினை" என நாலடியாா் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்படியாயின் அறிவினைகள் யாவை?**

தாய் தந்தையரை வணங்கு. பசித்தோர்க்கு அன்னமிடு. ஏழைகட்கு தருமஞ் செய், பசுவுக்கு வாயுறை, ஊர் நடுவே கிணறு- குளம் தோண்டு, ஏழைகளுக்கு வாழ வழிசெய், வறிய மாணவர்க்கு கல்வி வசதிசெய், கன்னியர் கரைசேர வழிசெய், விதவைகள் வாழ வழிகாட்டு, சாலையோரங்களில் நிழல்தரு மரங்கள் நாட்டு, ஆதுலர்க்குச் சாலை அமை. இவை மட்டுமில்லை இன்னும் பலவுள. "அறஞ்செய விரும்பு" எனப்படித்தும் கேட்டுமிருக்கின்றோம். இந்த அறிவுரைகள், அறவுரைகள் யாவும் நினைவில் இல்லை.

**இப்பொழுது மனிதன் எதை விரும்புகிறான்?**

மாடு, வீடு, மனைவி, மக்கள், காணும் உலகில் களியாட்டங்கள், விருந்துகள், பணம், ஓய்வு இல்லாத வேலை, மற்றவனிலும் பார்க்க எல்லா வகையாலும் தான் மிஞ்சவேண்டும் என்ற ஆசையினால் பிழையான வழிகளை நாடுகிறான். வயது ஏறுகிறது; கவலை- நோய் வாட்டுகிறது; கடவுள் என்ற நினைவு வருகிறது. நான் யார்? என் உள்ளம் யார்? எங்கிருந்து வந்தேன்? நான் போகும் இடம் எது? இப்போதுதான் மனிதன் தான் பிறந்த நோக்கம் யாது என ஆராய்கிறான். நான் பிறந்தேன்; வளர்ந்தேன்; வாழ்நாளில் என்ன செய்தேன்? காணும் உலகில் களியாட்டம், வாய்க்கு உருசியான உணவை உண்டேனே தவிர பசித்தோர்க்கு உணவு தரவில்லையே. அயலான் படுந்துன்பங்கண்டு இரங்கினேனா? என் உடலை வளர்ப்பதற்காக வாயில்லா ஜீவன்களைக் கொன்று ஊனைப் புசித்தேனே. ஆசையால் தகாத வழியில் பணம்தேடி வங்கியில் போட்டேனே. எந்தவிதமான தான தருமங்களையும் செய்யவில்லையே. மனையாள்மீது கொண்ட மோகத்தால் பெற்று வளர்த்த தாய், தந்தை, சகோதரங்களை நிந்தித்திருப்பேன். மனைவி மக்களின் எதிர்காலத்திற்கு என்ன செய்து வைத்தேன்? ஒருவன் செய்த நல்ல காரியங்களால் உலகோர் மத்தியில் "இவன் வாழ்ந்தவன்" என்று புகழக்கூடியதாக பேசப்படவேண்டும். "காலம் பொன்போன்றது" தான் விட்ட தவறுகளை எண்ணிப் பார்க்கின்றான். இப்போது அவனுக்குண்டாகியது சுடலை ஞானம். பட்டினத்தடிகள் சொன்னது ஞாபகத்தில் வருகிறது.

"நல்லாரிணக்கமும் நின்பூசை நேயமும் ஞானமும்
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும் பொருளும்
இல்லாளும், சுற்றமும், மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே"

தன் மனதை விழித்துச் சொல்கிறார்,

"பொய்யை யொழியாய்; புலாலை விடாய்; காளத்தி
யையரை யெண்ணாய்; அறஞ்செய்யாய்; - வெய்ய
சினமே யொழியாய்; திருவைந்தெழுத்தை யோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொல்லாதவன், நெறிநில்லாதவன் ஐம்புலன்களை
வெல்லாதவன், கல்விகல்லாதவன் மெய்யடியார்பால்
செல்லாதவன், உண்மை சொல்லாதவன் நின்திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன்பிறந்தேன்?"

"கல்லார் சிவகதை நல்லோர் தமக்கு கனவிலும் மெய்
சொல்லாதவர் பசித்தவர் கன்னம் கொடார் குரு சொன்னபடி
நில்லார்; அறத்தை நினையார் நின்நாமம் நினைவில் சற்றும்
இல்லார் இருந்தென்ன இறந்தென்ன?"

இனியாவது நல்ல காரியம் செய்வோம் என எண்ணுகிறான். ஆனால்,

"நிலையில்லா உலகில் நின்றனவெல்லாம் சென்றன சென்றன
எனும்படியாக வந்தது வந்தது கூற்று" ஒன்பது வாசலும் ஒக்க அடைக்கின்றன. உடல் இருக்கிறது; உயிர் புண்ணிய பாவங்களையும் கட்டிக் கொண்டு இன்னோர் பிறவியைநோக்கிச் செல்கிறது.

## வாசகர் உள்ளத்திலிருந்து......

## மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை

அன்றைய ஆச்சிரமத்தினை இன்றைய காலவோட்டத்திற்கமைவாக தேவையுணர்ந்து பல்வகைப் பணிகளாக பலன்நோக்காது ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமப்பணி "வாழ்க வளமுடன்". அன்றாடம் புதுப்புது சிந்தனை, சிந்தனைவழி செயற்பாடு, செயற்பாட்டின்வழி சமுதாய உயர்வு கண்டு வியக்கின்றேன். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை எனக்கொண்டு செய்யத்தக்கன செய்து மக்கள் வாழ்வை வளப்படுத்தும் அரிய பணி கண்டு பணிந்து போற்றுகின்றேன்.

ஆச்சிரம வெளியீடான "ஞானச்சுடர்" சைவ சமயத்தவர்கட்கு ஒரு அரிய பொக்கிஷமாகும். வேண்டிய வேண்டியாங்கு அறியத்தக்கதாக- பல்வேறு தரத்தினரும் படித்துப் பக்குவம்பெற, சமயவாழ்வு வாழ சிறந்த நல்ல விடயங்கள், பொருத்தமான நடை, தெளிவான அச்சுப்பதிப்பு, மலிவான விலை என்பன வழிவகுப்பதுடன் ஞானச்சுடரின் பாதையைச் செம்மைப்படுத்தி உரிய நோக்கையடைய வழிசமைக்கிறது.

ஆலயச் சூழலில் வயிற்றுக்கு ருசி மிக்க உணவு படைப்பது மட்டுமன்றி, "ஞானச்சுடர்" படைத்து அறிவுப்பசி தீர்ப்பதுவும் சந்நிதியானின் தெய்வீக அருளன்றோ. "ஞானச்சுடர்" என்றும் சமுதாயத்திற்கு சுடர் பரப்பி ஒளிகொடுக்க சந்நிதியான் என்றும் அருள் பாலிப்பாராக.

நன்றி

திருமதி ர. சோதிலிங்கம்,
கொழும்பு- 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமூக அமைப்பு

திரு சு. இலங்கநாயகம் அவர்கள்

சமூக வாழ்வில் அரசியல் முறைகள், விஞ்ஞானக் கொள்கைகள், வியாபார நடவடிக்கைகள், பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு உற்பத்தி முறைகள், கலை, கலாசார சமய பண்பாடுகள் எனப் பல்வேறு பிரிவுகள் அடங்கியுள்ளன. சமுதாயத்தில் பல பிரிவுகளாக அல்லது குழுவாகச் செயற்படுவதனால் அந்தச் சமூகம் முழுவதும் முன்னேறுவதற்கும்சரி, ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கும் சரி இந்தக் குழுமுறை அல்லது பிரிவுகள் நன்மை பயக்கின்றது எனலாம். இவை யாவும் காலத்திற்குக் காலம் பலவித மாறுபாடுகள் அல்லது மாற்றங்களுக்கு ஆளாகிக் கொண்டிருப்பனவாகும். நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற லட்சிய நோக்குடன், அனைவரும் தத்தமது தொழில்முறையையும், உற்பத்தியையும், சேவையையும் சமுதாயத்துக்கு அளித்து வந்தால் சமுதாயம் முன்னேற வழி வகுக்கும்.

பண்டைய காலத்தில் சமுதாய அமைப்பு முறையில் வழிபாடு, சமயம், ஆத்மீகம் ஆகியன பேணி வளர்ப்பவர்கள் பிராமணர் என்றும், ஆட்சிமுறை, அரசியல் போன்றவற்றை மேற்கொள்வோர் சத்திரியர் என்றும், வர்த்தகத்துறை, பண்டமாற்று, வியாபாரம் ஆகியவை மேற்கொள்வோர் வைசிகர் என்றும், விவசாயம், உற்பத்தி, சேவைத்தொழில் ஆகியன மேற்கொள்வோர் சூத்திரர் என நான்கு பெரும் பிரிவாகப் பகுத்து, சமுதாயத்திற்கு வேண்டிய சகலதையும் செய்து வந்தனர்.

சமுதாய வேறுபாடு, சாதிவேறுபாடு, மூடநம்பிக்கை போன்றவற்றை சமுதாயத்திலிருந்து விரட்ட வேண்டும் என்று அரும்பாடு பட்ட மகாத்மா காந்தி அடிகளும் வருணாச்சிரம தர்மத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். "My varnashrama dharma" "எனது வருணாச்சிரம தர்மம்" என்று ஒரு பெரிய கட்டுரையை எழுதியுள்ளார். இந்த வருணாச்சிரம தர்மம் மனிதனுக்குத் தானாகவே சுயமாக ஏற்பட்டது. அது இயல்பானது. ஒருத்தருக்குப் பிறப்பாலேயே அமைந்த விடயம் அது. மிருகங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு இனத்துக்கும், ஒவ்வொரு குழுவுக்கும் இயல்பான தன்மை உண்டு. சிங்கம், புலி போன்ற மாமிச பட்சினிகளுக்கு மூர்க்கம், சுறுதி, பாய்ந்து பிடிக்கும் ஆற்றல் ஆகியன உண்டு. குதிரை, பசு போன்ற தாவர பட்சினிகளுக்கு சாந்தம், அமைதி போன்ற பணிவான குணங்கள் உண்டு. பசுக்கன்று சிங்கக் குட்டிபோல் மாற்றம் அடையமுடியாது. அவற்றின் இயல்பான குணத்திற்கு இணங்க செயற்படும்.

அதுபோல், வருணாச்சிரமம் என்பது பாரம்பரிய இயல்பு அல்லது குணம் எனலாம். இது பிறப்பால் அமைந்த விடயம். பழைய கால அரசர்களிடம் உள்ள யுத்தத்திறமை அவர்களின் பிள்ளைகளிடம் காணப்பட்டது. அருச்சுனனின் வில்வித்தையைக் காட்டிலும் அபிமன்யு சிறந்து காணப்பட்டான். இதனைத் தற்கால விஞ்ஞானம் ஏற்று பாரம்பரிய இரத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு (Genetic) என்கிறது. இந்த இயற்கை விதியை இந்துமதம் ஒரு விஞ்ஞான ரீதியான அஸ்திரமாக ஒழுங்கு பண்ணித்தந்திருக்கிறது. இது சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கக்கூடிய கடமைகளைக் கட்டுப்படுத்தித் தருகிறது. இதனால் ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்ற மனப்பாங்கை இந்துமதம் படைக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டு வாழவும், சமுதாய தொழிற்சிறப்பு (Specialization) சக்தியை விரயமாக்காது சிக்கனமாகவும், திறம்படவும் காக்கவே, வருணாச்சிரம தர்மம் உள்ளது.

ஒருவனுடைய பிறப்பை அடிப்படையாக வைத்து தொழில்களைப் பிரித்து அதன்மூலம் தொழிற்தேர்ச்சி பெற்று, தொழில்கள் சிறந்து விளங்கும் வகையில் சமூக அமைப்பு உள்ளது. இதனைச் சிலர் தமது குறுகிய நோக்கத்தால், சாதிப்பிரிவு என்றும், தீண்டாமை என்றும் மக்களிடையே பிழையான கருத்துக்களைப் பரப்பி தாம் சமுதாய சீர்திருத்த வாதிகள் என்றும், பொதுவுடமை வாதி என்றும் சொல்லி கட்சிகள் அமைத்துக் கொண்டும் பாமர மக்களை ஏமாற்றி, தமது அரசியல் இலாபத்திற்காக சமூக அமைப்பு முறைக்கு பிழையான விளக்கமும், வழிகாட்டலும் கொடுத்துள்ளனர். ஆனால் சமூக அமைப்புமுறை சாதிப் பிரிவினையை ஏற்கவில்லை. ஒவ்வொரு தொழில் புரிபவனும் உயர்ந்தவனாக மதிக்கப்பட்டான். இராமகிருஷ்ண பரமஹம்சர் தோட்டி வேலை செய்பவர்கள் (மலசலகூடம் துப்பரவு செய்வோர்) உயர்ந்தவர்கள் என்பதனைக் காட்டுவதற்காக, தானே சேரிப்புறங்கள் சென்று மலசலகூடங்களைத் துப்பரவு செய்தார்.

தற்போதய சமுதாயத்தில் கலப்புத் திருமணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சமுதாயப் பண்புகள் மாற்றம் காணத் தொடங்கியுள்ளது. வருணாச்சிரம தர்மப் படியான தொழிற் பங்கீடுகள், தொழிற் சிறப்புக்கள் மாற்றம் அடைந்துள்ளன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக நவீன யந்திரமய தொழிற்சாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன. எந்தவித மாற்றங்கள் ஏற்படினும் இயற்கை, இறைவன், சமயம் என்ற கோட்பாடு இருக்கவே செய்யும். அது நிலையானது. சமய வழிபாட்டு முறைகள் மாற்றம் அடையா. இவற்றைப் பேணிப்பாதுகாத்து வளர்க்க வேண்டும். எனவே, வேதம் என்று ஒன்று இருக்கவேண்டும். சிலராவது வேதக் கடமைகளை வளர்க்கவேண்டும். இது ஒன்று இருந்தால் மற்றவர்களில் ஏற்படும் குளறுபடிகளால் உண்டாகும் தோஷம் நிவர்த்தியாக வழிவகுக்கும்.

காந்தியடிகள் குடிசைத் தொழிலை வளர்ப்பதன்மூலம் கிராமிய பொருளாதாரத்தை வளர்க்கலாம் என்றார். ஆடம்பர வாழ்க்கை கூடாதென்றும், வாழ்க்கை எளிமையாக அமையவேண்டும் என்று பிரசாரம் செய்தார். ஆனால் அறிவு விருத்தி விஞ்ஞானவளர்ச்சி, இயந்திரமயமாக்கல் போன்ற மாற்றங்களால் ஆலைத்தொழில், ஆடம்பரப்பொருள் உற்பத்தி, சொகுசு வாழ்க்கை முறைகள் வந்ததும் பாரம்பரிய கைத்தொழில் முறைகள் நலிவடையத் தொடங்கியுள்ளன.

ஒரு நாட்டில் பல இன, மொழி, சமய மக்கள் வாழுகின்றனர். ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கிடையே மொழிச்சண்டை, சமயச்சண்டைகள் ஏற்படுகின்றன. எனவே, எல்லோரையும், ஒருசமயம், ஒருமொழி, ஒரு இன மக்களாக மாற்றமுடியாது. எனவே அவர்களுக்கிடையே அன்பு, சகோதரத்துவம் ஒழுக்கம் பண்பு ஆகியவற்றை அறிவு பூர்வமாக ஏற்படுத்தி, ஒற்றுமையாக வாழ வழி செய்ய வேண்டும். இது போலவே தொழிற்பிரிப்பு முறைமை, மக்கள்குழுமம், வருணாச்சிரமதர்ம முறை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரும் ஒன்றுகூடி, ஒரு குலமாக சகோதரத்துவ மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய சமுதாயம் தமது வாழ்க்கை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பழைய சமூகத்தினர் பணத்தின் நினைவாக இல்லாது கடமையின் நினைவாக மட்டும் இருந்தார்கள். பணம் பதவிகளை நோக்கும் போது அதிக பணம் உள்ளவன், உயர்பதவி வகிப்பவன் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணும் மனப்பாங்கு மக்களிடம் ஏற்படுவதன் மூலம் அவர்களிடம் பொறாமை ஏற்பட்டு, பூசல்களும் (class confliet) ஏற்படச் செய்கிறது.

எனவே, இவ்வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாது, நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள், நாமாகவே பிறவி எடுக்க வில்லை. இறைவன் எம்மைப் படைத்துள் ளான். நாம் எல்லோரும் இந்த நாட்டு மன்னர் கள் என்ற மனோபாவத்துடன் அன்போடு, ஐக்கியத்தோடு, விசுவாசத்தோடு, சுகத்துடன் பரஸ்பரம் உதவி செய்து கொண்டு சாந்தியும் சமாதானத்துடனும் வாழ்ந்தால், சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் என்பது திண்ணம். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க வளமுடன்.

## ஊர்ப் பழிக்கு அஞ்சாதவன்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்
[குறள்]

பழித்தல், பழிச்சொல்லுக்கு ஆளாகுதல் என்பது மனித சமூகத்தில் படித்தோர் முதல் பாமர மக்கள்வரை எல்லோர் கவனத்திற்கும் உரிய இந்தப் பழியானது பெரிதும் பஞ்சமா பாதகங்களால் பெரிதும் ஏற்படுகின்றது. கொலை, களவு, காமம், சூது, கள்ளுண்ணல் எனும் பாவங்களால் மக்கள் பழிக்கு ஆளாகின்றார்கள். எனவேதான் இந்தப் பஞ்சசீலக் கொள்கையை உலகில் உள்ள எல்லா மதங்களும் பெரிதாகப் போற்றி மக்களை இப்பாவங்களால் பழியேற்படாமல் வாழ அறிவுறுத்துவதைக் காணலாம்.

இன்றைய காலத்திற் பெரும்பாலும் பணம், பதவி, பட்டம், புகழ், ஆசை இவற்றாலேதான் மக்கள் பழிக்கு ஆளாவதைக் காணமுடிகின்றது. இவற்றால் ஏற்படும் சுயநலப் போக்குகள் பழி பல செய்யத் தூண்டுகின்றன.

ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை
[குறள்]

வள்ளுவப் பெருந்தகையார் மிக அழகாகவும் சிறப்பாகவும் சான்றோர் பழிப்பதைச் செய்யற்க எனக் கூறுகின்றார். உலகியல் வாழ்வில் நாம் எவ்வளவுதான் பணம், பதவி, பட்டம், புகழ் பெற்றிருந்தாலும் பிறர் பழிக்கும்படியான பழிச் செயல்களுக்கு ஆளானால் அது எம்மைத் தாழ்த்திக் கீழ்நிலைப்படுத்திவிடும். எனவே ஊர்ப்பழிக்கு ஆளாகாமல் உலகில் வாழ முயல்வோம்.

-நீர்வை மணி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தொண்டர்சீர் பரவும் சிவநெறிக் கலாநிதி, கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்களின் 88ஆவது அகவை நிறைவும் திருப்பணிச் சிந்தனைவளமும்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்



மனிதகுல வரலாறு மிகமிக நீண்டது. தோன்றியவை அழிவன என்பது இயற்கையின் உண்மை நியதி. ஆயினும் சிற்சில ஞானச் செல்வர்களினதும், தோன்றல்களினதும், பெற்கருஞ் செயல்களைப் புரிந்த பெரியார்களினதும் திருநாமம் - நீடுபுகழ் - எச்சம், என்றென்றும் அழியாதவை. அதிலும் ஆன்மீகப்பணிகளும், அறப்பணிகளும், திருப்பணிகளும், ஞானவிளக்கங்களும் புரிந்த அருளாளர்களும், தொண்டர்களும், புண்ணிய சீலர்களும், மகான்களும் வரலாற்றிலும் மக்கள் நினைவிலும் நெஞ்சங்களிலும், நிலைபெறு கொள்வரென்பது பிரத்தியட்சம், உண்மை. இத்தகு தகைமையும், தன்னிறைவும், பெருமையும், புகழும் கொண்டு எம்மத்தியில் வாழ்ந்து வரும் பெரியார் சிவநெறிக் கலாநிதி, கலாபூஷணம் தொண்டர்க்குத் தொண்டன் தம்பு துரைராசா "அவர்கள்.

திருமுறைகளில் விருப்பமானவர் தொண்டர்களை நேசிப்பதற்கும் தனித்துவ இயல்பு கைவரப்பெற்றவர். ஆன்மிக 'ஞானத்தெளிவு' சித்திக்க வேண்டும். பூர்வ புண்ணியப் பேற்றின் பயனாக ஈச்சமோட்டையில் வசித்த காலத்திலே திருவாசகப் பெருநூல் திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளது தொடர்பு ஏற்பட்டது. 'மழுவாதனிதி' என்ற வகையிலே திருவாசகத்தையே இல்லமாகவும், இதயமாகவும் கொண்டு வாழ்கின்ற ஓர் அற்புதமான உத்தம மனிதர் தம்பு துரைராசா. திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளே துரைராசா அவர்களின் பேச்சும் மூச்சும். ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் திருநாமத்தால் தொண்டர் சபை அமைத்து அதற்குத் 'திருப்பணித் தவமணி' மகா சிவாகரராசா அவர்களைத் தலைவராக்கி ( இராமனுக்கு அமைந்த அநுமனைத் தொண்டனாக்கிக் கொண்டு) அனைத்து நற்பணிகளையும் முழுமூச்சுடன் முன்னெடுப்பவர் தேனியின் முயற்சியும் எறும்பின் சுறுசுறுப்பும் இவரிடம் தோற்றுவிடும் காட்சிக்கு எளியராயும் கருத்துவதில் வல்லவராயும் எடுத்த காரியத்தை இனிதே நிறைவேற்றி முடிக்கும் திண்மை மிக்கவர்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

என்ற அருமை மிகு பாடல் திரு. தம்பு துரைராசாவை எண்ணியே எழுதியதோ என்னவோ! என்று சிந்திக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை,

"அருமையுடைத்து என்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"(குறள் 611)

(பொருள்): ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன், இச்செயல் செய்வதற்குக் கடுமையானது. என்று எண்ணிச் சோர்வு அடையாதிருத்தல் வேண்டும். அச்செயலுக்கான முயற்சி பெருமையைக் கொடுக்கும். என்னும் திருக்குறளின் இலக்கியம் என்றும் கூறலாம்.

தொண்டன் துரைராசா பெரியார் வயதின் முதுமையை வென்று இளமை உணர்வோடு வாழ்ந்து காட்டுபவர். இவரது வாழ்வும் பணிகளும் அற்புதமானவை, மதிப்புமிக்கவை. தனது முதுமை வயது குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளாது.

திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளது பெரும் புகழையும், பெருமையையும் உளகளாவிய ரீதியில் பரப்பும் பணியினைத் தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அயராது செயற்படுபவர். சுவாமிகளின் குருபூசை விழாக்களை ஒழுங்கு செய்து தவறாது. ஈடுபாட்டுடன், நடத்துபவர். மாணிக்கவாசக சுவாமிகளின் திருவுருவ ஊர்வல நிகழ்வும் நிகழ்த்துவார். ஆண்டுதோறும் திருவாசக முற்றோதல் நிகழ்வுகளைத் தனது 'திருவாசகம்' இல்லத்திலே நடத்தி அடியார்களனைவருக்கும் அன்னதானமும், திருவாசகம் பற்றிய ஞான விளக்கச் சொற்பொழிவினையும் நடத்துவிப்பவர். அத்தகு ஆர்வமும் ஈடுபாடும் காரணமாக நல்ல சிந்தனைகளைத் தாங்கிய நூல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ள இவர் அண்மையில் "ஈழத்துச்சிவாலயங்கள்" பற்றிய அரியதோர் தொகுப்பு நூல் ஒன்றையும் சிறப்பாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

தொண்டர் துரைராசா அவர்களின் சமய, சமூக கலைச்சேவைகளைப் பாராட்டிச் சர்வதேச இந்துமத குருபீடம் 8.8.2008 "சிவநெறிக்கலாநிதி" என்னும் சிறப்புப் பட்டமளித்தும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்துள்ளது. 2009 டிசம்பர் 15 ஆம் திகதி இந்து கலாசார அமைச்சினால் "கலாபூஷணம்" விருது வழங்கப்பட்டது.

சிவநெறிக் கலாநிதி துரைராசா யாழ்ப்பாணம் பொன்னாலையைப்பிறப்பிடமாகவும், யாழ். சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்டவர். தற்போது 1992ற்குப்பின் பம்பலப்பிட்டியில் குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறார் 1924இல் பிறந்து சிறுவயதிலே கொழும்புத்துறை இந்துப்பாடசாலையிலே கல்விகற்றுப்பின்னர். ஸ்ரான்லி அரசினர் பாடசாலையிலே படித்து J.S.C சித்தி பெற்று சிரேஷ்ட தராதரப்பத்திரம் பரீட்சைக்குத் தோற்றினார். 1944ஆம் ஆண்டு மதுவரிக் காவலராக இத்திணைக்களத்தில் தனது அரச பணியை ஆரம்பித்த த. துரைராசா அவர்கள் தனது திணைக்களத்தில் வல்லமையையும் வெளிப்படுத்தி 1978இல் மதுவரி சார்ஜன் என்னும் பதவி உயர்வைப் பெற்றுள்ளார். நாற்பது நல்விருதுகளையும் மிக அரிதான மூன்று தங்கப்பட்டிகளையும் அதற்கென வழங்கப்படும் கௌரவக் கொடுப்பனவையும் பெற்றுள்ளார். இத்திணைக்களத்தில் மதுபாவனை, புகைத்தல் போன்ற கெட்ட- தீய பழக்கங்கள் அற்று வாழ்ந்த ஒரு சிலருள் இவரும் ஒருவர் என்று கூறின் அது மிகையில்லை.

மனிதாபிமானமும், ஜீவகாருண்யமும், துன்புறுவோருக்குத் தொண்டு செய்தும் துன்புறாதவர் தொண்டர் துரைராசா. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவர் தனிப்பட்டமுறையிலே செய்த உதவிகள் பலவாகும். இரு தடவைகள் இலண்டனில் தன் மகன் மூலம் பெருந் தொகையான துணிவகைகளை எடுப்பித்துக் கொழும்பு சாரதா சிறுவர் இல்லம் திருமலை சிவானந்த தபோவன இல்லம், இரத்மலானை சிறுவர் இல்லம், மட்டக்களப்பு சுனாமி அகதிகள் நிலையங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றுக்கு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் மூலம் வழங்கினார். வீரகேசரி நிறுவனம் சேகரித்த சுனாமி நிதிக்குத் தனது ஒரு மாத ஓய்வூதியத்தை அப்படியே முழுமையாக வழங்கினார்.

உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன், கலாபூஷணம் வித்துவான் வசந்தா வைத்திய நாதன், இந்துத் திணைக்களப் பணிப்பாளர்கள், தமிழருவி சிவகுமாரன், சுவாமிதந்திரதேவா, சுவாமி ஆத்மகனானந்தா, கலாநிதி நாகேஸ்வரன் இன்னும் சிலரைக் கொண்டு சமயச் சொற்பொழிவினை நிகழ்த்துவித்தார். 60வது திருமண சஷ்டியப்த பூர்த்தி விழா 2008 இல் கொண்டாடப்பட்ட போது இவரது பிள்ளைகள் சிறப்பு மலர் ஒன்று வெளியிட்டார்கள். அம்மலரிலே பல பெரியோர்களின் வாழ்த்துரைகள் இடம்பெற்றுள்ளன. காசிப்பிள்ளை சுவாமி என அழைக்கப்பட்ட கலாநிதி ஸ்ரீ சதானந்த சரஸ்வதி யோகாசன யோகியிடம் யோகக்கலை பயின்றவர். இப்போதும் தினமும் லேசான யோகாசனம் செய்து வருகிறார். தினமும் காலையில் 40 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்கிறார்.

2008 இல் தமது துணைவியாருடன் இந்தியத்திருத்தலயாத்திரைச் சுற்றுலா சென்று 80க்கு மேற்பட்ட திருத்தலங்களையும் தரிசித்து வரத்திருவருள் கிட்டியது. திருவாசகசுவாமிகளின் குருபூசையிலே கல்விமான்களால் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் பெற்றார். இருமுறை U.k யில் உள்ள பிள்ளைகளிடம் சென்று வந்தார்.

சென்ற வருடம் திருக்கேதீச்சரம் ஆலய பரிபாலனசபை கொடுத்த சிறுகாணித்துண்டில் திருவாசக சுவாமிகளின் பெயரில் இந்து கலாசார மண்டபம் அமைக்கத் தொண்டர் சபை முன் வந்து கட்டிட நிர்மாண வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சபைத்தலைவர் உட்பட சபையின் நிர்வாக உறுப்பினர்களுடன் செயலாளர் துரைராசா கட்டிட நிர்மாண வேலைகளுக்கு நிதி சேர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். இத்திருப்பணிக்கு நிதிஉதவி வழங்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

*திரு த. துரைராசா,*
*31A, ஞானகிலேன்,*
*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு -04*
*தொலைபேசி: 011- 4852232*

## பத்திரிகையும் பக்திப் பாடலும்

பத்திரிகைகளைக் காலையில் எழுந்தவுடன் விழுந்து விழுந்து படிக்கின்றோம். நம்முடைய ஆன்மா கடைத்தேறத்தக்க பயனுள்ள செய்திகள் எவையேனும் இன்றைய பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றனவா? கொலை, கொள்ளை, கற்பழிப்பு எனப் பஞ்சமா பாதகங்களைப் பற்றிய செய்திகள் தானே மிக விரிவாகப் படங்களுடன் விளக்கப்படுகின்றன. அத்தகைய பத்திரிகைகளைப் படிப்பதில் நாம் காட்டுகின்ற ஆர்வத்தைப் பக்தி இலக்கியங்களைப் படிப்பதில் காட்டுகின்றோமா? பத்திரிகைகளைப் படியுங்கள். நான் வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் தினமும் காலையில் எழுந்தவுடன் தேவாரத் திருவாசகங்களில் ஒரு சில பாடல்களையாவது படித்துவிட்டுப் பிறகு நீங்கள் விரும்பும் எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் படியுங்கள்.

-சைவ நற்சிந்தனை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருநாகேஸ்வரம் (இராகு ஸ்தலம்) அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

மனிதன் மன அமைதி பெற்று மேன்மையுற ஆன்றோர் அமைத்த அருள் நிலையங்களே ஆலயங்களாகும். நாம் வாழும் வீட்டைச் சிறுகக்கட்டிப் பெருவாழ்வு வாழ்ந்த நம் முன்னோர், அளப்பரிய பெருங்கோயில்களை நிறுவி ஆண்டவனை வணங்கினர். ஆங்காங்கே இவ்வாறுள்ள பல ஸ்தலங்களிலும், பரம்பொருள், உருவத் திருமேனி தாங்கி வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் அளித்து வருகிறான். புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமானை உள்ளன்போடு வழிபட்டுவரின் அடியார்களின் உள்ளமும் அருட்கோயிலாகி இறைமணம் கமழும். இதனையே "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்" என்றார் திருநாவுக்கரசர். இதனையே திருமூலரின் திருமந்திரம் இவ்வாறு பேசுகிறது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்<br>
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்<br>
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்<br>
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

-திருமந்திரம் 1823-

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்கு கிழக்கே 6 கி.மீ தூரத்தில் திருநாகேஸ்வரம் அமைந்துள்ளதால், கும்பகோணத்திலிருந்து நினைத்த நேரமெல்லாம் பேருந்து வசதியுண்டு. நாக அரசனாகிய இராகு பூசித்தமையால் இத்தலத்திற்கு நாகேஸ்வரம் எனப் பெயர் வந்தது. திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கியபடி ராகு பகவான் எழுந்தருளியுள்ளார். இங்கே ராகுபகவான் ஸ்ரீநாக நாதசுவாமியை வழிபட்டதோடு, தன்னை நாடிவந்து வழிபடும் அன்பர்களுக்கு பல நலன்களையும் அளித்தருளும் வரப்பிரசாதியாகவும் திகழ்கிறார். இராமேஸ்வரம் காளஹஸ்தி போன்ற இடங்களிலும் இராகுபகவான் பெருமானைக் குறித்துத் தவமிருந்தாராக இருந்தபோதும், திருநாகேஸ்வரத்தில் மட்டுமே தனிக்கோயில்கொண்டு தம் தேவியர் இருவருடனும் அருள்பாலிப்பதை நாம் காண்கிறோம். இராகுபகவான் திருமேனியில் பாலபிஷேகம் செய்யும்போது திருமேனி நீல நிறமாக மாறுவதைத் தினமும் பல்லாயிரக்கணக்கானோர் கண்டு பரவசமடைகின்றனர். (விபரம் பின்னர்)

இறைவன்: நாகேஸ்வரர், நாகநாதர், சண்பகாரண்யேஸ்வரர்<br>
இறைவி: கிரிகுஜாம்பிகை, பிறையணிவாள் நுதல் அம்மை<br>
தலமரம்: சண்பகம்<br>
தீர்த்தம்: சூரிய தீர்த்தம்

கண்டராதித்த சோழனால் கருங்கற்றளிக் கோயில் கட்டப்பெற்று, பின்னர் சேக்கிழார் பெருமானால் உள் மண்டப கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று, பின்னரும் காலத்துக்குக் காலம் திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் நடந்தேறியுள்ளன. சுற்றிலும் சோலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ, கிழக்கு நோக்கி அமைந்த இத்திருக்கோயில் நாற்புறமும் கோபுரங்களும்- இரண்டு பிரகாரங்களும்- தேரோடும் வீதிகளுமாக விளங்குகிறது. ஐந்து நிலைகள் கொண்ட கிழக்கு நோக்கிய ராஜகோபுர வாசலினூடாக உள்ளே நுழைந்தால் நேராகக் கொடிமரத்து விநாயகரைத் தரிசிக்கிறோம். அப்படியே நின்றபடி நமது வலது கைப்புறம் திரும்பினால் நேரே (கோயில் வளாகத்து வடகிழக்கு மூலையில்) கிரிகுஜாம்பிகை அம்பாள் திருக்கோயில் தெரிகிறது. (விபரம் பின்னர் வரும்) நமது இடது கைப்பக்கம் திரும்பினால் (தென் கிழக்கு மூலையில்) சூரிய தீர்த்தக் குளம் திருத்தியமைக்கப்பட்ட நேர்த்தியான படிக்கட்டுக்களுடன் காணப்படுகிறது இத்திருக்குளம்.

குளத்துக்கும் கொடிமரத்து விநாயகருக்கும் சரிநடுவே மழுப்பொறுத்த விநாயகர் சந்நிதியும், மறுபுறமாக கொடிமரத்து விநாயகருக்கும் அம்பாள் சந்நிதிக்கும் நடுவே நூற்றுக்கால் மண்டபமும் காணப்படுகிறது. இந்த நூற்றுக்கால் மண்டபம் தேர்போன்ற வடிவில் அமைக்கப்பட்டு கல் சக்கரங்களுடன் காணப்படுகிறது. அடி வரிசையில் பரதநாட்டிய சிலை வடிவங்கள் காணப்படுகின்றன. கொடிமரத்து விநாயகரை அடுத்து கொடிமரத்தையும் நந்தியையும் பார்க்கிறோம். இந்த நந்தி- கொடிமரத்துக்கு நேராக குளத்தருகேயும் அம்பாள் திருக்கோயில் அருகேயுமாக சற்றுத் தள்ளி தென் கோபுரமும், வடக்குக் கோபுரமும் தெரிகிறது. இந்த தென் கோபுரத்து உட்புறமாக உள்ள நீண்ட பெருவீதிதான் கோயிலுக்கு வரும் வாகனங்களின் தரிப்பிடமுமாகும்.

உட்கோபுர வாசல்தாண்டி உள்ளே நுழைந்தால் இதுவே திறந்தபடியான வெளிப்பிரகாரம். இந்த வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையிலேயே இந்த ஸ்தலத்தின் சக்தி மிக்க ராகுபகவான் சந்நிதி காணப்படுகிறது. (விபரம் கீழே) இந்த பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளியும் வடகிழக்கு மூலையில் கோயில் நிர்வாக அலுவலகமும் கண்ணெதிரே தெரிகிறது. இரண்டு மூன்று படிக்கட்டுக்கள் மேலேறி நடந்தால் இடது கைப்புறமாக வருவது ராகுபகவானின் பாலாபிஷேகத்திற்கான பற்றுச்சீட்டு பெறுமிடம். வலது கைப்புறமாக பிரகார மதிற் சுவரோடு தெற்குப் பார்த்தபடி தெரிவதுதான் அலங்கார மண்டபம். நமது வழக்கப்படி இதுவே “வசந்த மண்டபம்.”

மீண்டும் இரண்டு அடுக்குக்கொண்ட கோபுரவாசல் தாண்டி உள்ளே சென்றால் இதுவே மூடிய உட்பிரகாரம். நமது இடது கைப்புறம் (தென்கிழக்கு மூலையில்) அதிகார நந்தியும் அருகே சேக்கிழார் சந்நிதியும் (சேக்கிழார் விபரம் பின்னர்), வலது கைப்புறம் (வடகிழக்கு மூலையில்) பள்ளியறையும் அருகே நடராஜர் சந்நிதியும் காணப்படுகிறது. ராஜகோபுரம் தாண்டி உள்ளே நுழைந்தது முதல் இதுவரை நேராக நடந்த வந்த நாம் இப்போது கருவறையின் முன் மண்டபத்தை அடைந்துவிட்டோம். இந்த முன் மண்டபமானது, கீழ்ப்பகுதி சிங்கமும் மேற்பகுதி தூண் வடிவிலுமாக அமைந்துள்ள, அழகிய சிற்ப வேலைப்பாடுள்ள பல தூண்கள் கொண்டதாகக் காணப்படுகிறது. சில தூண்களில் குதிரை வடிவச் சிற்பங்களும் காணப்படுகின்றன. இதுவே சேக்கிழார் பெருமானால் கட்டப்பட்ட மண்டபமாகும். மூலவர் நாகநாத சுவாமி அழகிய அலங்காரத்துடன் அருள் பாலிக்கிறார். சுவாமி கருவறையை நெருங்கியபடி சுற்றிவர ஐந்து தனிச் சந்நிதிகள் காணப்படுகின்றன. தட்சணாமூர்த்தி, ஆதிவிநாயகர், சோமஸ்கந்தர், சண்டிகேஸ்வரர், பிறையணி அம்மன் சந்நிதிகளே அவை. கருவறையைச் சுற்றி கோஷ்டமாக இல்லாமல் தனிச் சந்நிதிகளாக இருப்பது ஒரு வித்தியாசமான அம்சமாகும். மேற்குப் பிரகாரத்தில் சுப்பிரமணியர், இலக்குமி, சரஸ்வதி, பஞ்சலிங்கம் என வரிசையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதிகள் உண்டு. வட பிரகாரத்தில் தெற்குப் பார்த்தபடி 63 நாயன்மார்களும் ஒரே வரிசையில் அமர்ந்துள்ளனர். அப்படியே நடந்துவர, நடராஜர் சபையும், வடக்கு மூலையில் பள்ளியறையும் வருகிறது.

**திருநாகேஸ்வரமும் சேக்கிழாரும்:**

*திருநாகேஸ்வரம் திருக்கோயிலுக்கும் சேக்கிழார் பெருமானுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. சேக்கிழார் பெருமான் "ஞானம் பெற்ற ஸ்தலம்" இதுவே என்கின்றனர் விபரம் தெரிந்தவர்கள். கோயிலில் மொத்தம் 16 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோயிற் திருப்பணி ஆற்றியோரின் வரிசையில் கண்டராதித்த சோழன், சேக்கிழார், மெய்ப்பொருள் நாயனார் எனப் பல பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், கருவறைக்கு முன்பாக உள்ள சிங்கமுகத் தூண்கள் கொண்ட முன் மண்டபத்தை சேக்கிழாரே கட்டுவித்ததாகக் கல்வெட்டுக்கள் சில சிறப்பித்துக் கூறுகின்றன. இதைவிட, சேக்கிழார் தனது பிறந்த இடமான குன்றத்தூரில் ஒரு கோயிலை ஸ்தாபித்து, அதற்கு "நாகேஸ்வரம்" எனப் பெயரிட்டிருப்பது நாகநாதசுவாமி மீது இவர் கொண்டிருந்த அளவுகடந்த பக்தியினைக் காட்டி நிற்கிறது. (மேற்காணும் தகவல்கள் கோயிற் குறிப்பினில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது) இவை அனைத்திற்கும் சாட்சியாக இங்கே சேக்கிழார் சந்நிதியில், சேக்கிழார் திருவுருவுடன் அவரது தாயார் திருவுருவும் -உடன் பிறந்தவரான பாலறாவாயர் திருவுருவமும் சேர்ந்தே காணப்படுவது இங்கு மட்டுமே உள்ள சிறப்பம்சமாகும்.*

**அன்னை கிரிகுஜாம்பிகை சந்நிதி:**

*அம்பிகை சந்நிதி தனிக் கோயிலாக தெற்கு நோக்கியதாக உள்ளது. சந்நிதியின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றிலும் காணப்படுகின்ற பல சமண முனிவர்களின் சிலைகள், இத்திருத்தலம் ஒருகாலத்தில் சமணர் செல்வாக்குப் பெற்றிருந்தமையைக் காட்டுகிறது. கிரிகுஜாம்பிகை அம்பாள் பக்கத்தில் கலைமகளும் திருமகளும் அமர்ந்திருக்க, அனைத்து மக்களுக்கும் குலதெய்வமாக சர்வ சக்தியுடன் அம்பிகை அருள் பாலிக்கிறாள்.*

**இராகு சந்நிதி:**

*இராகுவானவர் யோகத்திற்கு அதிபதி. எனவே, ஒருவர் ஜாதகத்தில் இராகு நல்ல நிலையில் இருந்தால் விளையும் பலன்கள் மிக அதிகமாக இருக்கும். திருநாகேஸ்வரத்தில் வெளிப்பிரகாரத்துத் தென்மேற்கு மூலையில் இராகுபகவான் சந்நிதி தனிக்கோயிலாக சந்நிதியும்- சந்நிதியுடன் கூடிய நீண்ட முன் மண்டபமும் கொண்டதாக உள்ளது. மண்டபத்தின் இடப்பாதி உட்காரும் இடமாகவும், வலதுபாதி- மூன்று நீள் வரிசைகள் கொண்ட பகுதியாகவும் உள்ளது. (அந்நாளில் யாழ்- வெலிங்டன் தியேட்டரில் கலரி ரிக்கற் வாங்கிய கியூ வரிசையை ஞாபகத்திற் கொள்ளவும்) ராகுகால ஒன்றரை மணிநேரத்தில் 3 முறைக்கான பாலாபிஷேக சீட்டுக்கள் விற்பனையாகிறது. ராகுகால வேளை ஆரம்பிக்க பதினைந்து நிமிடங்கள் முன்னதாக வெளிப்புறக் கதவு திறந்து கொள்ள, நாம் ஏற்கனவே பெற்றிருந்த சீட்டினைக் கொடுத்து வரிசையினுள் நுழைகிறோம். வெளிவாசற் கதவு பூட்டப்படுகிறது. நெற்கம்பி போட்ட வரிசைக் கூட்டினில் உட்கார முடியாமல் நிற்கிறோம். இப்போது சந்நிதிக்கு அண்மையில் உள்ள உட்புறக்கதவு திறந்துகொள்ள, உள் நுழைந்து அடித்துப்பிடித்து இடம்தேடி சம்மணம் கொட்டி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்துவிடுகிறோம். ராகுகால வேளை ஆரம்பமாகிறது. இளம் பூசகர் ஒருவர் கையில் ஒலிவாங்கியுடன் தனது குட்டிச் சொற்பொழிவினை ஆரம்பிக்கிறார். ராகுகாலம்- ராகுகால நிவர்த்தி- இதற்காகக் கோயில் நிர்வாகம் செய்துள்ள ஒழுங்குகள்- பலன்கள் என்பன போன்ற பயனுள்ள பல விடயங்களையும் உரக்கச் சொல்கிறார். அதேவேளை சந்நிதியுள்ளே பாலாபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறுகிறது. சந்நிதிக்கு சரிநேராக- மிக அண்மையில்- தெளிவான பார்வைக்குரிய இடத்தில் யான் அமர்ந்திருந்து கண்வெட்டாமல் பார்த்தபடி இருந்தேன். பாலாபிஷேக வேளையின்போது ராகுபகவான் (கற்சிலை) உருவம் நீலநிறமாக மாறுகிறது என்று ஆண்டாண்டு காலமாக அனைவராலும் நம்பப்பட்டுவருகிறது. கூட்டல் கழித்தல் எதுவுமின்றி எனது பார்வையிற் பட்டதை அப்படியே தருகிறேன். எல்லாக் கோயில்களிலும் அபிஷேகம் நடைபெறும் வேளைகளில் சற்றுத்தூரமாக நின்று பார்த்திருப்பீர்கள். (அல்லது) பிரதோஷ வேளைகளில் நந்திக்கு நடைபெறும் அபிஷேகத்தினை மிக நெருக்கமாக நின்றபடி அவதானித்திருப்பீர்கள். குடம் குடமாக ஊற்றப்படும் பாலின் வெண்மை நிறமும், விக்கிரகத்தின் இயல்பான கருமை நிறமும் சேர்ந்து, (விக்கிரகத்தின் மீதான இடைவெளிகளில்) கருநீல நிறம்போன்ற தோற்றம் பெறுவதினை அடியேனால் அவதானிக்க முடிந்தது. அபிஷேகம் முடிவுற்றதும், அலங்காரம்- தீபாராதனை என அனைத்துமே மிக வேகமாக நடைபெற்று முடிகிறது. உள்ளே அமர்ந்திருப்பவர்களைவிட, மண்டபத்தின் வெளிப்புறங்களில் நின்றபடியே ராகுபகவானைத் தரிசிக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்களும் நடைபெறுகின்ற அபிஷேக ஆராதனைகளைப் பார்த்துப் பரவசமடைகின்றனர். மறுபக்கக் கதவு திறந்துகொள்ள உள்ளே அமர்ந்திருந்தவர்கள் இப்போது வெளியே வர விபூதி- பிரசாதம் உள்ளடங்கிய பையினைக் கைகளில் தந்து நம்மை ஆசீர்வதித்து வெளியே அனுப்புகிறார்கள். இரண்டாவது சுற்றுக்கான அடுத்த 200பேர் உள்ளே வர, மீண்டும் பாலாபிஷேகம் ஆரம்பமாகிறது. ராகுபகவானையும்- நாகநாதசுவாமியையும் மீண்டும் ஒருமுறை கைதொழுது நிரம்பிய மனத்தினராய் வெளியே வருகிறோம்.

-மீண்டும் சந்திப்போமா!-

"பொன்னேர் தரு மேனியனே புரியும்
மின்னேர் சடையாய் விரை காவரியின்
நன்னீர் வயல் நாகேச்சர நகரின்
மன்னே என வல்வினை மாய்ந்து அறுமே"

(சம்பந்தர்)

"நல்லர் நல்லதோர் நாகங்கொண்டு ஆட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஓடுகை யேந்திப் பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச் சரவரே"

(அப்பர்)

"பாலினது ஆருயிர்மேற் பரியாது பகைத்தெழுந்த
காலனை வீடுவித்துக் கருத்தாக்கியது என்னை கொலாம்
கோலமலர்க் குவளை கழுநீர் வயல்சூழ் கிடங்கில்
சேலொடு வாளைகள் பாய் திருநாகேச் சரத்தரனே"

(சுந்தரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

**04.11.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- பஞ்சமூர்த்தி குமரேஸ் அவர்கள்

வயலின் :- S. குகபரன்

கெஞ்சிரா :- இரா. சிவராமன்

மிருதங்கம் :- செல்வன் ச. ரவிவர்ணன் (அறிமுகம்)

---

**11.11.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மானிட வாழ்வியலின் மகத்துவம்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்

(இளை. ஆசிரியர்)

---

**18.11.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**25.11.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

(இளை. அதிபர்)

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்


(அதிபர்)

கார்த்திகை 167 ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org